
விபுலாநந்தத் தேன்



விபுலானந்தத் தேன்

விபுலாநந்த அடிகளாரின் கவிதை கட்டுரைத் தொகுதி

தொகுப்பாசிரியர் :
அருள் செல்வநாயகம்

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை 1.

முதற்பதிப்பு—நவம்பர், '56

இந்நூலை இலங்கைப் பாடசாலைகளில் சைவ சமயப்பாடபுத்தகமாக உபயோகிப்பதற்கு இலங்கைக் கல்வி நூல் பிரசுர சபையார் அனுமதித்துள்ளனர்; மேலும், தலைமை ஆசிரியர்கள் விரும்பும் எவ்வகுப்பிலும் இதனைக் கையாளலாமென்றும் புறநடை அளித்துள்ளனர்.

விலை ரூ. 2-8-0

முத்தமிழ் அச்சகம், காஞ்சிபுரம்.

பதிப்புரை

அருட்டிரு விபுலானந்த அடிகளார் பெயர் தமிழ்ப் பெருமக்களின் உள்ளமெலாம் நிறைந்த பெயர். அவர்கள் தம் வாழ்நாள் முழுவதையும் சமயப் பணிக்கும் மக்கள் பணிக்கும் தமிழ்ப் பணிக்குமே அர்ப்பணித்தவர்கள். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் அவர்கள் செய்த ஆராய்ச்சிகளும் எழுதிய கட்டுரைகளும் இயற்றிய பாடல்களும் மிகப்பல. அவற்றுள் ஒரு சிலவே நூல் வடிவம் பெற்றன. எஞ்சிய மிகப்பல, ஆங்காங்கே பல்வேறு இதழ்களிலும் மலர்களிலும் சிதறுண்டு கிடக்கின்றன. இவைகளை எல்லாம் தொகுத்து நூல்களாக்க வேண்டும் என்ற ஆசை எங்களுக்கு நீண்ட நாட்களாய் இருந்து வந்தது. எங்கள் எண்ணத்தைச் செயலாக மலரச் செய்தவர்கள் திரு. அருள் செல்வநாயகம் அவர்கள்.

அருள் செல்வநாயகம் அவர்கள் அடிகளார்பால் மிகுந்த அன்பு கொண்டவர்கள்; அடிகளாரின் தமிழ்த் தொண்டு நாடெங்குப் பரவவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் கொண்டவர்கள்; அதற்காக நாள்தோறும் ஓயாது உழைத்து வருபவர்கள். அவர்களது பேருழைப்பாலும் பெருமுயற்சியாலும் விபுலானந்தத்தேன் என்ற பெயருடன் இந்த முதல் தொகுதி வருகிறது. இதைத் தொடர்ந்து 'விபுலானந்த ஆராய்வுகள்' என்ற கட்டுரைத் தொகுதி ஒன்றும், கவிதைத் தொகுதி ஒன்றும், அடிகளார் எழுதிய வேறு பல நூல்களும் வெளிவர இருக்கின்றன.

அருள் செல்வநாயகம் அவர்களின் உழைப்பு விளக்காக, எங்கள் ஆர்வம் நெய்யாக, அடிகளாரின்

அருந்தமிழ் சுடராக எழுந்தது இந்த அருள் ஒளி வீசும் விபுலானந்தத்தேன் என்ற திருவிளக்கு. இந்த நல்ல பணியில் நாங்கள் ஈடுபடும் நல்வாய்ப்பை அளித்த திரு. அருள் செல்வநாயகம் அவர்களுக்கு எங்கள் நன்றி உரியது.

இந்நூல் அச்சாகும் பொழுது அச்சுப்பிழைகளைத் திருத்தியும் ஒப்பு நோக்கியும் நல்ல முறையில் வெளி வர உதவியவர்கள் மகாவித்துவான், சிந்தாமணிச் செல்வர், மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள். அவர்களுக்கு எங்கள் நன்றி உரியது.

சென்னை,
4-11-1956.

பாரி நிலையத்தார்

மதிப்புரை

அருட்டிரு விபுலாநந்த அடிகளாருடன் பிறந்த தமக்கையாரின் தலையாய புதல்வரான திருவாளர் பூ. சுந்தரம்பிள்ளை ஆசிரியரவர்கள் அளித்தது.

"கடல்வாய்ப்பட்டனவும் காலத்தின் மாறுதலினால் சிதைந்து அழிந்தனவுமான நூல்களைப்பற்றிப் பழமை பாராட்டுவதுடன் அமையாது, முன்னிருந்த கலைச்செல்வத்தை மீண்டும் பெறுவதற்கு முயல்வோம்," என்று தமது சலியாத உழைப்பினாலும், ஆராய்ச்சியினாலும், முத்தமிழ்ப் பெருங்காப்பியமான சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதையிலுள்ள இசை நுணுக்கங்களைத் தெளிவாக விளக்கி, **யாழ்நூலாம்** கலைச்செல்வத்தைத் தமிழுலகிற்களித்த பெருமை முத்தமிழ் வித்தகர் **அருட்டிரு. விபுலாநந்த அடிகளுக்கே** உரியதாகும்.

பெரும்பேராசிரியர் சாமிநாதையர் அவர்கள் சிலப்பதிகாரத்தை அச்சிட்டுத் தமிழுலகுக்களித்த 1892-ஆம் ஆண்டு கிழக்கு இலங்கையிலே பல்வளங்களும் நிரம்பப்பெற்ற காரை தீவில் பரம்பரையாக வாழ்ந்துவந்த வேளாளர் குலத்திலே அடிகளாரைத் தமிழ்த்தாய் தோற்றுவித்தது, தமிழ் மக்களின் பெரும்பேறுகும்.

மயில்வாகனனார் என்னும் குழந்தைப் பெயரைப் பெற்ற அடிகளார், தமது இளமைப்பருவத்தில் தெய்வ வழிபாட்டில் நம்பிக்கையும் சிரத்தையும் உண்டாக்கிய தம் தாயாரையும், கூடவே இருந்து பாடஞ்சொல்லிக்கொடுத்துப் படிக்கும் பழக்கத்தை வழக்கத்திற் கொண்டுவர உறுதுணையாயிருந்த தந்தையாரையும் பற்றி நேரமேற்படும் போதெல்லாம் நினைவு கூர்ந்து பேசத் தவறுவதில்லை.

தமிழ்ப்பணி புரிவதற்காக இல்லறத்தை வெறுத்துத் துறவறத்தை மேற்கொண்டு, கதிர்காமம் முதல் கைலாயம் வரை தமிழ் அன்னையின் புகழைப் பரப்பிய அடிகளாரின் துகளிலாத்தொண்டுகளை விரிக்கும் இந்நாலினைக் காணும் தமிழ்மக்களின் உள்ளங்களில் உவகை உண்டாகுமென்பதற்கையமின்று. அடிகளார்மேற் கொண்ட ஆழ்ந்த அன்பினுல் ஆசிரியர் அருள் செல்வநாயகம் இந்நூலினைக் கோவைப்படுத்தியுள்ளாரென்பது படிக்குந்தோறும் எவரும் எளிதிற் காணக்கூடியதாக இருக்கிறது. பழைய பிரதிகளையெல்லாம் தேடியெடுத்துக் கோவையாக்கிப் புதுப்பொலிவுடன் ஆசிரியர் 'விபுலாநந்தந்தேனை'க் கொண்டுவந்துள்ளார். அவரது இம்முயற்சி பெரிதும் பாராட்டப்படக்கூடியதொன்ருகும்.

ஒன்பதாவது வகுப்புச் சித்தியடைந்த பின்பு, தமது உழைப்பினுலும், படிக்க வேண்டுமென்ற ஆர்வ மிகுதியினுலும், மேற்படிப்புகளைத் தாமாகப் படித்து, பண்டிதர், விஞ்ஞான வித்தகர், பேராசிரியர், முத்தமிழ்ப் புலவர், அறிவுக்கொடைப் பெருவள்ளல் எனும் பெயர்களுக்குச் சிறப்பளித்த அடிகளாரின் வாழ்க்கை வரலாறும் எழுத்தோவியங்களும் கொண்ட இந்நூல், கல்வி கற்கும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாகவும் உற்சாகமூட்டுவதாகவும் இருக்குமாயின், இன்பம் பயக்கும் முறையில் நூலை வெளியிட்ட ஆசிரியர் எய்தும் பயனும் அதுவேயாகும்.

காரை தீவு,
மட்டக் களப்பு.

பூ. சுந்தரம் பிள்ளை,
ஆசிரியர்.

முன்னுரை

அறம் தழைத்து வளர்ந்தது தமிழகம். தமிழகத்தின் பாற்படுவதே ஈழவளநாடு. சுற்றிவரக் கடலாற் சூழப் பட்ட இத்தீவானது முன்னாளில் தமிழர்களின் உறை விடமாய்த் திகழ்ந்தது. காலவேறுபாட்டினால் ஈழநாடு முழுவதற்கும் சொந்தமான தமிழர்கள் வடக்கை யும் கிழக்கையும் தங்களது தாயகமாகக் கொண் டார்கள். ஆகவே, இன்று கிழக்கு இலங்கையும் வடக்கு இலங்கையும் தமிழ்மொழி வழங்கும் மாவட்டங்களாயின.

ஈழநாட்டுத் தமிழர்கள் தமிழ் மொழியைப் பேணிக் காப்பதில் என்றுமே பின்னின்றதில்லை. தமிழ் மொழியின் வளர்ச்சியினையே குறிக்கோளாகக் கொண்டு பல அறி ஞர்கள் உழைத்தார்கள். தமிழே தங்களது உயிர்நிலை யெனக்கொண்டு பல பெரியார்கள் பாடு பட்டார்கள். தமிழின் பெருமையினை உலகினுக்கு எடுத்துக் காட்டு வதையே பணியாகக் கொண்டு பலர் வாழ்ந்தனர். "தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா," என்னும் கவிஞரின் வாக்கை வேதவாக்காகக் கொண்டு பலர் தமிழினுக்காகத் தொண்டு செய்தனர். தமிழை வளர்த்துக் காப்பதே பிறவியெடுத்ததன் பயனென்று பலர் உழைத்தனர். இந்த அடிப்படையிலே பல பெரியார் கள் தோன்றிப் பணி செய்து அமர வாழ்வினை அடைந் துள்ளார்கள். இந்த வகையிலே அனைத்தையும் ஒருங்கே மேற்கொண்டு வாழ்ந்து பெருமையளித்தவர் **அருட்டிரு. விபுலாநந்த அடிகளாராவர்.**

'பணி செய்வதே என் கடன்,' என்ற மூதுரைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் அடிகளார். மக்கட் பணியையே குறிக்கோளாகக் கொண்டமையினாற்றான் அடிகளார் இல்வாழ்க்கையைத் துறந்து துறவியராகித்

தூய வாழ்க்கை வாழ்ந்து காட்டினர்; அதன் பயனுகப் பாலர் முதல் பாட்டன் பாட்டி வரையுமுள்ள அனைவராலும் பாராட்டப் பெற்ருர். அந்த வகையிலே அடிகளார் இன்று புகழுடம்பை நம்மிடம் விட்டுப் புலாலுடம்பைத் துறந்துவிட்டார்.

அடிகளார் மறைந்தாலும், அவர் தமிழகத்தினுக்கு அளித்துச் சென்ற செல்வங்கள் அமரத்துவமடைந்து விட்டன. நாடக நயத்தினுக்கு 'மதங்க சூளாமணி'யும், மறைந்தொழிந்த யாழ்களை எடுத்துக்காட்ட **யாழ்நூலும்** அமர இலக்கியங்களாகிவிட்டன. இன்னும் பல நூல்கள் அடிகளாரை நினைவுத் திரையில் எடுத்துக்காட்டுகின்றன. நூல் வகையாக வெளி வாரா வண்ணம் அடிகளார் எழுதிய கவிதைகள், கட்டுரைகள் பலப்பல இங்குமங்குமாகச் சிதறிக் கிடக்கின்றன. கால நீரோட்டத்தினுல் இவைகள் ஒரு காலத்தில் அழிந்துவிடவுங்கூடும். இவ்வாறு ஆகுமானுல், தமிழகம் தனது அரும்பெருஞ்செல்வங்களை இழந்ததாக முடியும். இக்குறைவினை நீக்கும் பொருட்டு எழுந்ததுதான் '**விபுலாநந்தத் தேன்**' என்னும் இத்தொகுப்பு நூல்.

அடிகளார் துறவறத்தை மேற்கொள்ளும்பொருட்டு ஸ்ரீ ராமகிருஷ்ண மடாலயத்தினுக்குச் சென்ற காலையில், மடாலய வழியாக வெளிவரும் திங்கள் இத்ழான '**ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயத்**'தினுக்கு ஆசிரியராய்ப் பணி செய்தார்; அந்நாட்களில் ஆசிரியர் தலையங்கங்களாகவும், கட்டுரைகளாகவும் கவிதைகளாகவும் சைவ நெறி சம்பந்தமாகப் பல எழுத்தோவியங்களை வரைந்தார். ஆசிரியர் பணியினைத் துறந்து பிற இடங்களில் வாழ்ந்த காலையிலும் 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயத்'தினுக்குப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இச்சொல்லோவியங்கள் அனைத்தினையும் திரட்டி மாணவர்களுக்கும் பெரியோர்களுக்கும்

பயன் தரத் தக்கதாகத் தொகுக்கப்பட்டதே விபுலா நந்தத் தேன் என்க.

ஈழவளநாட்டுப் பாடசாலைகளில் சமயப் பாட நூலா கவும் கையாளத்தக்கதாக, மாணவரின் அறிவுத் திறனைக் கண்ணகத்தே கொண்டு செய்யுட்பகுதி, வசனப் பகுதி என இரு வேறு பகுதியாகக் கொண்டு விரிகிறது விபுலாநந்தத்தேன்.

அடிகளார் எழுதியுள்ள கட்டுரைகள் கவிதைகள் அனைத்தையும் ஒருங்கே திரட்டும் முகமாகத் தமிழகத் தின் பல அறிஞர்களுடன் தொடர்பு கொண்டோம். அந்த வகையிலே, இந்நூல் உருவாவதற்கு முதற் காரணராய் இருந்தவர் 'ஸ்ரீராமகிருஷ்ண விஜய'த்தின் ஆசிரியரான **சுவாமி பரமாத்துமாநந்தா** (ரா. வி.) அவர்க ளாவர்.

சுவாமி பரமாத்துமாநந்தா அவர்கள், 'ஸ்ரீராம கிருஷ்ண விஜய'த்தின் பழைய இதழ்களையெல்லாம் தேடியெடுத்து எம்மிடம் ஒப்படைத்தார். அவரது அரும்பெருமுயற்சியின் பெறுபேருக, யாம் 'ஸ்ரீராம கிருஷ்ண விஜய'த்தில் வெளியான கட்டுரைகள், கவி தைகள் அனைத்தினையும் படித்துப் பலவற்றைத் தெரிந் தெடுத்து, விபுலாநந்தத் தேனைத் தொகுத்துள்ளோம்.

இந்நூலில் தொகுக்கப்பட்டவையனைத்தும் 'ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்' என்னும் இதழினுக்குரிமையுடை யனவாகும். இவைகளை யாம் எடுத்தாள உரிமை யளித்த 'ஸ்ரீராமகிருஷ்ண விஜய'த்தின் நிருவாகி அவர் களுக்கும், கவிதைகள் கட்டுரைகளைத் திரட்டித்தந்த ஆசிரியர் சுவாமி பரமாத்துமாநந்தா அவர்களுக்கும் எம் இதயங்கலந்த நன்றியறிதலை உரிமையுடையதாக்கு கிறேம்.

விபுலாநந்தத்தேனை இலங்கைக் கல்வி நூற் பிரசுர சபையார், பாடசாலைகளில் சமய பாட புத்தகமாக உப யோகிப்பதற்காக அனுமதித்துள்ளார்கள். அத்துடன் பிரசுரசபையார் அடிகளாரைக் கௌரவிக்குமுகமாக ஒரு விதி விலக்கும் அளித்துள்ளார்கள். அஃதாவது, பாடசாலைத் தலைமை ஆசிரியர்கள் விரும்பும் எந்த வகுப் பினுக்கும் இந்நூலை உபயோகிக்கலாமென்பதேயாகும். மூன்றாம் வகுப்பு முதற்கொண்டு எஸ். எஸ். எல். ஸி. வரையுள்ள ஒவ்வொரு வகுப்பினுக்கும் விபுலாநந்தத் தேனைச் சமயநூலாக உபயோகிக்கலாம். அடிகளாரை மாணவர்கள் என்றென்றும் நினைத்துக்கொண்டிருப்ப தற்காக. தலைமை ஆசிரியர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் விபுலாநந்தத்தேனை உபயோகிக்கும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' என்னும் திங்கள் இதழ் 1921-ஆம் ஆண்டு முதற்கொண்டு பல காலம் தந்த ஆராய்வுத்திறனில் ஒரு சிலவற்றைத் தொகுத்துத்தரும் விபுலாநந்தத்தேனின் முதலாந்தொகுதியினை இன் முகத்துடன் ஒப்படைக்கிறோம். தமிழகம் இதனை ஏற் றுக் களிப்புறுமாக!

'திருவருள் நிலையம்'
குருமண் வெளி
மட்டக்களப்பு

அருள் செல்வநாயகம்

உள்ளுறை

பகுதி—1: செய்யுள்

பகுதி—2 : வசனம்

வாழ்க்கை வரலாறு

" இசையிடை நுணுகி யாய்ந்து இசைபெறு யாழ்நூல் யாத்து
இசைத்தமி ழாசா னாகி இன்கலைக் கழகந் தன்னில்
இசைவளர் விபுலா நந்தர் இம்பரி னீங்கி வானின்
இசைபொழி அமர ராகி என்றென்றும் வாழ்கின் றாரே."

கிழக்கு மாவட்டத்தின் மட்டக்களப்பிலிருந்து தென் திக்கிலே இருபத்து நான்கு கல் தொலைவினுக்கப்பால், கல் முனை எனும் ஓர் உபநகரம் இருக்கிறது. இங்கிருந்து தெற்குத்திக்கு நோக்கி மூன்று கல் தொலைவில் காரை தீவு என்னும் ஊர் இருக்கின்றது. கிழக்கே வங்காளவிரி குடாக்கடலும், தெற்கே பசுமை செறிந்த வயல் வெளி களும், வடக்கே சாய்ந்த மருது ஊரும், மேற்கே புன்செய் நிலங்களும் எல்லைகளாகக் காரை தீவினை அழகு செய் கின்றன. இயற்கை எழில் ததும்பிடும் காரை தீவினை மக்கள் 'காரேறு மூதூர்' என்றும் வழங்குவார்கள்.

காரைதீவின் பழங்குடிமரபிலே வந்த சாமித்தம்பியார்க் கும், கண்ணகி வழிபாட்டிற்சிறந்த கண்ணம்மையார்க்கும் சுபநாளொன்றில் இராசகோபாலப்பிள்ளையவர்கள் திரு மணம் செய்து வைத்தார்கள்.

கணவனும் மனைவியுமாகிய சாமித்தம்பியாரும், கண் ணம்மையாரும் வள்ளுவர் வகுத்த நெறியினுக்கமைய இல்வாழ்க்கையை நடாத்தியமையினால், கண்ணம்மை யார் தாய்மைப் பேற்றை அடைந்தார். அதனைச் சொல்லக் கேட்ட சாமித்தம்பியார் மகிழ்வு கொண்டார். பத்துத்திங்கள் பண்பாக ஓடிய பின்னர். கர ஆண்டு,

பங்குனித்திங்கள், 16-ஆம் நாள் (27-3-1892) *வைகறைப் பொழுதில், கண்ணம்மையார் அறிவிற்சிறந்து விளங்கப் போகும் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். குழந்தையைத் தூக்கி உச்சி மோந்த சாமித்தம்பியார் 'மயில் வாகனன்' என்னும் அழகிய பெயரை அதற்கு வழங்கி அகம் மகிழ்ந்தார்.

பாலர் மயில்வாகனனார் வளர்ந்து பள்ளிப்பருவத்தை அடைந்தார். ஆகவே, தந்தையார், அவரைத் திரு. நல்ல ரெத்தினம் ஆசிரியரவர்களிடம் கூட்டிச் சென்று வித்தியாரம்பம் செய்து வைத்து, திரு. குஞ்சித் தம்பி ஆசிரியரிடம் கல்வி கற்கச்செய்தார்.

மயில்வாகனனார் குஞ்சித்தம்பி ஆசிரியரிடம் கல்வி கற்றதுடன் நில்லாது, தந்தையாரிடமும், வசந்தராசபிள்ளை அவர்களிடமும் பாடங்கேட்டுப் படித்து வந்தார்.

காரை திவுச் சைவப்பாடசாலையின் தலைமை ஆசிரியராகவும், விநாயகர் கோயில் அர்ச்சகராகவும் பணிசெய்து

---

* மயில்வாகனனாரான விபுலாநந்த அடிகளார் பிறந்த நாளைச் சிலர் மாற்றியும் வழங்குகின்றனர்; அஃதாவது, அடிகளார் 29-3-1892ல் பிறந்தனரென்பர். இக்கூற்று முரணானதாகும். தமிழ் நாளுக்கும், ஆங்கிலநாளுக்கும் பதின்மூன்று நாட்கள் வித்தியாசமெனக் கொண்டு கர ஆண்டு, பங்குனித் திங்கள், கசா-ஆம் நாளுக்குச்சரியாக (16+13) 29-3-1892 எனக் கணித்தார்கள். அடிகளாரின் சாதகக் குறிப்பின்படியும், கர ஆண்டுப் பஞ்சாங்கப்படியும் கணக்கிட்டால், கர ஆண்டு பங்குனித்திங்கள், கசா-ஆம் நாளுக்குச்சரியான ஆங்கில நாள் 27-3-1892 ஆகும். கர ஆண்டிலே இரு திகதி நாளுக்கும் வித்தியாசம் பதினொன்றாகும். ஆகவே, அடிகளார் பிறந்த நாள் 27–3–1892 (கர ஆண்டு, பங்குனித்திங்கள், கசா-ஆம் நாள் என்பதே சரியானதாகும். இக்கூற்றினைப் பலர் செய்தி இதழ்களில் எழுதியுமிருக்கின்றனர்.

வந்த வைத்தியலிங்க தேசிகரிடம் 'நன்னூல், சூடாமணி நிகண்டு' முதலியவைகளையும், வடமொழியையும் இனிது கற்றார்.

மயில்வாகனனார் பத்தாண்டகவை வரையும் தமிழ்ப் பாடசாலையில் தமிழ் கற்றதுடன், இல்லத்திலே ஆங்கில மொழியையும் கற்று வரலானார். பின்னர்த் தந்தையார் அவரைக் கல் முனையிலிருந்த மெதொடித்த மிசனின் ஆங்கிலப்பாடசாலையில் ஆங்கிலமொழியைக் கற்கும் பொருட்டு 1902-ஆம் ஆண்டிற்சேர்த்தார். மயில்வாகனனார் நான்காண்டுகள் வரையும் கல் முனையில் கல்வி கற்றார்; மேற்கொண்டு தொடர்ந்து பயில அங்கு வகுப்புகள் இல்லாமையினால், மட்டக்களப்பிலுள்ள 'அர்ச் மிக்கேல்' கல்லூரியிற்சேர்ந்து கற்கலானார்.

மயில்வாகனனாரின் கல்வித்திறமையைக் கண்ணுற்ற ஆசிரியர்கள், அவரை மிகவும் பாராட்டினார்கள். ஆதலினால், அவர் ஆசிரியர்களின் நேயத்தினுக்கு ஆளானார். அதன் பெறுபேருக ஓய்வான வேளைகளில் ஆசிரியர்களிடம் சென்று, தெரியாதனவற்றைக் கேட்டுத் தெரிந்துகொள்வார்.

மயில்வாகனனார் தமது பதினாருவது அகவையிலே 'கேம்பிரிட்ச் பல்கலைக் கழக'த்தினரால் நடத்தப்பட்ட தேர்விலே முதன்மையாகத் தேறினார். ஆதலினால், படித்த கல்லூரியிலே ஆசிரியராக அமர்த்தப்பட்டார். இரண்டாண்டுகளாக ஆசிரியர் பணியை மேற்கொண்டு வந்த காலையிற்றான் மயில்வாகனனாரின் நிறையன்பினுக்குரியரான அன்னையார் 1911-ஆம் ஆண்டு இறைவன் அடி நிழலினை எய்தினார். ஆகவே, மயில்வாகனனார் ஆசிரியர் பணியைத் துறந்து அன்னையாரின் இறுதிக் கடன்களை முடிக்கக் காரை தீவினுக்கு வந்தார். பின்னர்க்

கல் முனைக் கத்தோலிக்க மிசன் பாடசாலையிற்சேர்ந்து ஆசிரியராகப் பணியாற்றலானார்.

முழுப்பயிற்சி பெற்ற பூரண ஆசிரியராக மயில்வாகனனார் எண்ணினார். ஆகவே, 'ஆங்கில ஆசிரியர் கலாசாலை உட்புகு தேர்வி'னுக்காகப் படித்து, வெற்றி பெற்றார்; அதன் பயனாக இரண்டாண்டுகள் பயிற்சி பெறும்பொருட்டு 1911-ஆம் ஆண்டு கொழும்பு மாநகரம் வந்தடைந்தார்; பயிற்சிக்கல்லூரியில் பயின்றதுடன் நில்லாமல், கொழும்பில் வாழ்ந்து வந்த தமிழ்ப் பண்டிதர்களிடமும் பாடங்கேட்கலானார். அந்த வகையிலே பண்டிதர் கந்தையா, வித்துவான் சி. தாமோதரம் பிள்ளை, வித்துவான் கைலாய பிள்ளை ஆகியவர்களிடம் சங்க நூல்களை முறையாகப் பயின்றார். 1912-ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சியை முடித்துக்கொண்டு மயில்வாகனனார் வெளியேறினார். ஆகவே, 'அர்ச் மிக்கேல்' கல்லூரி அதிபர் மயில்வாகனனாரைப் பணி செய்வதற்காக அமர்த்தினார். இரண்டாண்டுகளாக ஆசிரியர் பணியையேற்று நடத்திய பின்னர் 1915-ஆம் ஆண்டு 'பொறியியற்கல்லூரி'யிற் சேர்ந்து, மேற்கல்வி கற்கலானார்; பொறியியற்கல்வியில் முதன்மையாகத் தேறியமையினால், 'டிப்ளோமா' என்னும் பட்டத்தையும் பெற்றார். அத்துடன் 1916-ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய பண்டிதர் தேர்விலும் தேறினார். ஈழநாட்டில் முதன்முதலாகப் பண்டிதர் தேர்வில் தேறிய பெருமை மயில்வாகனனாரொருவரையே சாரும்.

பண்டிதர் மயில்வாகனனார் 1916-ஆம் ஆண்டு 'அரசினர் பொறியியற்கல்லூரி'யில் சேர்ந்து, உதவி இரசாயன ஆசிரியராகக் கடமையேற்றார். தமக்கென வாழாது பிறருக்காக உழைக்கும் பரந்த மனப்பான்மை

கொண்ட மயில்வாகனனார், சிறந்த போதனா முறைகளைக் கையாண்டு, ஆய்வுக்கூடங்களில் பரிசோதனைகள் நடத்திப் போதித்தமையினால், மாணவர்களின் நல்லபிமானத்தைப் பெற்றார். ஆகவே, அவரது புகழ் ஈழநாடெங்கும் பரவியது. அதன் பயனாக, 1917-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்து 'அர்ச் சம்பத் கிரிசியார் கல்லூரி'யின் தலைவர் வேண்டிக்கொண்டதற்கிணங்கக் கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியர் பீடத்தை அழகு செய்தார். இக் காலையிற்றான் ஸ்ரீராமகிருஷ்ண மடாலயத்தைச் சேர்ந்த சர்வாநந்தர் இலங்கைக்கு வந்தார். அன்னாருடன் கலந்து உரையாட மயில்வாகனனாருக்கு வாய்ப்புக்கிடைத்தது. அதன் பயனாகத் துறவறத்தைப்பற்றி எண்ணலானார்; தம் எண்ணத்தினை நிறைவு செய்வதற்காகத் தம்மை ஆயத்தஞ் செய்துகொள்ளலானார்.

கல்லூரியில் மாணவர்களுக்குப் புதுப்புதுப் பாடங்களைக் கற்பித்ததுடன், புதிய நூல்களையும் படிக்கலானார்; இரண்டாண்டுகளாக மாணவர்களை வளர்த்ததுடன் தம்மையும் புதிய தேர்வினுள் புகுத்துவதற்குத் தயார் செய்துகொண்டார். பிறர் துணையின்றித் தாமாகப் படித்து 'இலண்டன் பல்கலைக்கழகம்' நடாத்திய பி. எஸ்ஸி. தேர்வில் தேறினார்.

மயில்வாகனனாரின் இருமொழிப் புலமையை அறிந்த 'மானிப்பாய் இந்துக் கல்லூரி'யின் நிருவாக சபையினர் இந்துக்கல்லூரியின் தலைமை ஆசிரியர் பதவியினை ஏற்கும்படி வேண்டினர். அதற்கிசைந்த மயில்வாகனனார், 1920-ஆம் ஆண்டு இந்துக்கல்லூரியின் தலைமைப் பதவியினையேற்றார். இந்துக்கல்லூரியில் மயில்வாகனனார் ஆய்வுக்கூடமொன்றினை நிறுவி, விஞ்ஞானக் கலையினைப் போதித்தார்.

இலங்கையில் தமிழ்மொழியை வளர்க்கவோ, தமிழ் மொழியைப் போற்றிப் புகழவோ சிறந்த வழி வகைகள் இல்லாமையைக் கண்ட மயில்வாகனனார், மொழியினை வளர்க்கும்பொருட்டு ஒரு கழகம் நிறுவுவதற்காக உழைத்தார். பல அறிஞர்களின் துணைகொண்டு, தமது தனி முயற்சியின் பயனாக, 'யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்க'த்தைக் கட்டியெழுப்பினார்.

அவர் அச்சங்கவாயிலாகப் 'பிரவேசபண்டிதர்', 'பாலபண்டிதர்', 'பண்டிதர்' என்ற முத்தரங்கொண்ட மூன்று தேர்வுகளை ஏற்படுத்தினார். மேற்படி தேர்வுகள் இனிது நடைபெறும்பொருட்டு மயில்வாகனனார் தேர்வு முதல்வராகவும், முதன்மையான உறுப்பினராகவும் விளங்கினார். அன்று மயில்வாகனனார் தொடங்கிவைத்த சங்கம், இன்று வரை எத்தனையோ பண்டிதமணிகளை ஈழ நாட்டினுக்கு அளித்துவிட்டது.

உலக வரலாற்றிலே 1914-ஆம் ஆண்டு பயங்கரமான ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அதுதான் முதலாவது உலகப் பெரும்போர். பணிசெய்வதையே குறிக்கோளாகக் கொண்ட மயில்வாகனனார், போர்வீரராகி நாட்டினுக்காக இரத்த தானம் செய்ய முன் வந்தார். மயில்வாகனனார் முன்வந்த காலையில் உலகத்தையே அதிரச்செய்த பெரும் போர் ஓர் உடன்பாட்டினையடைந்தது. ஆகவே, மயில் வாகனனாரின் போர்ப்பணி தேவையற்றதாய் முடிந்தது. நாட்டினுக்காகப் பணிசெய்ய வாய்ப்புக் கிடைக்காவிட்டா லும், நாட்டு மக்களுக்காகவும், தமிழ் மொழிக்காகவும் பணி செய்ய மயில்வாகனனார் எண்ணினார். ஆகவே, 1922-ஆம் ஆண்டு துறவியராகித் தூய்மையான வாழ்வைக் கடைப்பிடித்துப் பணி செய்யும்பொருட்டுச் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடாலயத்தினுக்குச் சென்றார்.

மயில்வாகனனுர் மடாலயத்திற்சேர்ந்து துறவியராவதற்குரிய நியமங்களைக் கைக்கொள்ளலானுர். அவருக்கு மடாலயத்தார் 'பிரபோத சைதன்யர்' எனும் பிரமசரியப் பெயரை வழங்கினர். இந்நாட்களில் மடாலயம் வாயிலாக வெளி வரும் திங்கள் இதழ்களான 'ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்', 'வேதாந்த கேசரி' எனப்படும் தமிழ் ஆங்கில இதழ்களுக்கு ஆசிரியராகிப் பணி புரியலானுர்.

1924-ஆம் ஆண்டு, சித்திரைத் திங்கள், முழுநிலாவன்று சுவாமி சிவானந்தா அவர்கள் பிரபோதசைதன்யருக்கு ஞான உபதேசம் செய்து, துறவறப் பெயரான 'சுவாமி விபுலாநந்தா' என்பதை வழங்கினுர்கள்.

அடிகளார் ஞான உபதேசம் பெற்று வெளியுலகை நோக்கிய போது திருப்பாதிரிப்புலியூரின் ஞானியார் மடாலயத்தினர் ஆண்டு நிறைவு விழாவின் தலைமையினைத் தாங்கும்படி அடிகளாரை வேண்டினுர்கள். அடிகளாரும் அதற்கிசைந்து, மாநாட்டிற்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்.

அடிகளார் துறவியாகத் தம்மை ஆயத்தம் செய்து கொண்டிருந்த காலையிற்ருன் பல நூல்களையும் படிக்கத் தருணம் கிடைத்தது. சித்தாந்த நூல்களுடன், காவியங்களையும் படித்தார்; ஆங்கிலக் கவிதைகளையும் படித்து இன்புற்ருர்; இந்நுகர்ச்சியினைத் தாமே வைத்துக் கொள்ளாமல் தமிழக அன்பர்களுக்கும் வழங்க முன் வந்தார். அதன்பயனுகத்தான் 'ஆங்கிலவாணி', 'பூஞ்சோலைக் காவலன்' என்னும் இலக்கிய இன்பப் புதையல்கள் வெளி வந்தன.

ஆங்கிலப் பெரும்புலவரான செகப்பிரியரின் நாடகங்களை அடிகளார் விரும்பிப் படித்தார்; அத்தகைய ஒரு சூழ்நிலையைத் தமிழ்மொழியிலும் ஏற்படுத்துவதற்கு

எண்ணங்கொண்டார். 1924-ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஆண்டு நிறைவு விழாவிற்கலந்து கொள்ளவும், 'நாடகத்தமிழ்' எனும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றவும் அடிகளாருக்குத் தருணம் கிடைத்தது. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செயலாளரான திரு. டி. சி. சீனிவாச ஐய்யங்கார் அவர்கள் அடிகளாரின் விரிவுரையை ஒரு சிறந்த நூலாக்கித்தரும்படி வேண்டினர்கள். அதற்கிணங்கிய அடிகளார் செகப்பிரியரின் நாடகங்களையும் தனஞ்சயரின் தசரூபத்தையும் மூலமாகக்கொண்டு, சிலப்பதிகாரத்திலுள்ள நாடக நூன்முடிபுகளை ஓரளவிற்கு விளக்கிக் காட்டுவதற்கேற்றதாக 'மதங்கசூளாமணி' என்ற நூலை எழுதினர். செயலாளர் கேட்டுக்கொண்டமைக்கிணங்க, மதுரைத் தமிழ்ச்சங்கச் சார்பில் மதங்கசூளாமணி வெளி வந்தது.

பண்டிதர் மயில்வாகனனாராய்த் தமிழகம் சென்றவர், 1925-ஆம் ஆண்டு சுவாமி விபுலாநந்தராய் ஈழநாடு மீண்டார். ஆதலினால், மக்கள் பல இடங்களிலும் வரவேற்பு வழங்கிப் பெருமைப்படுத்தினார்கள். இந்நாட்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாநாட்டினுக்கும் அடிகளார் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்.

ஈழநாடு மீண்ட அடிகளாருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண மடாலயத்தார், கிழக்கிலங்கையிலுள்ள தம் கல்விச் சாலைகளைப் பராமரிக்கும் 'முகாமைக்காரர்' பணியினைக் கொடுத்தனர். அடிகளாரும் இப்பணியினையேற்று, பல புதிய பாடசாலைகளை நிறுவியதுடன், சைவ நெறியினைத் தழைத்தோங்கவும் செய்தார்.

அடிகளார் தம் பிறப்பிடமான காரை தீவில் பெண்களுக்கென ஒரு பாடசாலையை நிறுவி, 'சாரதா வித்தியாலயம்' எனப் பெயர் கொடுத்தார்; கிழக்கு இலங்கையின் தலைநகரான மட்டக்களப்பினுக்கணித்தாயுள்ள கல்லடி உப்

போடை எனும் ஊரில் ஓர் ஆங்கிலக் கல்லூரியை நிறுவி, 'சிவாநந்த வித்தியாலயம்' எனப் பெயர் கொடுத்தார்; தம் குருநாதரை என்றென்றும் நினைவுத் திரையில் வைத்திருக்கும்பொருட்டே அன்னவரின் பெயரினை வித்தியாலயத்தினுக்கு வழங்கினர்; வித்தியாலயத்தைச் சிறந்த முறையில் வளர்க்கும்பொருட்டுத் தலைமை ஆசிரியர் பதவியினையும் மேற்கொண்டார்.

அடிகளார் திரிகோணமலையில் திகழ்ந்த சைவப் பாடசாலையைப் பெருகச்செய்ததுடன், கல்லூரியாகவும் மாற்றியமைத்தார். திரிகோணமலையின் இந்துக்கல்லூரியை வளர்க்கும்பொருட்டு அடிகளாரே தலைமை ஆசிரியர் பணியினையும் மேற்கொண்டார்.

1925-ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் மகாமகோபாத்தியாய சாமிநாதையர் அவர்களுக்குப் 'பொற்கிழி' அளிக்கும்பொருட்டு ஒரு விழாவினை நடத்தினர். இவ்விழாவில் ஈழ நாட்டு வித்துவான்களின் ஆணையாளராக அடிகள் கலந்துகொண்டார்.

1926-ஆம் ஆண்டு வேலூரில் நடைபெற்ற ஸ்ரீராம கிருஷ்ண மடாலய மாநாட்டில், இலங்கை ஆணையாளராக அடிகளார் கலந்துகொண்டார்.

ஈழ நாட்டு அரசியலார் கிழக்கு இலங்கையின் கல்வி நிலைமையினை ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கும்படி ஒரு குழுவினை நிறுவினர். இக்குழுவின் தலைமைப்பணி அடிகளாரிடம் ஒப்புவிக்கப்பட்டது.

1927-ஆம் ஆண்டு சிதம்பரத்திலே ஒரு பல்கலைக் கழகம் நிறுவும்பொருட்டு இராமநாதபுரத்து அரசர் தலைமையில் ஒரு விசாரணைக் குழு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவின் முன்னர்ப் பல்கலைக் கழகம் இன்றியமையாதது என்று சான்று பகரும்படி அடிகளாரைச் சென்னைப் பல்

கலைக் கழகத்தார் வேண்டினர். அதற்கியைந்த அடிகளார் 'சிதம்பரத்திலே பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும்,' என்று விசாரணைக் குழுவின் முன்னர்ச் சான்று பகர்ந்தார். இவ்விசாரணைக் குழுவில் முதன் முதல் சான்று பகர்ந்த பெருமை அடிகளாரைச் சாரும்.

அடிகளார் 1927-ஆம் ஆண்டு கண்டிச் சைவ மகா சபையின் ஆண்டு விழாவினுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். இக்காலையில் காந்தி அடிகள் இலங்கைக்கு எழுந்தருள, மாணவர் மாநாட்டுத் தலைவர் என்ற வகையில் அடிகளார் காந்தி அடிகளை வரவேற்றார்.

சிதம்பரத்திலே பல்கலைக் கழகம் வேண்டுமென்று விசாரணைக் குழுக் கண்டமையினால், உடனடியாகப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. பல்கலைக் கழகத்தின் 'தமிழ்ப் பேராசிரியர்' பணியினை ஏற்கும்பொருட்டு அடிகளாரை, அண்ணாமலைச் செட்டியார் வேண்டினார்; ஆகவே, அடிகளாரும் பேராசிரியர் பணியினை மேற்கொண்டார்.

பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய அடிகளார், ஓய்வான நேரத்தில் பழந்தமிழர்கள் கையாண்ட யாழ்களைப் பற்றி ஆராயலானார். மறைந்தொழிந்த யாழ்களைத் திரும்பவும் மீட்டுக் கொடுக்க வேண்டுமென்று அடிகளார் உறுதி பூண்டார். இப்பணியினைத் தெளிவுற முடிக்க உத்தியோகம் இடையூறாய் இருந்தது. ஆகவே, அவர் யாழ் ஆராய்ச்சியில் இறங்குவதற்காக 1933-ஆம் ஆண்டு தமிழ்ப் பேராசிரியர் பணியைத் துறந்தார்.

அடிகள் முத்தமிழில் திறமையடைந்து ஆங்கில மொழியிற் பட்டங்கள் பெற்று, வடமொழியிற் பாண்டித்தியமடைந்ததுடன் நில்லாது, இலத்தின், யவனம், வங்கம், சிங்களம், பாலி, அரபு ஆகிய பிற மொழிகளிலும் திறமை பெற்றிருந்தார். ஆதலினால், மொழி பெயர்த்தலென்பது அடிகளுக்கு ஒரு பொழுது போக்காய் இருந்தது.

'ஆங்கில வாணி', 'பூஞ்சோலைக் காவலன்' எனும் கட்டுரைகள் அடிகளாரின் மொழி பெயர்ப்புத் திறமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். பண்டித மணி கதிரேசன் செட்டியார்க்களித்த மணி மலரை அணி செய்யும் பொருட்டு எழுதிய 'ஆங்கிலவாணி' எனும் கட்டுரை, அடிகளாரின் ஆங்கிலப் புலமைக்கும், தமிழ்ப் புலமைக்கும் பெருமையான மேற்கோளாகும். 'விவேகானந்த ஞான தீபம்', 'கர்ம யோகம்', 'ஞான யோகம்', 'நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை', 'விவேகானந்த சம்பாஷணைகள்' ஆகிய நூல்களைச் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடாலயம் வாயிலாக, அடிகளார் மொழி பெயர்த்துள்ளார்.

அடிகளார் 1933-ஆம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரின் வேண்டுகோட்கிணங்கிக் கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவினுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பளித்தார்.

அடிகளார் 1935-ஆம் ஆண்டு சைவ சித்தாந்த மகா சமாசத்தினரின் வேண்டுகோட்கிணங்கித் திருவண்ணாமலையில் நடைபெற்ற மகா சமாசத்தின் மாநாட்டினுக்குத் தலைமை தாங்கிப் பெருமைப்படுத்தினர்.

1936-ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற கலைச்சொல்லாக்க மாநாட்டின் தலைமையினை அடிகளார் தாங்கியதுடன், கலைச்சொற்களை ஆக்குவதிலும் ஈடுபட்டார்.

1937-ஆம் ஆண்டு அடிகளார் கைலாயம் வரை சென்றதுடன் திபெத்து நாட்டினுக்கும் போய் மீண்டார்.

அடிகளார் 1939-ஆம் ஆண்டு கல்முனையில் நடைபெற்ற ஆசிரியர் விடுமுறைக் கழகத்தில் தலைமை தாங்கியதுடன், இலக்கியச் சார்பாக நீண்டதொரு விரிவுரையும் நிகழ்த்தினர்.

சென்னைப்பல்கலைக் கழகத்தின் தமிழ்த் தேர்வாள ராய் அடிகள் திகழ்ந்ததுடன், பற்பல இடங்களுக்குஞ் சென்று சமயத் தொண்டுகளும் செய்து வந்தார்; இந் நாட்களில் இமயமலைச் சாரலிலுள்ள மாயாவதி ஆச்சிர மத்திலிருந்து வெளி வந்த 'பிரபுத்த பாரதா' எனும் ஆங் கிலத் திங்கள் இதழினுக்கு ஆசிரியராகத் தேர்ந்தெடுக் கப்பட்டமையினால், 1939-ஆம் ஆண்டு இமாலயத்தினுக் குச் சென்றார்.

இமாலயத்தில் அடிகளார் வாழ்ந்த காலையிற்றான் யாழ் சம்பந்தமான ஆராய்ச்சியில் பூரணமாக ஈடுபட்டார். இவ்வாராய்ச்சியின் பயனாக அடிகளார் பல்வேறு இடங் களுக்குச் செல்ல வேண்டிய நிலைமையேற்பட்டது. ஆகவே, அவர் இதழ் ஆசிரியர் பணியினைத் துறந்து, தமிழகம் மீண்டார். தமிழகத்தின் பல இடங்களுக்கும் அடிகளார் சென்று யாழ் சம்பந்தமான குறிப்புகளைத் தொகுத்தார்.

அடிகளார் தமிழகம் மீண்டதைக் கண்ட இலங்கை அன்பர்கள், இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் பணியினை ஏற்கும்படி வேண்டினார்கள். பிறந்த நாட்டின் நலத்தின்பொருட்டு அடிகளார் பேராசி ரியர் பணியினை மேற்கொண்டார்; பேராசிரியர் பணியு டன் கல்விப் பகுதி பாட நூற்சபை, தேர்வுச் சபை, கல்வி ஆராய்ச்சிச் சபை ஆகியவற்றில் பெருமைக்குரிய உறுப்பினராயும் திகழ்ந்தார்.

ஆட்சியாளர் இலங்கைப் பாடசாலைகளுக்கான பாடத்திட்டம் ஒன்றினை வகுத்த போழ்தில், அடிகளார் சங்கிதப் பாடத்தினுக்கான திட்டத்தை ஒவ்வொரு வகுப்பினுக்கும் வகுத்துக் கொடுத்தார். பாடசாலைகளிற் சமயமும் போதிக்கப்பட வேண்டுமென்ற நியதியேற்பட்ட போது, சமயத்தினுக்கான ஒரு பாடத்திட்டத்தையும்

அடிகளார் வகுத்துக் கொடுத்தார். இலங்கை ஆட்சியாளரின் தேர்வுகளில் அடிகளார் ஒரு தேர்வாளராகவும் இருந்து பணியாற்றினார்.

அடிகளார் பத்தாண்டுகளாக ஆராய்ந்து கண்டுணர்ந்த இசை நூலான யாழ் நூலினைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்து ஆதரவில் திருக்கொள்ளம்பூதூர்த் திருக் கோயிலில் ஆளுடைய பிள்ளையார் முன்றிலில் சர்வசித்து ஆண்டு, ஆவணித் திங்கள், 20-ஆம், 21-ஆம் நாள் (20, 21–6–1947) அரங்கேற்றினார்.

முதலாம் நாள் விழாவில் திருக்கோயில் வரிசைகளுடன், இயற்றமிழ்ப் புல்வர்கள், இசைத்தமிழ்ப் புலவர்கள், அறிஞர்கள் சூழ்ந்து வர, அடிகளாரைத் தெற்குக் கோபுர வாயிலாகத் திருக்கோயிலினுக்கு அழைத்து வந்தார்கள். அழைப்பு ஊர் வலத்தில் மறைந்தொழிந்த யாழ்களை அடிகளின் கணக்குப்படி ,தயாரித்த முளரியாழ், சுருதி வீணை, பாரிசாத வீணை, சதுர்த்தண்டி வீணைகளைத் தாங்கிச் சென்றார்கள். நாச்சியார் முன்னிலையில் அடிகள் இயற்றிய நாச்சியார் நான்மணி மாலை வித்துவான் ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்களாற் படிக்கப்பட்டு நிறைவேறியது. பின்னர் எல்லோரும் அரங்கேற்று மண்டபத்தினுக்குச் சென்றனர்.

தேவார இன்னிசைப் பண்களோடு தொடங்கிய அரங்கேற்று விழாவில் கோனூர்ச் சமீந்தாரும், திருக் கொள்ளம்பூதூர்த் திருப்பணிச்செல்வரும், கரந்தைத் தமிழ்ச்சங்கத்துப் புலவருமான திருவாளர் பெ. ராம. ராம. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள் அனைவரையும் வரவேற்று, வரவேற்புரை நிகழ்த்தினார். பின்னர் அடிகளார் யாழ் நூலினுக்கு விளக்கம் கொடுத்தார். அடுத்துக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்து அமைச்சரான திரு. கந்தசாமி அவர்கள்

அடிகளார் ஆராய்ந்தளித்த யாழ்களின் பெருமைகளைப் பற்றிப் பேசினர். பின்னர்த் திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார், திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை ஆகியவர்கள் அடிகளாரைப் பாராட்டி விரிவுரைகள் நிகழ்த்தினர்கள்.

சங்கீத பூசணம் திரு. க. பொ. சிவாநந்தம் பிள்ளை அவர்கள், அடிகளார் கண்டுணர்ந்த யாழ்களைமீட்டி இன்னிசை பொழிய, முதலாம் நாள் விழா நிறைவேறியது.

இரண்டாம் நாள் விழாவில், நாவலர் சோமசுந்தர பாரதியார், 'குமரன்' ஆசிரியர் சொ. முருகப்பா, தமிழ்ப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை, சென்னைப் பல்கலைக்கழக இசைப் பேராசிரியர் சாம்பமூர்த்தி ஐயர் ஆகியவர்கள் விரிவுரைகள் நிகழ்த்திய பின்னர், அடிகளார் யாழ் பற்றிய பல உண்மைகளை எடுத்துக் கூறினர். அடுத்து வீணை வித்தகர் சிவாநந்தம் பிள்ளை அவர்கள் யாழ் நூலிற்கண்ட கணக்கின்படி அமைந்த சுருதி வீணையில் ஏழ்பெரும்பாலைகளைக் கிரகசுவரம் மாற்றி இசைத்து அவையினரை ஆனந்தப்படுத்தினர்.

இறுதியாக வித்துவான் வெள்ளை வாரணனர் யாழ் நூற்பெருமை பற்றிப் பேச, யாழ் நூல் அரங்கேற்றப் பட்டது. கரந்தைத் தமிழ்ச்சங்கத்து அமைச்சர் திரு. கந்தசாமி அவர்கள் நன்றியுரை கூற, யாழ் நூல் அரங்கேற்று விழா இனிது நிறைவேறியது.

யாழ் நூல் அரங்கேற்று விழாவிற் கலந்துகொள்ளப் புறப்படு முன்னரே, அடிகளாரின் உடல் சோர்வுற்றிருந்தது. அதனைப் பொருட்படுத்தாது பயணம் செய்து மீண்ட அடிகளாரை நோய் பற்றிக்கொண்டது. ஆகவே, அவர் கொழும்பு மருத்துவ விடுதியொன்றில் சிகிச்சை பெறலானர். அடிகளாரைப் பரிசோதித்த வைத்தியர்,

பூரண ஓய்வும், அமைதியான சூழ்நிலையும் வேண்டுமெனக் கூறினர். ஆகவே, ஸ்ரீராமகிருஷ்ண மடாலயத்தார் வைத்தியர் கூறிய சூழ்நிலையை ஏற்படுத்தியும் பயன் தாராமல் 1947-ஆம் ஆண்டு, ஆடித்திங்கள், 19-ஆம் நாள் (19-7-1947) சனிக்கிழமைஇரவு அடிகளார்இறைவனுடன் இரண்டறக்கலந்தார். தமிழ்த்தாய் கண்ணீர் வடித்தாள். அறிஞர்கள் அழுது புலம்பினர்கள். தமிழகம் ஒப்பற்ற முத்தமிழ்ப் புலவரை இழந்தது.

அடிகளாரின் ஊன் உடல் வெள்ளவத்தை ஸ்ரீ ராம கிருஷ்ண மடாலயத்தில் அன்பர்களின் இறுதிவணக்கத் தினுக்காக வைக்கப்பட்டது. மறு நாள், அஃதாவது ஞாயிறு பின்னேரம், ஊன் உடல் பிறந்த நாடான மட்டக் களப்பினுக்குப் புகை வண்டி வழியாக எடுத்துச் செல்லப் பட்டது.

திங்கட்கிழமைக் காலைப்பொழுது மட்டக்களப்புப் புகை வண்டி நிலையம் மக்கள் கூட்டமாகக் காட்சி அளித் தது. கிழக்கிலங்கையின் தவப்புதல்வரைக் காண— அவரது உயிரற்ற உடலினைத் தொழ—வந்த மக்கள் கூட்டம் எண்ணிலடங்காதிருந்தது.

அடிகளாரின் ஊனுடம்பு வைக்கப்பட்ட பேழையைப் புகை வண்டி நிலையத்திலிருந்து சிவாநந்த வித்தியால யத்துக்கு ஊர் வலமாக எடுத்துச் சென்றனர்கள். சிவா னந்த வித்தியாலயத்தில் மக்களின் இறுதி வணக்கத்தி னுக்காக வைத்து, மீண்டும் ஊர் வலமாக எடுத்துச் சென்றனர்கள்.

இறுதியாக, சிவாநந்த வித்தியாலயத்தின் ஆல மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்லறையிலே அடிகளார் திருவுடல் அடக்கம் செய்யப்பட்டது.

"கிழக்கிலங்கைக் கொருமணியென் றுலகமெலாம்
புகழ்ந்தேத்தக் கிளர்செஞ் சாலி
செழித்துவளர் காரைநகர் தனிலிரவி யெனவுதித்த
செம்மால்! உன்றன்
உளப்படுநல் லிசைத்தமிழும் இயற்றமிழு மாங்கிலமும்
உம்பர் ஊரில்
வழுத்திடுவ மெனநினைந்து வானுலக மேகினையோ
மதிவல் லோனே!"

என்று நாமும் நவின்று உருகுகின்றோம்!

செய்யுள்

விபுலாநந்தத்தேன்

1. ஈசனுவக்கும் மலர்

வெள்ளைநிற மல்லிகையோ, வேறெந்த மாமலரோ,
வள்ள லடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது. 1

காப்பவிழ்ந்த தாமரையோ, கழுநீர் மலர்த்தொடையோ,
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது. 2

பாட்டளிசேர் பொற்கொன்றையோ,
பாரிலில்லாக் கற்பகமோ,
வாட்ட முறுதவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது. 3

2. தேவி வணக்கம்

அன்னையே யருளுருவே யகிலமுமின்
றளித்தருளு மரசி யேசீர்
மன்னுநிலை யியற்பொருளும் இயங்கியலும்
வகைப்பொருளும் வகுத்த வாற்றல்
இன்னலற வெமைப்புரந்த இன்னமுதப்
பெருங்கடலே யிறைவி யேநின்
பொன்னடியை நிதந்துதித்தோங் கடைக்கணித்துக்
கருணைமழை பொழிவா யம்மா! 1

எண்ணுங்கா லுலகினுக்கோர் ஆதார
மாகிநின்ற வியல்பு நீயே
மண்ணின்சீ ருருவாகி மன்னியவ
ணீயன்றே வாரி யாகி
உண்ணுந்நீ ருருவாய வுத்தமியு
நீயன்றோ வுயர்வொப் பில்லாய்!
விண்ணின்பே ருருவாகி யெவ்விடத்து
நிறைந்துநின்ற விரிவு நீயே. 2

வீயாத பெருவலிமை வைணவியே
பிரபஞ்ச வித்து மாகித்
தாயாகித் தாரணியைத் தோற்றுவித்த
தனிமுதலே! தவத்தர் வாழ்வே!
மாயாரூ பத்துடனே மருளளிக்கும்
வனப்புடையாய்! மயக்கந் தீர்த்துத்
தீயாத பெருமுத்தித் தடங்கரையிற்
செலுத்துகின்ற செல்வத் தாயே! 3

3. தேவ பாணி

ஒளியா லுலகின் றுயிரனைத்து
மீன்போற் செவ்வி யுறநோக்கி
அளியால் வளர்க்கு மங்கயற்கண்
அன்னே! கன்னி யன்னமே!
அளியா லிமவான் றிருமகளாய்
ஆவி யன்ன மயில்பூவை
தெளியா மழலைக் கிளிவளர்த்து
விளையாட் டயருஞ் செயலென்னே! 1

அண்டக் குவைவெண் மணற்சிறுசோ
றுக்கித் தனியே விளையாடுங்
கொண்டற் கோதாய்! படியெழுத
லாகா வுருவக் கோகிலமே!
கொண்டற் குடுமி யிமயவரை
அருவி கொழிக்குங் குளிர்முத்தால்
வண்டற் குதலை மகளிரொடும்
விளையாட் டயரும் வனப்பென்னே! 2

வேத முடிமே லானந்த
விளைவாய் நிறைந்து விளையாடும்
மாத ரரசே! முத்தநகை
மாதே! இமய மடமயிலே!
மாத ரிமவான் றேவிமணி
வடந்தோய் மார்புந் தடந்தோளும்
பாத மலர்சேப் புறமிதித்து
விளையாட் டயரும் பரிசென்னே! 3

4. கோயில்

தங்கமணி மன்றுடையார் தனதன்றன்
திருத்தோழர் தரணி யாள்வார்
எங்கள்சிறு குடிசையினை எண்ணிவரல்
யாங்ஙனமோ இயம்பாய் தோழி!
எங்கள்சிறு குடிசையினை எண்ணிவரற்
கிசையாரோ ஏத மில்லார்?
துங்கமணி மன்றுவிட்டுச் சுடுகாட்டில்
நடித்திலரோ? சொல்லா யம்மா! 1

செம்பொன்செய் வல்லசித்தர் தென்னவனார்
மருமகனார் செகத்தை யாள்வார்
எம்புன்செய்க் குடிசையினை எண்ணிவரல்
யாங்ஙனமோ இயம்பாய் தோழி!
எம்புன்செய்க் குடிசையினை எண்ணிவரற்
கிசையாரோ ஏத மில்லார்?
உம்பர்தொழத் தென்மதுரைத் தெருவீதி
நின்றிலரோ? உரையா யம்மா! 2

ஆடகமா மலையுடையார் அச்சுதனார்
மைத்துனனார் அவனி யாள்வார்
ஈடிலரெஞ் சிறுகுடிலை எண்ணிவரல்
யாங்ஙனமோ இயம்பாய் தோழி!
ஈடிலரெஞ் சிறுகுடிலை எண்ணிவரற்
கிசையாரோ ஏத மில்லார்?
காடுமலை நாடுவிட்டு வெறுவெளியில்
நின்றிலரோ? கழறா யம்மா! 3

5. மலர் மாலை

வேலை முகட்டிற் கதிரெழுமுன்
　　விரைந்து பறித்த புதுமலராற்
கோல முறவே புனைமாலை
　　யார்க்கோ வெங்கள் குலக்கொழுந்தே!
கோல முறவே புனைமாலைக்
　　குரியார் யாரென் றறியாயோ?
சீல முறமுன் பெமையாண்ட
　　செல்வ ருடைமை யாமலமோ? 1

பாரோ ரெழுமுன் பெழுந்திருந்து
　　பனிமா மலர்கள் பலபறித்துச்
சீரா யமைத்த மலர்மாலை
　　யார்க்கோ வெங்கள் திருக்கொழுந்தே!
சீரா யமைத்த மலர்மாலைக்
　　குரியார் யாரென் றறியாயோ?
ஆரா வமுதா யெமையாண்ட
　　அமல ருடைமை யாமலமோ? 2

வண்டா டாமுன் றெரிந்தெடுத்த
　　வாச மலராற் றொடுத்தமைத்த
தண்டேன் றுளிக்கு மலர்மாலை
　　யார்க்கோ வெங்கள் தவக்கொழுந்தே!
தண்டேன் றுளிக்கு மலர்மாலைக்
　　குரியார் யாரென் றறியாயோ?
பண்டே தொடுத்தெங் குடியாண்ட
　　பரம ருடைமை யாமலமோ? 3

6. மஹாலக்ஷ்மி ஸ்தோத்திரம்

[பரிசிற்றுறை தழுவிய பாணிப் பாட்டு]

விண்ணின்ற சோதி விரிகதிர் மண்டிலத்தின்
உண்ணின்ற தெய்வ வுருவமே! — கண்ணின்
ஒளியே! ஒளிக்கொளியே! ஒண்பதும மேவும்
அளியே! அளிக்குமுத லாயன் — களிகூரும்
பெண்ணரசி யே!நினது பேரெழிலின் றேற்றத்தை
எண்ணி யுரைக்க வியைந்துநின்ற — விண்ணவர்கோன்
எல்லையற்ற பேரருளுக் கெல்லையிடல் யாங்ஙனமென்
றல்லலுற்று னென்னு மறிஞருரை — மெல்லச்
செவியகத்துச் சேர்தலும்யான் சிந்தைநைந்தே னன்னாய்!
கவியகத்துத் தேர்ந்த கலைஞர் — புவியகத்துப்
பைந்தொடி மெல்லிநல்லார் பாணி யுரைக்குங்காற்
செந்திருநீ ராரென்னச் செப்புவார்: — சுந்தரமாந்
தாக்கணங்கே! நின்றிருவைச் சாற்றுவதென் றுலடியேன்
ஆக்க மரிப்பிரியை யாயவம்மை — நோக்கில்
தனக்குவமை தானென்பேன் றுயே! சிறியேன்
மனக்கமல பீடம் வதிந்து — நினைக்கரிய
பேரெழிலைக் காட்டுவையேற் பேணுமறி விற்கெட்டுஞ்
சீர்சொலலென் நாவின் செயல்.

வானகத்தும் மண்ணகத்தும் வயங்குசுடர் நீயாயின்
கானகத்தும் பொழிலகத்துங் கருதுமெழில் நீயாயின்
நானகத்துக் கொண்டனநின் னளினமலர்ப் பதமாயின்
தேனகத்த வனசமொன்றே திருப்பீட மாவதுமே?

கோபாலன் றிருமார்பிற் குலவுமொளி நீயாயின்
பூபாலர் தடந்தோளிற் பொலிவனப்பு நீயாயின்
நாவார வழுத்துவநின் னளினமலர்ப் பதமாயின்
பூவாரும் பதுமமொன்றே புதுப்பீட மாவதுமே?

பொன்னீர்நெல் மணியணிசிர் புகழிளமை நீயாயின்
மின்னீர விடைமடவார் வியனெழிலு நீயாயின்
நன்னீர ருளத்தினநின் னளினமலர்ப் பதமாயின்.
செந்நீர்மைக் கமலமொன்றோ திருப்பீட மாவதுமே?

எனவாங்கு,

மன்றலந்தார்க் குழலமுதை மாக்கடலிற் பிறந்தாளைக்
கன்றெறிந்த விறைமகிழுங் கனங்குழையைப் பணிந்து
[நின்றேன்;

நின்ற வெல்லையு ணீடருள் சுரந்தென்
மனக்கண் காண வலக்கண் டுடிப்ப
உளமெனும் பீடத் துவந்து தோன்றினள்
வளரிள மதிநுதல் வயங்கொளி மலர்மகள்;

ஆங்கு,

பொன்னிறங்கொள் திருமேனி
பொலிவுறுநல் லெழில்கண்டேன்
குன்றனைய பயோதரத்திற்
குளிர்முத்த வடங்கண்டேன்
அன்றலர்ந்த செங்கமல
மங்கைமலர் மிசைக்கண்டேன்
வன்றிறற்கோ லணைச்செற்ற
வச்சிரதண் டமுங்கண்டேன்.

வெண்ணிறத்த சுரிசங்கம்
விளங்குதிருக் கரங்கண்டேன்
அண்ணலஞ்சீர்த் தனியாழி
அமர்ந்தவிறற் கரங்கண்டேன்
புண்ணியச்செங் கருடன்மிசை
பொருந்துதிரு வுருக்கண்டேன்
மண்ணகம்விண் ணகம்போற்றும்
வைணவியைக் கண்கண்டேன்.

கண்டுளங் களிகூர்ந் தண்டரு மவுணரும்
பாற்கடல் கடைந்த காலத் தார்த்தெழு
நஞ்சொடு மழுதொடும் நளிரிளம் பனிமதிப்
பிள்ளைப் பிறையொடு மொள்ளொளி வெள்ளைப்
பரியொடு மரம்பையர் பலரொடுந் தோற்றிய
கிள்ளை மென்மொழிக் கிளரொளி யணங்கே!
வேண்டுவார் வேண்டும் வரமருள் திருவே!
காண்டற் கரிய கமல வல்லி!
போக மோட்சம் பொருந்துவிப் பவளே!
ஆதியி றில்லா வாநந்த நிறைவே!
தூலசூக் குமத்துத் தோன்றிநின் றவளே!
மாலளிப் பவளே! மயக்கறுப் பவளே!
ஞாலமே பூண்ட நாதன் பானிறை
வேலையிற் றுயில விழைவொடு மவன்செய்
வேலையைப் புரியும் விமல வல்லி!
யானறி யளவையிற் றமிழ்புனைந் தேத்தினன்;
கானமர் புரிகுழற் கமலைநின் றிருவடி
வாழ்கென வேத்தி வணங்கிநின் றனனால்;
அவ்வரை,

ஆழியா னுளங்கவரு மணங்குமருள் வளஞ்சுரந்து
காழியா ரிளங்கோவின் கவிமருவு தமிழ்வாழ்க
ஊழிதோ றூழிதோ றுலவுகநற் றமிழ்நாடு
வாழியசெந் தமிழறிஞர் வாழியவென் றெணைநோக்கி

'செம்மொழிநற் றமிழ்ப்புலவ!
செவ்வியுற நீயுரைத்த
செம்மொழிநற் றமிழ்ப்பனுவற்
செய்யுள்விலை செப்'பென்றாள்;
அம்மொழியென் செவிப்படலு
மகங்குழைந்து முகமலர்வுற்
றம்மொழியென் செவிப்படுத்த
அன்னையடி பணிந்துரைப்பேன்:

வாழி நாரணன் சிரங்கொண் மெல்லடி
வனச வல்லியே! அவ்வை பாடலைக்
கூழ ளித்துற வாடி நின்றவோர்
குறவர் மாமக ளெளிது கொண்டனள்;

முதிர மால்வரைத் தலைவ ளுகிய
முடிவில் சீர்ப்புகழ்க் குமண மன்னவன்
சதுர ழிந்தபின் புலவன் வந்துறத்
தலைவி லைக்கொரு பனுவல் கொண்டனன்;

அதிய னஞ்சிபல் லாண்டு வாழ்வினை
அதிக மென்றெணு னரிய தெய்விகக்
கரிய நெல்லியின் கனியை யவ்வைசெங்
கைக்கொ டுத்தொரு கவிதை கொண்டனன்;

பனியின் மால்வரை யெல்லை யாதன்முப்
பத்தொ டெட்டியாண் டிறையு மூர்களும்
உனவெ னக்கொடுத் தும்பல் சேர்குமட்
டூரர் செந்தமிழ்ப் பாடல் கொண்டனன்;

எண்ணைந் தொன்றுநா ருயி ரம்பொனும்
ஏற்ற பாகமும் போற்றி நல்கியே
கண்ணி நார்முடிச் சேரல் காப்பியூர்க்
காப்பி யன்றருங் கவிதை கொண்டனன்;

தோட்டி தழ்த்தொடைச் சேரர் கோமகன்
சோர்வில் மைந்தனை யூரை நல்கியே
பாட்டி தழ்த்தொடைப் பயன ளித்தசீர்ப்
பரணர் பாடிய பனுவல் கொண்டனன்;

மத்த யானையான் வளவர் கோமகன்
மன்னு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநா ருயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டனன்.

இன்னணமுன் னுணடந்த
வியல்புசில வெடுத்துரைத்தேன்
கன்னியிளந் தமிழ்க்கவியெங்
கண்ணுதலைக் காரிருளிற்
பொன்னனையார் பாற்றாதாப்
போக்குமெனில் விலையுமுண்டோ
பின்னுரைப்பிற் கொள்வோர்தம்
பெருமதிப்பெங் கவிமதிப்பே.

கூழுடையார் கூழளிப்பார் கோமக்கள் பொன்னளிப்பார்
ஆழிமணி முடிவேந்த ரகனிலத்தை யெமக்களிப்பார்
கீழ்மக்கள் வசையளிப்பார் கேள்வியிலார் நகையளிப்பார்
வாழ்வளிப்பர் மாமுனிவர் மறைமுதல்வன் வீடளிப்பான்.

நீயளிப்ப தெதுவம்மா! நித்திலமும் பொற்குவையும்
சேயொளிசேர் மலர்ப்பதத்தின் சிறுபூழி யாகாவே!
வாசவனும் வடதிசையின் மரகதனும் பெறுநிதியம்
தேசுசெறி கால்விரல்சேர் சிறுபீலிக் கிணையாமோ?

கங்கைநீர்க் கரையடைந்தோர் கங்கையா டனைநோக்கி
அங்கைநீர்க் கிரந்துநிற்ற லறிவின்பாற் படுவதோ?
சங்குசேர் திருக்கரத்தோய்! தமியனே னிதயமெனும்
பங்கயத்து ணியுறையிற் பாரிலொரு குறையுளதோ?

எனவழுத்தி யிறைஞ்சிநின்றே
னிகபரத்து வருபொருளைத்
தினைபொறுத்த துணைமதியாச்
சிவாநந்த அருட்குரவன்
புனிதவடித் தொண்டெனுமெய்ப்
பொருள்படைத்த பெருமையினேன்
வனசமலர்ச் செழுந்திருவும்
வனப்பிளமை வளம்விளங்க

அணிகிற மதிமுகத் தருணகை யொளிர்தர
மணிமருள் செவ்வாய் மலரிதழ் விரித்துத்
'தமிழ்வளம் பொலிக! தமிழ்நாடு வாழ்க!
அமிழ்தன தமிழ்புனை யறிஞரீ வாழ்க!
பனுவல்கேட் டுவந்தனன்! பரிசில் கொண்மதி:
வாழ்கென வொருவரை வாழ்த்துவை யாயின்,
வாழுமன் னார்க்கு மலிவள மளிப்பேன்;
வீழ்கென வொருவரை விளம்புவை யாயின்,
வீழுமன் னார்பால் மேவேன் யான்,' எனப்
பரிபுர மலர்ப்பதங் காட்டித்
திருவின் செல்வியும் அருள்வழங் கினளே.

7. பெருந்தேவ பாணி

மணிவிளங்கு திருமார்பின் மாமலராள் வீற்றிருப்பப்
பணிதயங்கு நேமியும் பானிறத்த சுரிசங்கும்
இருசுடர்போ லிருகரத்தி லேந்தியமர் மாயோனும்
பங்கயத்தி லுறைவோனும் பாகத்தோர் பசுங்கொடிசேர்
செந்தழற்கண் ணுதலோனுந் தேருங்கா லீயென்பார்க்
கவரவர்த முள்ளத்து ளவ்வுருவா யல்லாத
பிறவுருவு நீயென்னிற் பிறவுருவு நீயேயாய்
அளப்பரிய நான்மறையா னுணர்த்துவதற் கரியோனே!

எவ்வுயிர்க்கு முயிரேயா யியங்குதனின் றொழிலாகி
அவ்வுயிர்க்க ணடங்கியே யருளாது நிற்றலினுல்
வெவ்வினைசெய் தவையிழந்து வெம்பிறவிக் கடல்சூழ்ந்த
அவ்வினையை யகற்றும நிற்பதுநின் னருளன்றே?

பல்லுயிரும் படைப்பதுநின் பண்பன்றே? பகலினுல்
வல்வினையின் வலைப்பட்டு வருந்தங்கூ ருயிர்தம்மை
நல்வினையே பயில்வித்து நடுக்கஞ்செய் பவைநீக்கி
அல்லல்வா யழுந்தாம லகற்றுவது மருளன்றே?

அழிப்பதுநின் றொழிலென்றே யறைந்தாலு முயிரெல்லாம்
ஒழித்தவற்றுள் ளுணர்வுகளை யொருவாம லுடனிருத்திப்
பழிப்பின்றிப் பல்காலு மிப்பரிசே பயிற்றுதலின்
அழிப்பதுவு மில்லையா லாங்கதுவு மருளன்றே?

வேள்வி யாற்றி விதிவழி யொழுகிய
தாழ்வி லந்தணர் தம்வினை யாயினை;
வினையி னீங்கி விழுத்தவஞ் செய்யு
முனைவர் தமக்கு முத்தி யாயினை.

இலனென விதந்தோர்க் கிலையு மாயினை;
உளனென வுணர்ந்தோர்க் குளையு மாயினை;

அருவுரு வென்போர்க் கவையு மாயினை;
பொருவற விளங்கிய போத மாயினை.

பானிற வண்ணனி, பனிமதிக் கடவுணி,
நீனிற வுருவுநீ, நிறமிகு கனலிநீ,
அறுமுக வொருவநீ, ஆனிமுற் கடவுணீ,
பெறுதிரு வுருவுநீ, பெட்பன வுருவுநீ.

மண்ணுநீ, விண்ணுநீ, மலையுநீ, கடலுநீ,
எண்ணுநீ, எழுத்துநீ, இரவுநீ, பகலுநீ,
பண்ணுநீ, பரவுநீ, பாட்டுநீ, தொடருநீ,
அண்ணல்நீ, அமலன்நீ, அருளுநீ, பொருளுநீ.
ஆங்க,

இனியை யாகிய விறைவநின் னடியிணை
சென்னியின் வாங்கிப் பன்னாள் பரவுதும்
மலர்தலை யுலகின் மன்னுயிர்க் கெல்லாம்
நிலவிய பிறவியை நீத்தல் வேண்டி
முற்றிய பற்றொடு செற்ற நீக்கி
முனிமை யாக்கிய மூவர்முத் திரையை
மயலற விளித்தநின் மலரடி
அரிய வன்ன யுயரிதிற் பெறவே.

8. விவேகாநந்த பஞ்சகம்

[1]

வாழியநின் றிருநாமம்! வாழியநின் னாடு!
வையகமே சிறந்ததென வானகத்தோர் வழுத்த
ஆழியிறை யுலகிருந்தோ அரனுலக மிருந்தோ
அருமுனிவ ருலகிருந்தோ அவனிமிசை யடைந்தாய்?

[2]

அடைந்ததுவும் அருட்டிறத்தின்
சிறப்பையுரைப் பதற்கோ?
ஆண்மையிது வெனக்காட்டிக்
கீழ்மையகற் றுதற்கோ?
முடிந்தமுடி பாகியவே
தாந்தத்தின் பொருளை
மொழிந்தவித்தை தனையகற்றி
முத்திநிலை தரற்கோ?

[3]

நிலையிழிந்த பாரதத்தின் குறையனைத்து நீக்கி
நிலைநிறுத்தும் பொருட்டோவிந் நிலவுலகின் மாந்தர்
கலைமொழிந்த பொருளனைத்துங் கடந்துநின்ற வுண்மைக்
கந்தழியைச் சார்வதற்கோ வந்தனைசீர்க் குருவே!

[4]

சீர்மருவு காசினியில் ஞானவொளி பரப்பத்
தேயத்துட் பாரதமே சிறந்ததென விசைப்ப
ஈரிருபா னுண்டுறைந்தா யெமதுதவக் குறையோ
இளவயதி லெமைவிடுத்தா யளவிலருட் கடலே!

[5]

அருட்செல்வஞ் செல்வமென அருந்தமிழ்வள் ளுவனார்
அறைந்தமொழிப் பொருளுணர்ந்தோய்!
அருந்துறவோர்க் கரசே!
பொருட்செல்வம் மனைசுற்றம் புகழ்துறந்த நினக்குப்
புவியனைத்துஞ் சுற்றமே; புகழனைத்து நினதே.
வாழியநின் றிருநாமம்! வாழியநின் னாடு!

9. குரு சரண ஸ்தோத்திரம்

[1]

ஈசனருண் மெய்ஞ்ஞான வொளிவிளக்கந் திருத்தி
இழிந்துழன்ற வாருயிரை யிருக்கையினி லிருத்தி
ஆசையெனுங் கனலவித்திவ் வேழையையன் றாண்ட
அணிமலர்ச்செஞ் சேவடியை யனைத்தினையும் விளக்கும்
தேசுசெறி பரிதியென்கோ? சஞ்சீவி யென்கோ?
திருவருளின் மழைபொழியுஞ் செழியமுகி லென்கோ?
பாசமொன்று நீர்மைதரப் பரிந்துவந்தென் சிரத்திற்
படிந்ததிரு வடியிணையை யடைந்ததுமற் புதமே!

[2]

காரிரும்பு நிகர்மனத்தைப் பொன்னாக்கி யுளத்திற்
கருதியவெல் லாமளித்துக் கரைகாணாப் பிறவி
ஆரிரும்பௌ வங்கடக்க வருள்செய்தெனை யாண்ட
அணிமலர்ச்செஞ் சேவடியை யனைத்தையும்பொன் னாக்கும்
சீரிலகு மணியென்கோ? பதுமநிதி யென்கோ?
தெய்வமுத்திக் கரைசேர்க்குஞ் சிறந்ததெப்ப மென்கோ?
பாரிலொன்று நீர்மையவாய்ப் பரிந்துவந்தென் சிரத்திற்
படிந்ததிரு வடியிணையை யடைந்ததுமற் புதமே!

[3]

நோவொழிய வினைப்பகற்றி நுவலநின்ற முதுமை
நோய்மரண முறுதலிலாத் தேவர்நிலை பெறுதற்
காவனசெய் தாநந்த நிறைவினையன் றளித்த
அணிமலர்ச்செஞ் சேவடியை யடைந்தவரைப் புரக்கும்
தேவதரு நிழலென்கோ? தெள்ளமுத மென்கோ?
சிவாநந்த நிதிபொதிந்த செழும்பேழை யென்கோ?
பாவமொன்று நீர்மைதந்து பரிந்துவந்தென் சிரத்திற்
படிந்ததிரு வடியிணையை யடைந்ததுமற் புதமே!

10. குரு தேவர் வாக்கியம்

கடவுள் வணக்கம்

எழுதொணு வுருவு மின்னவா றென்றிங்
 இயம்பொணு வடிவமு மறைகள்
முழுதுமாய்ந் திடினு மறியொணு வியல்பு
 முதலொடு முடிவுமாய் முனிவர்க்
கழிவிலா னந்த வெள்ளமாய் நின்ற
 அருளும்யா மறிகில மெனினும்
பழுதிலா வுரைநாண் மலரிறு லிறைஞ்சிப்
 பத்திசெய் தனுதினம் பணிவாம். 1

அரிதுணர் பனுவற் றுறைகளாய் மறையாய்
 அகண்டமாய்ப் பரவெளி தானுய்
விரவுபல் லுலகும் படைத்தளித் தழிக்கும்
 விரிஞ்சன்மா லரன்பணிந் தேத்துந்
தருமதே வதையாய்க் கவுரியா யிமயத்
 தனிவரைக் கொருமக வாகி
உரிமையோ டடிய ருளத்திடை வதியும்
 உமைபத விணைமலர் பணிவாம். 2

மண்ணுளார் செய்த மாதவப் பயனுய்
 வாரிசூ ழுலகிடை யுதித்து
விண்ணுளார் தாமும் விழையுமெய்ஞ் ஞான
 வேதநூன் முடிபினை விளக்கும்
அண்ணலாம் ராம கிருட்டிணர் பதத்தை
 அன்பொடு துதித்தவ ருரைத்த
எண்ணிலா மொழியு ளொருசில தமிழில்
 எழுதுவன் குருபதந் தொழுதே. 3

நூல்

தன்னையுணர்தல்

உன்னைநீ யுணர்வா யுணர்ந்திடி லிறையை
உணர்குவா யுன்னுள்யா னென்ன
மன்னிய தெதுவோ கால்கர முதிர
மாம்ஸமோ மற்றவ யவமோ
என்னநன் ருகச் சிந்தைசெய் வாயேல்
யானெனப் படுவதொன் றில்லாத்
தன்மையு முணர்வாய் வெறுமையாய் முடியுஞ்
சாற்றவே ருென்றிலாத் தகைமை.

[1]

தோற்றிய வீர வுள்ளியை யுரிக்கத்
தோல்வரும்; விதையிலா தாகும்;
சாற்றிடில் வெட்ட வெளியதாய் முடியும்
யானெனுந் தன்மையு மஃதே.
ஈற்றினின் மிஞ்சுஞ் சுத்தசித் தாகி
இயம்பொணு வாத்தும சொரூபஞ்
சாற்றுநா னிறக்கக் கடவுளுந் தோன்றும்;
சத்திய முணர்ந்துகொள் வாயே.

[2]

நானெனு முனைப்பு மிருவகைப் படுமால்
நண்ணுமீ தென்னுடை யுறையுள்
ஆனவிம் மனையு மென்னதே யிவனென்
அருமக னெனலபக் குவமாம்;
கோனெனை யாண்ட கடவுள்யா னடிமைக்
குமரன்யா னவற்கந்நான் முதலாய்
ஈனபந் தத்தில் விடுபட்டே னுணர்வேன்
எனைத்துமென் றிருத்தல்பக் குவமே.

[3]

'ஒரொரு மொழியா லடியனே னுண்மை
உணர்ந்திட வுரைத்திநீ,' என்னச்
சேர்பவன் றனக்கு மறுமொழி யாகச்
செப்புவார் நங்குரு தேவர்:
'சீரிய பிரம மொன்றுமே யுண்மை;
செகத்தென மருவிய தோற்றம்
பேருள வெல்லாம் பொய்யென வுணர்ந்து
பேச்சொழிந் திருத்திநீ,' எனவே.

[4]

நானெனு மகந்தை யுடல்விழு மளவு
நைந்திடா தெஞ்சிநின் றிடுமால்;
வானக நிமிர்ந்த தெங்கினிற் பழுத்த
மடல்விழுந் திடமடற் றழும்பு
தானக லாது நிலைபெறு மதுபோற்
சாருவ தெனினுமே னிலைக்கண்
ஆனவன் றன்னைத் தனைத்திடா தெஞ்சி
அற்பமா யிருக்குமிவ் வகந்தை.

[5]

'மேனிலை யடைந்தீர்! நாடொறுந் தியானம்
வேண்டுமோ?' எனவெங்கோன் வினவ,
ஞானநந் தத்தோ தாபுரி யதற்கு
'நாடொறுஞ் சுத்திசெய் திலமேல்
ஈனவெண் கலத்திற் களிம்புறும்; அதுபோல்
இதயத்தும்,' எனக்குரு தேவர்,
'ஆனபொற் கலம்போன் மாசுரு தியினை
அறிந்தவர் மனம்,'என வறைந்தார்.

வேறு

[6]

காட்டு நியாயங் கருதி லிரண்டுண்டு
மாட்டுந் தொகுத்தல் வகுத்த லெனவிவை;
ஓட்டின தாகும் விதையே; உணருங்கால்
மீட்டுமவ் வோடு விதையின தாமே.

வேறு

[7]

எனதெனு மெண்ணத் துள்ளே
இன்றெனு முண்மை தோன்றும்;
இனவொளித் தகைமை கண்டோன்
இருளையு முணர்ந்து கொள்வான்;
கனபழி யிதுவென் றோர்வான்
கருத்திற்புண் ணியமுந் தேர்வான்;
மனனிடைச் சரியி தென்ன
வல்லனே பிழையுங் காண்பான்.

[நான் என்பது நினைக்கப்படும் பொழுதே, நானல்லாதது நினைக்கப்பட்டதாகிறது. எவன் பிரகாசத்தை உணர்கிறானோ, அவன் இருளையும் உணர்கிறான். எவனுக்குப் பாவம் இன்னதென்பது தெரியுமோ, அவனுக்குப் புண்ணியமும் இன்னதென்பது தெரியும். எவனுக்குக் குணமின்னதென்பது தெரியுமோ, அவனுக்குக் குற்றமுமின்னதென்பது தெரியும்.]

[8]

பாதுகை யணிந்து கொள்ளிற்
பரந்தமுண் மேன் டந்து
போதலு மெளிது; ஞான
போதபா துகையைக் கொண்டால்
தீதிலா தெங்குஞ் சென்று
திரியலாம்; இடர்முண் மிக்க

பூதல வடவி யுள்ளும்
போகலாம்; துன்ப மின்றே.

[காலில் செருப்புப் போட்டுக்கொண்டால், முள்ளின் மேலும் சுலபமாய்ப் போகலாம். ஞானமாகிய செருப்பைப் போட்டுக்கொண்டால், உலகமெனும் முள் நிறைந்த வனத்தில் பயமின்றி எங்கும் திரியலாம்.]

வேறு

[9]

பண்டொர் நாயொ டுண்ட ஞானி
பக்கு வத்தை யோர்கிலாக்
கண்ட மாக்கள் பித்தெ னக்க
ருத்தி லெண்ணி நக்கனர்;
'விண்டு வோடு விண்டு வுண்ண
விண்டு வேந கைத்ததேன்?
உண்டு விண்டு வொன்றும்,' என்றவ்
வுண்மை ஞானி யோதினர்.

[முன்னொரு காலத்தில் ஓர் அவதூத சந்நியாசியார் இருந்தார். அவரை எல்லோரும் பித்தர் என்று எண்ணினர். ஒரு நாள் அவர் ஒரு கிராமத்தில் பிச்சையெடுத்து வந்து, ஒரு நாயுடன் உட்கார்ந்து உண்ணலானார். ஒரு கவளம் நாய்க்கு ஊட்டுவதும், மற்றொரு கவளம் தாம் உண்பதுமாயிருந்த அவர் கோலத்தைக் கண்டு ஜனங்கள் கை கொட்டிச் சிரித்தார்கள். இது கண்ட ஞானியார், 'ஏன் நகைக்கிறீர்கள்? விஷ்ணு விஷ்ணுவுடன் உட்கார்ந்து உண்பதைக் கண்டு விஷ்ணுவே சிரிப்பதேன்? உள்ளதெல்லாம் விஷ்ணு மயம்,' என்று கூறினர்.]

[10]

இறைவ னைப்பு றத்து நாட
எண்ணல் பேதை மைத்தனம்;
உறையு நெஞ்சு ளென்ன வோர்தல்
உண்மை ஞான மாகுமால்;

அறிவ னிங்க மர்ந்தி ருப்பின்
அங்கு மாகு மம்புய
நறைகொ ளுண்ம லர்ப்ப தத்தை
நண்ணி வாழ லாகுமே.

[ஈசுவரனை வெளியே தேடுதல் அஞ்ஞானம். தனக்குள்ளேயே இறைவனிருப்பதை உணர்தலே ஞானம். இகத்தில் அடைந்தோனே பரத்திலும் அடைகிறான். அதாவது, இங்கு உண்மையை உணர்ந்தோனே அங்கும் அவருடைய பாதகமலங்களிற்சேர்ந்து வாழ்வான்.]

தலைவனது இயல்பு

[1]

மன்னுயிருக் குயிராக விறைவனிருந்
திடுமரபை வழுத்தக் கேண்மோ:
பொன்னுடைய புரவலர்தம் மனையினிடைத்
திரைமறைவிற் பொருந்து கின்ற
மின்னனையார் புறந்தோற்றார் யாவரையும்
தாங்காண்பார்; மேவு மீசன்
அன்னதுபோ லெவ்விடத்து மெவ்வெவர்தம்
அகத்திடையு மமர்ந்து நிற்கும்.

[ஈசுவரன் மனிதனிடம் எவ்விதமிருக்கிறனென்பது உனக்குத் தெரியுமா? தனவந்தர்களுடைய வீட்டில் ஸ்திரீகள் திரைமறைவிலிருப்பதைப் போலவே அவனிருக்கின்றான். அந்த ஸ்திரீகள் எல்லாரையும் பார்க்க முடியும். ஆனால், அவர்களை ஒருவரும் காண முடியாது. இதே மாதிரியே கடவுள் ஒவ்வொருவரிடமும் அமர்ந்திருக்கிறான்.]

[2]

செய்யவொளி தருந்தீப மதன்றுணையால்
உணவமைப்பர் சிலர்;சில் லோர்கள்
பொய்ம்மருவு சிட்டமைப்பர்; பாகவதம்
படிப்பர்சிலர்; புரையில் தீபத்

தெய்துபிழை யொன்றிலையாம்; இறைவர்திரு
நாமத்தா லியைவ வீடும்
வையமிசைக் களவுமெனிற் சித்திதரும்
இறைவனுக்கோர் மாசுண் டாமோ?

[வெளிச்சந்தருவது விளக்கின் இயற்கை. அவ்வெளிச்சத்தினுதவியால், சிலர் சமைக்கலாம். சிலர் பொய்ப்பத்திரங்கள் எழுதலாம். மற்றும் சிலர் பாகவத பாராயணம் செய்யலாம். இப்படியெல்லாம் செய்வது விளக்கின் குற்றமோ? அதுபோல, பகவந்நாமத்தின் உதவியால் முத்தியடையச் சிலர் முயல்வதும், வேறு சிலர் களவு செய்வதில் ஜயமடைய வேண்டுமென்று அவர் திருநாமத்தை ஜபிப்பதும் அவருடைய தப்பாமோ?]

[3]

கற்பதருப் போலீசன்; கருதியதெல்
லாந்தருவன்; கல்வி கற்று
விற்பனநீ தாசனத்தை விழைந்தடைந்த
வறியவன்சேய் விரும்பு செல்வம்
பெற்றவனென் றுவகையுறி லாமென்னும்;
பின்னவன்முன் பெரிது சிந்தித்
தெற்றெனக்குப் பயன்வந்த தென்செய்தேன்
எனிற்செய்த தென்னே வென்னும்.

[ஈசுவரன் கற்பகத்தருவைப் போன்றவன். நீ அவனிடம் தேடுவது உனக்குக் கிடைக்கும். ஒவ்வொருவனும் தான் வேண்டுவதைப் பெறலாம். ஓர் ஏழையின் மகன் கல்வி கற்று, உயர்ந்த நீதிபதி ஸ்தானத்தை அடைந்தால், தான் சௌக்கியமாக இருப்பதாக நினைக்கிறான். கடவுளும், 'நீ அப்படியே இரு' என்று அவ்வெண்ணத்தையே திருப்பிக் கூறுகிறார். பிறகு அந்த நீதிபதி உபகாரச் சம்பளம் பெற்று, பகவானுடைய கருணையால் விஷயங்களைச் சரியாக அறிய ஆரம்பிக்கிறான். அப்பொழுது அவன், "நான் என்ன உண்மையான காரியம்

இல்வாழ்க்கையில் செய்திருக்கிறேன்?'' என்று தனக்குத் தானே கேட்டுக்கொள்கிறான். அப்பொழுது கடவுள், ''ஆம். உண்மைதான். நீ என்ன செய்திருக்கிறாய்?'' என்று அவன் வார்த்தைகளையே திருப்பிக் கூறுகிறார்.]

[4]

சுத்தபரப் பிரமமெனச் சொல்லியநிர்க்
குணநிறைவே தோற்ற மாய
சத்தியினின் வேறிலையாற் பரம்பொருளே
தொழிலின்றித் தனியாய் நிற்பின்
சுத்தபரப் பிரமமதாம் தொழில்மேவிப்
படைத்தளித்துத் துடைக்கு மென்னச்
சித்தமிசை நினைக்குங்காற் சத்தியெனும்
பெயரோடு திகழா நிற்கும்.

[பிரமனுக்கும் சத்திக்கும் வேற்றுமையொன்றுமில்லை. பரமாத்துமன் தொழிலொன்றும் செய்யாமலிருக்கும் போது அவன் 'சுத்தப் பிரமன்' எனப்படுவான்; தொழில் கொண்டு ஆக்கல், அளித்தல், அழித்தல் செய்யும்போது அவன் 'சத்தி' என்னும் பெயரையடைவான்.]

[5]

'இன்னமர பிதுவருமென் றியைந்தமுறை
நடப்பதன்றி யியல்பின் வேறாய்ப்
பின்னுமொரு தொழில்புரித லிறைவருக்கு
மியலாது பெரியோய்!' என்னச்
சொன்மதுர பாபுமொழி கேட்டிறைவர்க்
கியலாத தொன்றின் றென்று
மன்னுமெங்கள் குருதேவர் இசைத்திடலுஞ்
செவிப்படுத்த மதுர பாபு
'செம்மலரைத் தரும்பூண்டில் வெண்மலரைத்
தரவலதோ தெய்வம்?' என்ன,
'அம்மரபி னவர்நினைப்பி னும்,' என்று
சின்னாளி லங்கு நின்ற

செம்மலர்ப்பூஞ் செடிவெள்ளைச் செழுமலரைத்
தரவையன் சென்று காட்ட,
விம்மிதராய், 'ஐயநின்னெ டுரையாடேன்,'
எனப்பாபு விளம்பி நின்றார்.

[ஒருநாள் ஈசுவரனைப்பற்றிச் சம்பாஷிக்கும்போது, மதுர பாபு, "ஈசுவரரும் இயற்கை நியதிகளின்படிதான் நடக்க வேண்டும்; தம்மிஷ்டப்படி நடத்தல் இயலாது," என, ஸ்ரீ ராமகிருஷ்ணர், "அஃதெப்படியாகும்? அவர் தம்மிஷ்டப்படி நடப்பார்," என்றார். அதற்கு மதுரபாபு, 'அவரிச்சை ஒன்றாலேயே, இந்தச் செம்மலர்ச் செடியை வெண்மலர்கள் பூக்கச் செய்ய முடியுமோ?" என்றார். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், "நிச்சயமாக அவர் அப்படிச் செய்யக்கூடும். அவர் இச்சையாயின், இச்செடி வெண்மலர்கள் பூக்கக் கூடும்," என்றார். ஆனால், மதுரர் திருத்தியடைந்ததாகத் தோன்றவில்லை. சில நாட்கள் கழித்து, தக்ஷிணேசுவரத்திலுள்ள மேற்கூறிய புஷ்பச் செடி, ஒரு கிளையில் வெண்மலர்களும், மற்றொரு கிளையில் சிவப்பு மலர்களும் புஷ்பிக்கப்பெற்றிருந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்விரண்டு சிறு கிளைகளையுமுடைய பெரிய கிளையை மதுரபாபுவிடம் கொண்டுபோனார். அவர் ஆச்சரியங்கொண்டு, "ஸ்வாமி, இனிமேல் நான் உங்களுடன் எதைப்பற்றியும் வாதம் செய்வதில்லை," என்று கூறினார்.]

[6]

உருவமில்லா னுவானு முருவமுள்ளா
னுவானு மொருவ னேயாம்;
உருவமில்லா நீரருவ முறைநீரைப்
போற்றிகழ்வ துருவ மாகும்;
உருவமில்லா நீர்தானே யுறையினுறை
நீராகி யுருவ மாகும்;
உருவமில்லா நீராகு முறைநீரும்
உருகியக்கா லுருவம் போமே.

[ஈசுவரன் ரூபமுடையவனா, ரூபமில்லாதவனா என்பது உனக்குத் தெரியுமா? ஈசுவரன் ரூபி, அரூபி என்று சொல்வது உறைந்த பனிக்கட்டியைப்பற்றிப் பேசுவது போலாம். ஜலம் உறைந்தால், அதற்கு உருவமுண்டாகிறது. அதே பனிக்கட்டி நீராகக் கரையும் போது உருவம் மறைந்து போகிறது.]

வேறு

[7]

'ஐயவதி சயமிதுபா ரெங்கள் பாட்டன்
அட்டவசுக் களிலொருவ னைந்த டக்கி
மெய்யுணர்ந்தும் மாயையினிற் பட்டுக் கண்ணீர்
விடுகின்றான்,' எனநரன்நா ரணற்குச் செப்பப்
பொய்யுரையா விட்டுமரும் புகல்வார்: 'கண்ணா!
புன்மாயை யாலல்ல; நினது லீலைச்
செய்கையுண ராதழுதேன்; ஐவர் துன்பந்
தீர்ந்ததிலை நீதுணையாச் சேர்ந்து மென்னோ?'

[பீஷ்மாசாரியார், அம்புப்படுக்கையில் படுத்துக்கொண்டு, உடலை நீக்குவதற்கு ஏற்ற ஸமயத்தை எதிர்பார்த்துக்கொண் டிருந்த போது அவர் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. இதைப்பார்த்த அர்ஜுனன், ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி, "ஆ! கிருஷ்ணா, என்ன ஆச்சரியம்! ஸத்தியந் தவறாதவராயும், இந்திரியங்களையடக்கினவராயும், ஆத்துமஞானம் நிறைந்தவ ராயும், அஷ்டவசுக்களுள் ஒருவராயுமிருக்கும் என் பாட்டனார் கூட மாயையால் சிக்குண்டு கண்ணீர் சொரிகின்றாரே!" என்றான். இதைக் கிருஷ்ணர் பீஷ்மருக்கு அறிவிக்க, அவர், "ஹே கிருஷ்ணா, மாயையால் கட்டுண்டு நான் கண்ணீர் விட வில்லை என்பதை நீ அறிவாய். உன்னுடைய லீலை எனக்குக் கொஞ்சமேனும் விளங்கவில்லையே என்பதுதான் என்னைக் கண் ணீர் விடச் செய்கிறது. எந்தப் பகவானுடைய திருநாமங்களை ஸ்மரிப்பதால் ஜனங்கள் துன்பங்களைத் தாண்டிச் செல்கிறார் களோ, அவன் பாண்டவர்களுக்குத் தேரோட்டியாய் இருந்து

உதவிபுரிகிறான். அப்படியிருந்தும், பாண்டவர்கள் படுந்துன்பம் முடிந்தபாடில்லையே!" என்றார்.]

[8]

ஆரணங்கள் புகழ்கின்ற வார ணாசி
அருநகரை மதுரபா புடனடைந்த
பூரணரெங் குருதேவர் திரையி லிங்கப்
புனிதரைக்கண் 'டிறையொருவன்; புலமிலாரெக்
காரணத்தாற் பலரென்றார்?' என்ன, மௌனி
கரத்திலொரு விரல்காட்டிச் சலன மற்றார்,
'தேரநின்ற தத்துவநூல் பலவா யோதச்
சிந்தையடக் கினருணர்வுக் கொன்றாம்,' என்றே.

[மதுரபாபு காசி யாத்திரை சென்றபோது ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவருடன் சென்றார். அப்புண்ணிய க்ஷேத்திரத்தில் இருந்த போது, ஸ்ரீ ராமகிருஷ்ணர், திரைலிங்க சுவாமிகளைத் தரிசித்து, "ஈசுவரன் ஒருவனிருக்கும்போது, ஜனங்கள் பல ஈசுவரர்களைப்பற்றிப் பேசுவானேன்?" என்று கேட்டார். ஸ்வாமிகள் மௌனவிரதம் அனுஷ்டித்து வந்ததால், ஒன்றும் பேசாது, குறிப்பாய் ஒரு விரலை உயர்த்தி, நிஷ்டையிலாழ்ந்தார். அவர் அப்படிச் செய்ததன் பொருளென்னவெனில், 'தியானத்தினால் ஒருவன் இறைவர் ஒருவரேயென அறிகிறான். ஆனால், தத்துவ விசாரத்தினால் ஈசுவரர் பலர் என்னுமுணர்ச்சி தோன்றுகிறது,' என்பது.]

[9]

கரைகடந்த நீர்ப்பரப்பா முவரி நாப்பட்
கடுங்குளிரா லுறைந்தநீர்க் கட்டி தோன்றி
வரையெழுந்த வெங்கதிரா லுருகிப் போகும்
மரபினைப்போ லன்பரன்பின் வலிமை யாலே
உரைகடந்த பூரணமாங் கடவுள் பல்வே
றுருவுடனே தோன்றும்;பின் னுண்மை ஞானப்

பரிதியெழுந் திடவுருவ மறைந்து போகும்;
பார்க்குமிடத் தருவமாம் பரம தாமே.

[ரூபியான ஈசுவரரும் அரூபியான ஈசுவரரும் வேருனவர்களல்ல. எவர் ரூபத்தோடிருக்கிருரோ, அவரே ரூபமில்லாதவராகவுமிருக்கிருர். தம் பக்தனுக்கு ஈசுவரர் பல ரூபங்களுடன் தரிசனமளிக்கிருர். அகன்று பரந்திருக்கும் கடற்பரப்பைப் பற்றிச் சற்று யோசித்துப்பார். எந்தத் திக்கில் பார்த்தபோதிலும் நிலம் தெரிவதில்லை. இங்கும் அங்கும் அதிகக் குளிரினல் உறைந்த பனிக்கட்டிகளே பார்வைக்குத் தென்படுகின்றன. இதைப்போலவே பகவான்மீதுள்ள தீவிரபக்தி என்னும் குளிரினல் எங்கும் நிறைந்த எல்லேயற்ற பரம்பொருள், உறைந்து, அதாவது உருவமடைந்து, பக்தனுக்குத் தோன்றுகிருர். மேலும், சூரியன் உதயமானவுடனே பனிக்கட்டி கரைந்து போவது போலவே, ஞானசூரியன் உதயமானவுடன் ரூபியான ஈசுவரர் மறைந்துவிட, அரூபியான ஈசுவரரே காணப்படுகின்ருர்.]

மாயையினியல்பு

[1]

மைந்த! மாயையின் றன்மையை யுணர்தியோ?
மன்னுநீர்க் குளத்தின்மேல்
வந்த பாசியை யகற்றினு லகன்றிடும்;
மறுகணத் தொன்ருகும்;
இந்த நீர்மையே சாதுசங் கத்தினுல்
இயன்றநல் விசாரத்தாற்
சிந்தை தூய்மையாங் கணத்தினி லவாவிருட்
டிரைமறைத் திடுமன்றே.

[மாயையின் இயற்கை என்னவென்று நினைக்கிருய்? அது ஒரு குளத்தில் மிதந்துகொண்டிருக்கும் பாசியைப் போன்றது. வேண்டிய போது அப்பாசியை நீக்கிவிடலாம். ஆனல், (நாம்

கையெடுத்தவுடனே) அது மறுபடியும் அந்த இடத்தை மறைத்துக்கொள்ளும். அதைப்போலவே, நீ சிந்தனை செய்து ஸத்ஸங்கம் செய்யும் வரையிலும் (இவ்வுலகத்தைப் பற்றின) உண்மை விளங்கும். ஆனால், அவைகளை விட்டு நீங்கினவுடனே இம்மண்ணுலக ஆசைகள் மாயையென்னும் திரையால் உண்மையை மறைத்துவிடும்.]

[2]

பல்லி லேகொடு விடமமைந் திருப்பினும்
பாம்புக்கோர் குறையில்லை;
கொல்லும் நீர்மைய தேனைய வுயிர்க்கிந்தக்
கொள்கைபோற் சகத்தோற்றம்
புல்லு மீசன்பா லென்னினும் புறத்தனுப்
பொருவிலான் றனிநிற்பான்;
சொல்ல நின்றபொய்ச் சகமுள பொருளெனத்
தோற்றுவ தெமக்காமே.

[பாம்பின் பற்களில் விஷமிருந்த போதிலும் அப்பாம்பு கொஞ்சமேனும் தீங்கடைவதில்லை, அது இறப்பதுமில்லை. ஆனால், பாம்பு எதையேனும் தீண்டினால், தீண்டப்பட்டதற்கு அந்த விஷம் கெடுதி செய்கிறது. இதைப்போலவே இம்மாய உலகம் ஈசுவரனிடம் நிலை நிற்கின்றது. ஈசுவரனே இவ்வுலகத்திற்கப்பாலும் உள்ளும் அடங்கி இருக்கிறான். நமக்குத் தான் மாயமான இப்பிரபஞ்சம் நிலைத்திருப்பதாகத் தோன்றுகிறது.]

[3]

மாயை யென்பதுந் தயையென மொழிவதும்
வகுத்துரைத் திடின்மாயை
தாயர் தந்தையர் மனைமகார் சோதரர்
தமரெனு மிவர்மீது
போய சிந்தையாம்; இறையெங்கு முளனெனும்
பொருவில்ஞா னத்தால்வந்

தேயு மெவ்வுயிர் மீதினுஞ் சென்றிடும்
இயல்பது தயையாமே.

[**'மாயை' (பாசம்)** என்பதற்கும் **'தயை'** என்பதற்குமுள்ள வேற்றுமையென்ன? பெற்றோர், உடன் பிறந்தோர், மனைவி, மக்கள் முதலிய சுற்றத்தாரிடம் இருக்கும் பந்தமும் அன்புமே **'மாயை'** எனப்படும். எல்லா ஜீவர்களிடமும் ஸமமாய்த் தோன்றும் அன்பு, **'தயை'** எனப்படும். ஈசுவரன் ஸர்வாந்தர் யாமி என்ற அறிவிலிருந்தே இந்தத் **'தயை'** உண்டாகிறது.]

[4]

பேய்பி டித்தவன் றன்னைப்பேய் பிடித்திடும்
பெற்றியை யுணரிற்பேய்
போய கன்றிடு மொருகணப் பொழுதினில்;
புரையுறு மிருவாதை
மேய சிவனு மாயைபற் றியதென
மெய்யுணர் வெய்துங்கால்
மாயை சென்றிடத் தூயனாய் நின்றிடு
மரபுமிங் கிதுபோலும்.

[பேய் பிடித்தவனுக்குத் தன்னை ஒரு பேய் பிடித்துக் கொண்டது என்ற அறிவு தோன்றினால், உடனே அந்தப் பேய் அவனை விட்டு விலகுகின்றது. அதைப்போல, மாயையால் பிடிக்கப்பட்ட ஜீவன், தான் ஏமாந்ததை அறிந்தவுடனே மாயை யிலிருந்து விடுபடுகிறான்.]

[5]

அன்னை சானகி யிடைநிற்பி னிலக்குவன்
அண்ணலைக் காணானும்;
பின்னை யங்கவள் விலகிடிற் காண்பன்;இப்
பெற்றியிற் சீவான்மா
பன்னு மாயையாந் திரையிடைக் கதுவிடிற்
பரமனைக் காணாதாம்;

முன்னர் நின்றவத் திரையகன் றிட்டபின்
முதல்வனைக் காண்கும்மே.

[மாயையென்னும் திரையானது நம் பார்வையிலிருந்து ஈசுவரனை மறைத்து வைக்கின்றது. இந்தத் திரை நீங்கும் வரையிலும் பரமாத்துமனை நாம் அறிய முடியாது. உதாரணமாக, ஸ்ரீராமர், லக்ஷ்மணருக்கு இரண்டு மூன்றடிகள் முன் செல்வதாகவும் இவ்விருவருக்கும் நடுவில் சீதாபிராட்டியார் போவதாகவும் வைத்துக்கொள்வோம். இதன்படி ஸ்ரீராமரே பரமாத்துமன்; லக்ஷ்மணரே ஜீவன்; சீதா பிராட்டியாரே மாயை. ஜானகி பிராட்டியார் இருவருக்கும் நடுவில் இருக்கும் வரையில் ஸ்ரீராமரை லக்ஷ்மணரால் பார்க்க முடியாது. எம் மன்னையார் சீதா தேவியார் கொஞ்சம் வழிவிட்டு நின்றால்தான் லக்ஷ்மணர் ஸ்ரீராமரைப் பார்க்க முடியும்.]

[6]

வித்தை மாயையு மவித்தைமா யையுமென
விளம்பிரண் டிதில்வித்தை
சித்தத் தால்விடல் விவேகமாய் விமலர்பாற்
சிவனைப் புகுவிக்கும்;
வைத்த காமமே லோபமோ கம்மதம்
வெகுளிமாச் சரியம்மாய்
மித்தை யாமுல கினிற்றளை யவித்தையும்
வித்தையா லகல்வாமே.

[மாயை இரு வகைப்படும். **'வித்யா மாயை'** என்பது நம்மை ஈசுவரனிடம் அழைத்துச்செல்வது. **'அவித்யா மாயை'** என்பது நம்மை ஈசுவரனிடமிருந்து பிரிப்பது. வித்தை, விவேகம், வைராக்கியம் என இரு வகை. அவித்தை, காமம் (ஆசை), குரோதம் (கோபம்), லோபம், மோகம், மதம், மாச்சர்யம் (பொறாமை) என ஆறு வகைப்படும். இதுவே நம்மை இப் பொய்யுலகில் பந்தப்படுத்தும் சங்கிலி போன்றது. இந்த அவித்தை வித்தையால் நாசமடைகின்றது.]

[7]

கலங்க னீரிலே கதிரவன் மதியுருக்
காட்டினுந் தெளிவாகப்
புலங்கொ ளற்கரி தாகிய தன்மைபோற்
புந்தியி னுனென்றும்
இலங்கு மிப்பொரு ளெனதென் றுமியம்பிடும்
எண்ணமா கியமாயை
விலங்கு சூழ்ந்திடி லிறையருட் பிரபையாம்
விளக்கமுங் குறைவாமே.

[கலங்கியுள்ள நீரில் சந்திர சூரியர்களுடைய பிரதிபிம்பத்தைத் தெளிவாய்க் காண முடியாதது போல, 'நான், எனது' என்னும் மாயையால் இலங்கியிருக்கும் புத்தியிலும் ஈசுவரனுடைய அருட்பிரகாசத்தைச் சரியாய் உணர முடியாது.]

[8]

பரிதி வானவ னுலகினுக் கொளியினைப்
பரப்புவன்; சிறுமேகம்
மருவி முன்வரில் மறைபொரு ளாவன்;இம்
மரபினி லுலகெங்கும்
விரவு நீர்மையிற் சச்சிதா நந்தமாய்
விளங்குமெய்ப் பொருளாகிப்
பரனும் புல்லிய மாயையாந் திரையினுற்
பார்க்கரும் பொருளாவான்.

[உலகனைத்துக்கும் ஒளியைக் கொடுக்கும் சூரியன் சிறு மேகத்தால் மறைக்கப்படுவதுபோல, எங்கும் நிறைந்து ஆனந்தமாய் விளங்கும் பரம்பொருளும் துச்சமான மாயையாகிய திரையால் மறைக்கப்படுகிறது.]

[9]

குளத்திற் பாசியை யொதுக்கினு லொதுங்கும்பின்
கூடிடுங் கூடாமற்

பிளக்கு மூங்கிலாற் றடைசெயி னிலைக்குமிப்
பெற்றியி னியன்மாயைக்
களக்க நீங்கிடு மீசர்பா லன்பினுற்
கருதுஞா னந்தன்னுல்
விளக்க மல்கிய சச்சிதா நந்தமே
வெளியுறப் புலனுகும்.

[ஒரு குளத்தில் மிதந்துகொண்டிருக்கும் பாசியை நீ ஒதுக்கினுல் ஒதுங்கும். அது நீ கையெடுத்த உடனே முன்னிருந்தபடி ஒன்று கூடும். அது போலவே, மாயையை நீக்க முயன்ருல், மறுபடியும் வந்தடையும். ஆனுல், ஒரு மூங்கிற்பாயினுல் ஒதுக்கின பாசியைத் திரும்பவொட்டாது செய்ய முடிவது போல, ஞானம் பத்தி என்னும் தடைகளால் மாயையை ஒதுக்கி, அது திரும்பவும் வரவொட்டாது செய்ய முடியும். அப்பொழுது தான் நாம் சச்சிதாநந்தத்தைக் காண்போம்.]

[10]

தக்க ணேசுரத் துறைந்தவொ ரருந்தவர்
தபனனை மூகின்மேவி
அக்க ணத்தினி லகன்றது கண்டுநக்
கார்த்தனர்; 'ஏதையா
நக்க காரணம்?' என்றலும் 'சிவனை
நாடுமா யைத்திரையி
தொக்கு மேயன்ருே கணத்திருள் மறுகணத்
துளதுமுன் னிலை'என்ருர்.

[தக்ஷிணேசுவரத்தில் வசித்துவந்த ஒரு மஹான், ஒரு நாள், மேகமொன்று பரவியதால் வானம் இருண்டதையும், அம் மேகத்தைச் சிறிது நேரத்திற்கெல்லாம் பலமான காற்று அடித்துச் சென்றதையும் கண்டு, சிரிக்கவாரம்பித்தார். "நீங்கள் சிரிப்பதற்குக் காரணமென்ன?" என்று நம் குருதேவர் கேட்க, மஹான் தாம் கண்டதைக் கூறி, "இவ்வாழ்க்கையில் நம்மைச் சூழ்ந்திருக்கும் மாயையும் இத்தகையதே," என்று கூறினர்.]

அவதார புருஷரியல்பு

[1]

மருங்காகப் பலமரங்க ளொருங்குபிணைத்
தமைத்ததெப்ப மரபி ஞலே
இரும்பார மிகத்தாங்கி நூற்றுவரைத்
தன்மேற்கொண் டெளிதாய்ச் செல்லும்;
கருங்காகப் பொறைசுமவாச் சிறுதுணிநீர்
அமிழ்ந்திடுமால்; கடவுண் முன்ஞேர்
வருந்தாது பலருக்குங் கதியளிப்பார்;
தமைக்காக்க வல்லார் சித்தர்.

[பல மரங்களைப் பிணைத்துச் செய்யப்பட்ட தெப்பம் நூற்றுக் கணக்கான மக்களை நீரின்மேல் எடுத்துச் சென்ருலும் அமிழ்வதில்லை. ஆனல், ஒரு சிறு மரத்துண்டோ, ஒரு காகம் அதன்மேல் உட்கார்ந்தாற்கூட அமிழ்ந்துவிடும். அவதார புருஷர் முற்கூறிய தெப்பம் போன்றவர். அவரது கருணையிஞல் பலர் முத்தியடைகின்றனர். சித்தரோ, மிகவும் சிரமத்துடனேதான் முத்தியடைய முடியும்.]

[2]

விரைந்தாங்கு வழிச்சென்று நிலையடையு
மதுவன்றி வேருய் நின்ற
பரந்தாங்கு சகடங்கள் பலவற்றைக்
கொண்டுய்க்கும் பரிசிற் ருய
உரந்தாங்கு மெந்திரநல் வண்டியைப்போற்
பலர்தம்மை யொருங்கு சேரக்
கரந்தாங்கி யிறைவர்திருக் கமலப்போ
தடைந்துநிற்பர் கடவுண் முன்ஞேர்.

[நீராவி இயந்திரம் தான் போய்ச் சேரவேண்டிய இடத்திற்குப் போய்ச் சேருவதோடு, சுமைகள் நிறைந்த பல வண்டிகளையும் இழுத்துச் செல்கின்றது. இது போலவே, அவதார புருஷர் தாம் செல்ல வேண்டிய இடத்தை அடைவதோடு எண்ணிறந்தோரை ஈசனடிக்குக் கொண்டு சேர்க்கின்றனர்.]

மக்கள் பல்வேறு படியினரெனல்

[1]

தலையணை யுறைக்கொப் பாகச்
சாற்றலா மனிதன் றன்னை;
நிலவிய கருமை செம்மை
நிறத்தின வெனினு முள்ளே
இலகுபஞ் சொன்றே; அன்பன்
எழிலிலா னழகன் றூர்த்தன்
உலகினிற் பலரென் றாலு
முள்ளுறை தெய்வ மொன்றே.

[மனிதனை ஒரு தலையணையின் உறைக்கு ஒப்பிடலாம். உறைகள், கறுப்பு, சிவப்பு, பச்சை முதலிய பல நிறங்கொண்டவைகளாயிருக்கும். ஆனால், அவைகளுக்குள்ளேயிருப்பது பஞ்சு ஒன்றேயாம். இவ்வுலகில் சிலர் அழகாயிருக்கின்றனர்; சிலர் அழகின்றியிருக்கின்றனர்; சிலர் நல்லவர்களாயிருக்கிறார்கள். சிலர் கெட்டவர்களாயிருக்கிறார்கள். ஆனால், இவர்களெல்லாரிடமும் உள்ளுறையும் ஈசுவரன் ஒருவனே.]

[2]

முறமுமி தன்னைத் தள்ளி
முழுமணி கொள்ளு மாப்போல்
இறைவனை விரும்பிப் பொன்னை
இச்சையை யிகழ்வர் மேலோர்;
நிறைபொருள் தம்முள் நல்ல
நீக்குநெய் யரியைப் போல
அறிவனை யெள்ளிப் பொன்பெண்
அவாவிற்பட் டுழல்வர் மற்றோர்.

[அரிசியும் உமியும் சேர்ந்திருந்தால், அவற்றை முறத்திலிட்டுத் தூற்றும்போது, உமியைச் சிதறவிட்டு, அரிசியை முறம் நிறுத்திக்கொள்கின்றது. அது போலவே, பெரியோர் இறை

வனை மனத்தில் நிறுத்தித் தியானம் செய்வர். ஆனால், தாழ்ந் தோரோ, பன்றுடையானது நெய்யை விட்டு அழுக்கை நிறுத் திக்கொள்வதுபோல, ஈசுவரனை மறந்துவிட்டு, பொன்னையும் பெண்ணையுமே முக்கியமாகக் கொள்வர்.]

[3]

சாணத்தை யுருட்டும் வண்டு
தாமரை மலருட் புக்கால்
நாணிப்பின் வாங்கு மாப்போல்
நவையுறு முலகிற் பட்டோர்
மாணுற்ற சபையி லீசன்
மகிமையை யுரைத்தல் கேளார்
வீணிற்றம் பொழுதைப் போக்க
விழைந்துவெற் றிடங்கள் செல்வார்.

[சாணத்தை உருட்டிச் செல்லும் வண்டானது தாமரை மலருள் செல்லாது (அது தன்னியற்கையினாலும் செய்யும் காரியத்தினாலும் தாமரை மலருட்செல்வதை வெறுக்கும் என்க.) அது போல, இவ்வுலக வாழ்க்கையில் ஈடுபட்டு அதி லேயே வீழ்ந்துழல்பவர் ஈசனது மகிமையும் அவர் திருநாமமும் சொல்லப்படுமிடங்களிற்சென்று அவைகளைக் கேளார். ஆனால், அவர்கள் வீண் விஷயங்களைப்பற்றிப் பேசுவதையே பெரிதாக மதித்து அவைகள் பேசப்படுமிடத்தையே நாடிச்செல்வார்கள்.]

[4]

வலைப்படு மீனுட் சில்ல வலையினைக் கிழித்துச் செல்வ;
உலைத்திங்கு மங்கு மோடி யொருசில முயன்று நிற்ப;
நிலைப்படக் கிடப்ப சில்ல; நித்தவர் முமுக்ஷுத் வத்தோர்
மலத்தினற் பிணிப்புண் டோர்கள் வகையுமிவ் வகைய
[தாமே.

[செம்படவன் வலைக்குள் பல மீன்கள் அகப்பட்டுக்கொள் கின்றன. அவற்றுள் சில வெகு பலமாக வலையைத்தாக்கி அதைக் கிழித்து வெளிச்செல்லும். சில, இங்குமங்கும் ஓடி அலைந்து தப்பித்துக்கொள்ள இயலாது சும்மா விழிக்கும்.]

மற்றுஞ்சில, ஒன்றுஞ்செய்யாது இருக்கும். இது போலவே, மானிடர்களுள் முமுக்ஷுக்கள் உலகமாகிய பந்தத்திலிருந்து தம் சத்தியால் மீண்டு செல்கின்றார்கள். சிலர் சிரமப்பட்டும் போதுமான சத்தியில்லாதவராதலால் தப்பித்துக்கொள்ளாது இருக்கின்றனர். சிலரோ, இவ்வுலகத்திலிருந்து (சமுசார பந்தத்திலிருந்து) விடுபட இச்சிப்பதேயில்லை.]

[5]

பூவிலை பகர்வோ னில்லம்
புகுந்தவோர் வலைச்சி யாங்கு
மேவிய நறும ணத்தால்
விழிதுயில் கொள்ளா ளாகித்
தாவுமீன் கூடை யொன்றைத்
தன்னரு கமைத்துத் தூங்கும்;
பூவுல கினிற்பட் டோர்கள்
புன்மையிவ் வகைய தாமே.

[மீன்களை ஒரு கூடையில் எடுத்துச்செல்லும் வலைச்சி வழியில் ஒரு பூ விற்பவன் வீட்டில் தங்கினாள். அவளருகே புஷ்பங்களிருந்தமையால், அவைகளின் வாசனையை அவள் முகர, அதனால் அவளுக்கு உறக்கம் வரவில்லை. உடனே அவள் மீன் கூடையைத் தன்னருகே வைத்து அதன் மணத்தை முகர்ந்தபடியே தூங்கினாள். புஷ்பங்களின் நறுமணத்தைவிட, மீன்களின் மணமே அவளுக்குச் சுகம் கொடுத்தது. அது போலவே, இவ்வுலகத்தில் ஆசை வைத்தோர் அதன் மீதிலேயே ஆசையுடையராய், அதிலேயே சுகம் பெறுவர்.]

[6]

புறவிளம் பார்ப்பின் றெண்டைப்
புறத்தினைத் தடவி யுள்ளே
உறுமணி யுணர லாகும்;
உலகமை யலிற்பட் டோரைச்

சிறுபொழு தவர்க ளோடு
சேர்தலா லறிய லாகும்;
வெறிதினை விழைவர் சால
விரும்பிடார் ஞான போதம்

[ஒரு சிறு புறாவின் தொண்டையின் வெளிப்புறத்தைத் தடவிப் பார்த்தால், அதனுள் தானியங்கள் இருப்பது தெரிய வரும். அது போலவே, உலக மாயையில் அகப்பட்டவர் களோடு சற்று நேரம் கூடியிருந்தால், அவர்களது உண்மைக் குணம் வெளி வரும். அவர்கள் உலக விஷயப் பேச்சையே நாடுவார்கள். ஞான போதத்தை நாடமாட்டார்கள்.]

[7]

உள்ளியை யுண்டோன் றன்னை
உறுமணங் காட்டு மாப்போல்
வள்ளல்பாற் பத்தி செய்யு
மரபினர் தம்மைக் காட்டும்
விள்ளுறு ஞான போதம்;
மேதினி மயலிற் பட்டோர்
எள்ளுறு முலகப் பேச்சே
இசைக்குவர்; பிறிதொன் றோரார்.

[உள்ளிப்பூண்டை உண்டவன் அருகிற்சென்றால், அவ னிடமிருந்து வெளியாகும் மணமே அவன் எதையுண்டான் என்பதைத் தெரிவிக்கும். அது போலவே, பக்தர்களை அவர் களது ஞானத்தால் அறியலாகும். ஆனால், ஞானிகளல்லாதார், தம்முடைய உலக விவகாரங்களைப்பற்றியே பேசுவர்; வேறொன்றைப் பற்றியும் அறியார். இதிலிருந்து அவர்கள் உலகப் பற்றுள்ளவர்களென்பதை அறியலாம்.]

[8]

தேனுணு மீயுஞ் செய்ய
தேனலா லழுக்க டைந்த

ஊனுணு மீயும் போல
ஓரிரு வகைய ரீசன்
மேனியினை வுள்ளார் வேறு
விரும்பிடார் மற்றோர் பொன்பெண்
ஆனவை யுளத்தை யீர்க்க
அரன்கதை மறந்து செல்வார்.

[ஈக்களில் இரு வகையுண்டு. ஒன்று, தேனை மாத்திரம் உண்டு இருப்பது; மற்றொன்று, தேனை விட்டு அழுக்கடைந்த மாமிசம் முதலியவைகளை நாடி அவற்றையே உண்பது. அது போல, ஞானிகள் ஈசனைத்தவிர வேறொன்றையும் நாடிச்செல்லார். ஆனால், பிறரோ, பொன் பெண் இவைகளால் மயக்குண்டு, ஈசனை முற்றிலும் மறந்து, மேற்கூறிய இரண்டையுமே நாடிச் செல்வார்.]

[9]

ஈசனை யடியர் பாடும்
இன்னிசைக் கீதங் கேளான்
ஆசையா லவற்றைக் கேட்கு
மவர்களைத் தடுத்து நிற்பான்
பூசுரர் தம்மை ஞான
போதத்தை நிந்தை செய்வான்
மாசுறு முலகின் றீய
மையலில் நனிபட் டானே.

[உலகப்பற்று அதிகமாயுள்ளவன், பிறர் பகவந்நாமங்களைப் பாடுவதையும் கேட்க மாட்டான்; யாராவது பத்தியுடன் கேட்டு நிற்கக் கண்டால், அவர்களையுந் தடுப்பான்; ஈசுவரனையும், பத்தர்களையும், மதங்களையும் அவன் தூஷிப்பான்.]

[10]

நடத்துறை முதலை யின்றேல்
தடிப்புள தாத லாலே

படைக்கல மொன்றுஞ் சென்று
    பாய்ந்திடாத் தன்மை போல
இடர்ப்படப் பலகாற் சொல்லி
    இசைப்பினு முலக மார்க்கம்
நடக்குநெஞ் சத்தார் தம்பால்
    ஞானபோ தஞ்செல் லாவே.

[முதலையின் மேற்றோல் ஓர் ஆயுதத்தாலும் வெட்டுப்படாது. அது போல, ஸம்ஸாரத்தில் ஆழ்ந்துள்ள மனிதனுக்கு எவ்வளவு தத்துவோபதேசம் செய்தாலும், அது அவன் மனத்தில் நுழையாது.]

[11]

பரிதியி னொளியோ வெங்கும்
    பரம்புங்கண் ணாடி தன்னில்
உரியநன் மினுக்கங் கொண்ட
    உலோகத்தில் நீரிற் பட்டால்
பிரிதிவிம் பிக்கும்; அந்தப்
    பெற்றியி னுயிர்கள் தோறும்
விரவிய வீசன் றானும்
    விழைந்தவ ருளத்தே தோற்றும்.

[சூரியனுடைய வெளிச்சம் எல்லாப் பொருள்களின் மேலும் சமமாய் விழுந்த போதிலும், கண்ணாடி, ஜலம், பளபளப்பான உலோகம் இவைகள் போன்ற வஸ்துக்களே அவ்வெளிச்சத்தை நன்றாய்ப் பாதிபலிக்கின்றன. அது போல, பகவான் அங்கிங்கெனாதபடி எங்கும் இருந்தாலும், பத்தர்களுடைய இருதயத்திலேயே நன்றாய்ப் பிரகாசிக்கிறான்.]

வேறு

[12]

தெங்கின் றுருவல் நிறைந்திருப்பத்
    தீம்பாற் கட்டி நிறைந்திருப்பப்

பொங்கு முருவ மொன்ருகிப்
பொருந்து மோத கம்போல
அங்க முழுது மொருபொருளால்
அமைந்தே யுருவ மொன்றெனினும்
தங்குஞ் சுபாவ பேதத்தாற்
றரணி மாந்தர் பல்வகையர்.

[கொழுக்கட்டைகளெல்லாம் வெளிப்பார்வைக்கு ஒரே மாதிரியிருந்தாலும், உள்ளே சிலவற்றில் தேங்காய்ப் பூரணமும், சிலவற்றிற் பாற்கட்டியும் இவ்வாருக வெவ்வேருயிருப்பது போல, மனிதர்களெல்லாரும் உடலமைப்பில் ஒரே மாதிரியிருந்தாலும், குண வித்தியாசத்தால் பல வகைப்படுவர்.]

[13]

கோல நீரெலா நாரண னெனினுமுட்
கொள்ளுதற் கியையாவாம்;
கால லம்புநீர் வாய்கழு நீருண்டு
கைதொடத் தகாநீரும்
ஞால மீதிலுண் டிறைவனெப் பதிக்கணும்
நண்ணினுந் தரிசிக்கச்
சீல மாந்தலஞ் சிலவுள; சேய்மைக்கட்
செல்லவேண் டுவசிலவே.

[எல்லா இடங்களிலும் காணப்படும் நீர் நாராயண ஸ்வரூவமே (ஈசுவரனே). ஆயினும், ஓரிடத்திலிருக்கும் நீருக்கும், மற்ருேரிடத்திலிருக்கும் நீருக்குமுள்ள மாறுபாட்டை நாம் அதை உபயோகிக்கும் வழியால் அறியலாம். ஓரிடத்திலிருக்கும் நீர் காலலம்பவுதவும்; ஆனல், குடிக்க உதவாது. பின்னே யதற்கு வேறு நீர் வேண்டும். நாம் கையால் தீண்டக்கூடாத அசுசியான நீருமுண்டு. அது போல, நாம் தரிசிக்கத் தகுந்த இடங்கள் சிலவுள; அருகே செல்லக்கூடத் தகாத இடங்களுமுள.]

[14]

வேங்கை தன்னகத் தெம்மிறை
யிருப்பது மெய்ம்மையே யெனினும்யாம்
பாங்கு சென்றதன் முன்னிற்றல்
தகுதியோ? பாரெங்கு நிறையெம்மான்
தீங்கி ழைத்திடு தீயவ
ருளத்தினுஞ் செறிபவ னென்றாலும்
ஆங்கம் மாக்களைச் சேர்ந்தவர்
பாலுற வாடுத றகவன்றே.

[புலியினிடம் ஈசுவரன் இருப்பினும், நாம் அதனருகில் போவது தகுதியன்று. அது போல, தீயவர் உள்ளத்திலும் ஈசுவரன் உறைகின்றானெனினும், தீயவருடன் உறவு கொண்டாடலாகாது.]

[15]

'சீவர் யாவரும் நாரணன்
றோற்றமாம்; தெரிதி,' எனச்சீடற்
காவ லோடொரு குருவறைந்
திடுதலும் அம்மொழி பெறுசீடன்
மேவு வீதியி னின்றனன்
மதகரி விரைதலு மதன்பாகன்
'தாவி நிற்குதி யொருபுறத்
தெ'னுமொழி தன்னையோர் கிலனாகி,

'யானு நாரணன்; யானையு
நாரணன்; யான்வழி விட்டேகல்
ஏன்?' எ னுநினைந் தசைந்திலன்;
யானையும் எடுத்தெறிந் தேகிற்றால்;
ஈன மெய்தியே குரவர்பான்
முறையிட, 'என்னரு மகனே! நீ
ஊன முற்றனை பாகநா
ராயண னுரையினைக் கடந்தெ'தன்றார்.

['ஜீவன்களெல்லாம் நாராயணனே,' எனும் குரு உபதேசத்தைக் கேட்ட சிஷ்யன், வீதியில் ஒரு மத யானை ஓடி வரக் கண்டான். யானைப்பாகன், "விலகு! விலகு!" என உரத்த குரலில் கூவி வந்தான். சிஷ்யனோ, "நானும் நாராயணன்; யானையும் நாராயணன். இருவரும் ஒன்றேயாதலின், என்னை யானை என்ன செய்யும்?" என நினைத்து நின்றான். யானை அவனைத் துதிக்கையால் எடுத்து வீசியெறிந்து சென்றது. நோவுற்ற சிஷ்யன் நடந்ததைக் குருவிடம் முறையிட, அவர், "அப்பா, உண்மைதான். நீயும் நாராயணன்; பாகனும் நாராயணன்தானே? அவன் உன்னை வழிவிட்டு விலகச் சொல்லியும், நாராயணனான அவன் வார்த்தையின்படி ஏன் விலகவில்லை?" என்றார்.

[16]

நீரில் வரியை நினைத்து வரையினும்
நீரில் வரியே நினைப்பி லழிந்திடும்
பாரிற் பகைமைப் படிறு படியாத
சீரியர் கோபத் திறனு மிதுவே.

[பெரியாருடைய கோபமானது நீரின்மேலிழுக்கப்பட்ட வரியைப்போலத் தோன்றின உடனே மறைந்துவிடும்.]

[17]

அந்தணன் புத்திர னந்தணர் சாதியனே;
அந்தண ரானோர், அறிஞர் புரோகிதராய்
வந்த மடையருமாய் வாழ்வார்; சிலர்வேசி
சொந்த மனைமுன்றிற் றுகளிற் புரளுவரே.

[அந்தண (பிராமண)னுடைய புத்திரன் சாதியால் மாத்திரமே பிராமணனாயிருக்கலாம். அப்புத்திரன் புரோகிதனாகவேனும், சமையற்காரனாகவேனும், அல்லது விலை மாதர் வீட்டை நாடுபவனாகவேனுமிருக்கலாம். அந்தணன் அறிஞனாயிருந்தால் மாத்திரமே உண்மையான பிராமணனாவான்.]

[18]

செம்பொன்னைப் பித்தளையிற் சேர்த்துப் பிரித்துணரிற்
செம்பொன்னைக் காட்டுஞ் சிறந்த வுரைகல்லே;
நம்ப னுரைக்கல்லா னுனிலத்தி னல்லவரை
வம்பர் தமைநாமும் வகுத்துணர லாகுமே.

[செம்பொன்னிற்கும் பித்தளைக்குமுள்ள வேறுபாடு உரை கல்லில் உரைப்பதால் வெளி வரும். அது போல, நல்லவரையும் அல்லாதவரையும் அவர்களுடைய பத்தியினுலறியலாகும்.]

[19]

மானிடரை யாயின் வகையி லிரண்டாவர்;
மானிடரெம் மானிடத்தில் வந்தணையுஞ் சிந்தையரே;
ஆனபொன்பெண் ணுசையினு லல்லலுற்ற புல்லியராம்
ஈனர்களு மானிடரா யெண்ணப் படுவாரே.

[மனிதர்கள் இரண்டு விதமாக வகுக்கப்படுவர்: ஒருவிதம், பகவானிடத்தில் மனத்தைச் செலுத்தும் பத்தர்கள்; மற்ரெரு விதம், பொன்மீதும் பெண்மீதும் ஆசை வைக்கும் மானிடப் பதர்கள்.]

[20]

ஒட்டை வாயி லுதிரந்தான்
ஒழுக வொழுக முட்களையே
இட்ட மோடு கடித்துநிற்கு
மியல்பி னிழவு பலவரினும்
மட்டி லாசை பிடித்துந்த
மறந்தே யுழல்வ ருலகமயல்
பட்ட பேருக் கறிவுறுத்தல்
பயனில் செய்கை யாய்விடுமே.

[முட்களைத் தின்பதனுல் இரத்தம் வாயிலிருந்து சொரிந்தாலும், ஒட்டகம் அம்முட்களையே மகிழ்வுடன் கடித்துத் தின்னும். அது போல, இவ்வுலக மாயையில் ஈடுபட்டோர், என்னதான் கஷ்டங்கள் வரினும், அதிலேயேயுழல்வார்; பிறர் என்ன நற்புத்தி சொல்லியுங்கேளார்.]

[21]

நீர்போற் பலசொன் மொழிபவனை
நெஞ்சை யொளிக்கும் வஞ்சகனைப்
பாரோர் காணத் துளசியணி
பான்மை யோனை நெடிதாகச்
சேர முக்கா டிடுபவனைச்
செருந்தி மறைக்குங் குளநீரை
ஆரத் தீமை விளைப்ப வென
அறிந்தே யகல்வீ ரகல்வீரே.

[காரணமின்றி வெகு உருக்கமாகப் பேசுபவனையும், தன் மனத்திலிருக்கும் எண்ணத்தை மறைப்பவனையும், அயலார் காணும்படி துளசி மாலை அணிபவனையும், பிறரைப் பார்க்க விருப்பமில்லாதது போலப் பெருமுக்காடிட்டிருப்பவனையும், நீர்க் கோரைகளால் மறைக்கப்பட்ட நீரையும், தீமை விளைப்பன என்று நாம் நீக்க வேண்டும். (மேல் கூறியவையெல்லாம் பொய் வேடமே என்றபடி.)]

குரவர் வகை

[1]

குரவ னொருவன்; உபகுரவர்
கூறிற் பலரே. தினைத்துணையும்
தருநல் லறிவை யெனினவனைச்
சாரு மாசா னெனவோர்க.
அரிதாம் பாக வதக்கதையும்
அவதூ தர்க்கு நான்கினொடும்
இருபான் குரவ ரிருந்தாரென்
றிவ்வுண் மையினை யெடுத்தியம்பும்.

[குரு ஒருவரே. ஆனல், உப குருமார் பலராயிருக்கலாம். எவரிடம் ஏதேனும் கற்கப்படுகிறதோ, அவரை உப குருவென லாம். இத்தகைய உபகுருமார் இருபத்து நால்வரை ஒரு சிறந்த அவதூதர் அடைந்திருந்தார் என்பது பாகவதத்திற் கூறப்பட்டிருக்கிறது.]

[2]

செய்ய மணக்கோ லம்பூண்டார்
செல்லும் பவனி யதுகாணுன்
எய்யு மிலக்கிற் சிந்தையனு
யிருக்கும் வேடன் றனைநோக்கி,
'ஐய! நீரே யெங்குரவர்;
அடியேன் றியானத் திருக்குங்கால்
மெய்யாய் நுமைப்போற் கருத்தொன்ற
விழைந்தேன்,' என்ரு ரவதூதர்.

[ஒரு நாள் மேற்கூறிய அவதூதர் பசும்புற்றரையின்மேல் நடந்து போகும்பொழுது, மேளதாளங்களுடன் வெகு விமரிசையாக வரும் மணக்கோலத்தைக் கண்டார். அருகே ஒரு வேடன் தன் இலக்கின்மேலே கவனம் வைத்து மணக்கோலத்தை ஒரு முறையேனும் திரும்பிப்பாராது மேளதாளங்களின் ஓசைக்கும் செவி கொடாது நின்ருன். இது கண்ட அவதூதர், அவனை வணங்கி, "ஐயா, நீரே என் குருநாதர். நிஷ்டையிலமரும்போது உமது மனம் இலக்கின்மீதே நிற்பது போல, நிஷ்டா மூர்த்தியின்மேல் எனது மனமும் நிற்கட்டும்," என்ருர்.]

[3]

'அண்ணு! இதுவோ வழி?' என்ற
அவதூ தர்க்கு விடைபகரான்
கண்ணுய்த் தூண்டிற் படுமீனைக்
கரைசேர்த் தையா வேதென்ருன்.
'வண்மைக் குருவே! நுமைப்போல
மனத்தி லிட்ட தேவதையை
எண்ணும் போது பிறசெயலற்
றிருப்பேன்,' என்ரு ரவதூதர்.

[ஒரு வலைஞன் குளத்தில் மீனைப்பிடித்துக்கொண்டிருந்தான். அவதூதர் அவனருகிற்சென்று, "அண்ணு, இந்த ஊருக்கு வழியெது?" என்று வினவினுர். தூண்டிலிலுள்ள

இரையை மீன் கடிக்கிறதென்பதை மிதக்கும் தக்கை காட்டிற்று. அதனால்,வலைஞன் பதிலொன்றும் கூறாது தூண்டிலையே கவனித்திருந்தான். மீனைப் பிடித்த பிறகு, அவன் திரும்பி அவதூதரைப் பார்த்து, "ஐயா, நீர் என்ன சொல்லிக்கொண்டிருந்தீர்?" என்றான். அவதூதர் அவனை வணங்கி, "ஐயா, நீரே என் குரு. நான் என் இஷ்ட தேவதையைப் பற்றித் தியானிக்கும்பொழுது, உம்மைப் பின்பற்றி, என் தியானத்தை முடிக்கும் வரைக்கும் வேறொன்றையும் கவனிக்காமலிருப்பேனாக," என்றார்.]

[4]

மீன்பற்றச் செலும்பருந்தைக் காக்கைக் கூட்டம்
விரைந்துகொத்த வதுவிடலும் வேறோர் பாறு
தான்பற்றப் பின்னையதைக் காக்கை கொத்துந்
தன்மையொடு முன்னையது தளர்ச்சி நீக்கு
வான்சுற்று மரக்கிளையி லிருத்தல் கண்டார்
மகிழ்ச்சியுட னவதூதர் வணங்கி, 'நின்பால்
நான்கற்றே னுபாதியினை விட்டா லன்றி
ஞாலத்தி லுபசாந்த நணுகா.'வென்றார்.

[மீன் ஒன்றைத் தன் மூக்கில் கொத்திச் செல்லும் பருந்தொன்றைக் காக்கைகள் பல சூழ்ந்துகொண்டு, அப்பருந்தைக் கொத்தி, மீனைப் பிடுங்க எத்தனித்தன. அப்பருந்து எப்பக்கம் சென்றபோதிலும், காக்கைகள்கத்திக்கொண்டு பின்தொடர்ந்து தொந்தரவு செய்ததைப் பொறுக்காமல் பருந்து மீனைப்போட்டு விடும்படி செய்தன. உடனே மற்றொரு பருந்து மீனைக்கௌவிக் கொள்ளக் காக்கைகள் அதனைப் பின் தொடர்ந்தன. முந்திய பருந்து தொந்தரவு செய்யப்படாது ஒரு மரத்தின் கிளையில் அமைதியாய் உட்கார்ந்திருந்தது. இம்மாதிரி சாந்தமாய் உட்கார்ந்திருக்கும் பருந்தைக் கண்ட அவதூதர், அதனை வணங்கி, "நீயே என் குரு. ஏனெனில், 'ஒருவன் தனக்குள்ள உபாதிகளை விட்ட பிறகே அவனுக்கு இவ்வுலகில் மனவமைதி உண்டாகும். அன்றேல், கஷ்டமே,' என்பதை நீ எனக்குக் கற்பித்தாய்," என்றார்.]

[5]

நாடி யொருமீன் பின்செல்லும்
நாரைக் கொக்குத் தனையெய்யும்
வேட னம்பைக் கருதாத
விதங்கண் டதனைப் பணிந்தெழுந்து,
'கூடுந் தியானத் திருக்குங்காற்
குருவே! நினைப்போற் புறம்பாரா
திடு படவேண் டினன்,' என்ன
இசைத்து நின்று ரவதூதர்.

[நாரையொன்று மீன்கொத்த ஒரு சதுப்பு நிலத்தில் மெள்ளச் சென்றுகொண்டிருந்தது. ஒரு வேடன் அதன் பின்னிருந்து அதன்மேல் ஓர் அம்பைக் குறி வைத்தான். இதை அந்த நாரை சிறிதேனும் அறியவில்லை. அவதூதர் அந்த நாரையை வணங்கி, "நான் தியானத்திலமரும்போது, உன்னையே உதாரணமாகக் கொண்டு, என் முன் யார் நிற்கிறார்கள் என்பதைக் காணத் திரும்பாமலிருப்பேனாக," என்றார்.]

[6]

கூர்த்துப் பன்னாள் முயன்றரிதிற்
கூட்டி வைத்த தேன்கூட்டை
ஈர்த்துத் தேனை யொருவனுணும்
இயல்பு நோக்கித் தேனியைப்
பார்த்துநின்ற வவதூதர் பகர்வார்,
'குருவே! நினையணுகிச்
சேர்த்து வைக்கும் பொருள்செல்லுந்
திறத்தை யறிந்தேன் யான்,' எனவே.

[தேனியொன்றையும் குருவாகக் கொண்டார் நம் அவதூதர். அத்தேனி வெகுகாலமாக மிகுந்த சிரமத்துடன் தேனைச் சேர்த்து வைத்து வந்தது. எங்கிருந்தோ ஒருவன் வந்து தேன் கூட்டை உடைத்துத் தேனைக் குடித்துவிட்டான். வெகுநாள் கஷ்டப்பட்டதன் பலனை அனுபவிக்க அத்தேனிக் கொடுத்து

வைக்கவில்லை. அதைக் கண்ட அவதூதர், தேனியை வணங்கி, "குருவே, சேமித்துவைத்த ஐசுவரியம் நிச்சமாய் என்னவாகும் என்பதை உன்னிடமிருந்து அறிகிறேன்," என்ருர்.]

[7]

சூரவர் பலருண் டாயிரமாக்
கொள்ளக் கிடைக்கும் பொருள்போல்வார்;
அரிதோர் சற்சி டனைப்பெறுதல்;
ஆமென் றுரைக்கு மூதுரையும்;
மரபி னல்ல மதியுரைக்க
வருவோர் பலரே; அம்மதியை
உரிதிற் பின்பற் றிடுபவர்தாம்
உளரோ வென்னி லொருசிலரே.

["ஆயிரக்கணக்கான குருக்கள் அகப்படுவார்கள். ஆனுல், சிஷ்யன் ஒருவன் கிடைப்பதரிது," என்பது பழமொழி. நற்புத்தி கூறக்கூடியவர் பலர். ஆனுல், அதைப் பின் பற்ற இச்சை கொள்பவர் வெகு சிலரே.]

[8]

உண்மை யார்வம் பெருகுதலால்
உம்பர் நாதன் றனக்கன்பு
பண்ணு மாறு சாதனைகள்
பயில விரும்பிற் றக்ககுரு
திண்ண மாக விறையருளாற்
சேரும்; இதனுக் கொருசிறிதும்
எண்ணம் வேண்டா; மனத்தார்வம்
எய்து மதுவே பெரிதாகும்.

[ஒருவனுக்கு உண்மைப் பத்தி தோன்றி, அவன் உபாஸனைகள் செய்ய ஆவலாயிருப்பானேயாகில், பகவான் நிச்சயமாக அவனுக்குத் தகுந்த குருவொருவரை ஏற்படுத்துவார். அதைப்பற்றி அவனுக்கு விசாரமே வேண்டா.]

[9]

மருந்தறிந்த பண்டிதரு மூவகையர்:
நோயாளர் வருத்த நோக்கி
அருந்துமருந் திதுவென்னக் கொடுத்தகல்வார்
கடையாயார்; அருந்தும் வண்ணம்
பொருந்துநல்ல மொழிபுகன்றங் கருந்துவிப்ப
ரிடையாயார்; போக்கு நீக்கித்
தருந்தமது மருந்தைவலிந் தருந்துவிக்கு
நிலைமையினர் தலையா யாரே.
இவ்வழியே குரவருமூ வகையினராம்:
கடைநின்றார் இதுசெய் வாயென்
றுய்வழியை யுணர்த்தியபின் விட்டகல்வர்;
இடைநின்றார் உரைத்த மாற்றம்
செய்வழியிங் கிதுவென்ன வலிந்துரைப்பார்;
தலைநின்றார் சிடன் றன்னைப்
பொய்வழியிற் செல்லவொட்டா வகைதடுத்து
வலிந்துநெறிப் புகுத்து வாரே.

[உத்தமர், மத்திமர், அதமர் என வைத்தியர்களை மூன்று வகுப்பினராக வகுக்கலாம். அதம வைத்தியர், நோயாளியின் நாடியைப் பரிக்ஷித்து, மருந்தொன்று உட்கொள்ளும்படி சொல்லிவிட்டுப் பிறகு அவன் மருந்தை உட்கொண்டானா இல்லை யாவென விசாரிப்பதில்லை. மத்திம வகுப்பைச்சார்ந்த வைத்தியர், மருந்தைச் சாப்பிடுவதனால் பிணி நீங்குமென்று நோயாளிக்கு வற்புறுத்தி, மருந்தைச் சாப்பிடும்படி நல்ல வழிகளி லெல்லாம் நோயாளிக்குப் புத்தி கூறுவர். உத்தம வைத்தியரோவெனில், நோயாளி மருந்தைச் சாப்பிடுவதில்லை எனத் தீர்மானிக்கிறான் என்று கண்டவுடன், அவன் மார்பில் முழந் தாளிட்டு, மருந்தைத் தொண்டைக்குள் செலுத்தப் பின்வாங்கு வதில்லை. இது போல, சிஷ்யனுக்கு ஆத்துமோபதேசம் செய்வ தற்குமேல் அவனைக் கவனிக்காத குரு ஆத்தும குருவாவார். சிஷ்யனுடைய நன்மைக்காக உபதேசங்கள் மனத்தில் அழுந்

4

தும் வண்ணம் போதிப்பதனால் சிஷ்யனுடைய க்ஷேமத்தில் சிரத்தை கொண்டதாகக் காட்டும் குரு, மத்திம வகுப்பைச் சார்ந்தவர். ஆனால், தம் சிஷ்யன் செவி கொடுத்துக் கேட்க வில்லையென்று அறிந்து, தாம் கூறியபடி நடக்கும்படி கட்டா யப்படுத்தும் குருவே உத்தமராவார்.]

சமயம் அனுட்டிப்புக்குரியது; வாதத்திற்குரியதன்று.

[1]

ஆதி யமலன் றிருப்பாதம்
அடையும் வரையு மறிவுதரும்
வேத புராண மிருதிகளை
விரும்பு வீர்;பின் னிவைவேண்டா;
போதி லமரும் வரைமுரன்று
பொருந்தி யிருந்த பின்னர்நறுஞ்
சீத மதுவுண் டகங்குளிருந்
தேன்வண் டியற்கை தெளிவீரே.

[வேதபுராணங்களிலடங்கியுள்ளவைகளைப்பற்றி எவ்வளவு காலம் ஆராய்ச்சி செய்ய வேண்டும்? எம்பெருமானைத் தரிசிக் கும் வரையிற்றான். ஒரு பூவின்மேல் உட்காரும் வரையிற்றான், தேனீ ரீங்காரம் செய்யும். தேனைக்குடிக்க ஆரம்பித்தவுடன், ரீங்காரமெல்லாம் நின்றுவிடும்.]

[2]

'தொன்னூல் கற்று முளத்துண்மை
தோற்றா மாந்தர் தொடர்பெதுவோ?'
என்ன வினவுங் கேசவருக்
கியம்பு வார்நங் குருதேவர்:
'கொன்னே யுயரப் பறந்திடினுங்
குழிசேர் பிணத்தில் விழிபொருந்த
மன்னும் பருந்தி னியல்பினராய்
வாழ்வார் மயலுற் றவர்,'எனவே.

[காலஞ்சென்ற மஹான் கேசவ சந்திரஸேனர், ஸ்ரீராம கிருஷ்ணரைத் தக்ஷிணேசுவரத்திலுள்ள ஆலயத்தில் தரிசித்து, "பண்டிதர் பலர் எண்ணிறந்த நூல்களை வாசிக்கின்றனர். அப்படியிருந்தும் ஆத்மஞானத்தில் அவர்கள் அறிவிலிக ளாய் இருப்பானேன்?" என்று கேட்டார். அதற்குக் குரு நாதர், பின்வரும் பதிலைக் கூறினர்: "பருந்து வானத்தில் வெகு உயரப்பறக்கின்றது. ஆனால், அதனுடைய பார்வையோ, துர் நாற்றம் வீசும் பிணங்கள் நிறைந்த குழிகளின் மேலேதானிருக் கிறது. போலிப் பண்டிதர்களுடைய உள்ளம் இவ்வுலகப் பொருள்களினிடம் பற்றுக்கொண்டிருக்கிறது. அதனால், மெய் யறிவு அவர்களால் பெற முடியவில்லை. பல வேதங்களைப் படிப் பதனால் அவர்களுக்கு என்ன நன்மை உண்டாகும்?"]

[3]

நூலின் முடிபாங் கிரந்தமெலா
நுவலின் முடிப்பா நூல்பலவும்
வேலை யின்றிப் பலநாளாய்
விரும்பி யெழுதிப் படித்தாலுஞ்
சிலத் துறவு விவேகமிலார்
சிந்தை மயலாற் பிணிப்புண்டு
சால வருந்து நிலையுறலாற்
சாற்று நூலு முடிப்பாமே.

['கிரந்தங்கள் (புஸ்தகங்கள்) எல்லாம் கிரந்திகள் (முடிகள்)' என ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவர். அதாவது, 'விவேகமும், பற்றற்ற தன்மையுமில்லாத வெற்று வாசிப்பெல்லாம் ஒருவ னுடைய செருக்கையும் வீண் பெருமையையும் அதிகமாக்கு கின்றன. (மனத்திலுள்ள முடிகளை அதிகமாக்குகின்றன)' என்பது.]

[4]

'செப்பா நின்ற வொருமொழியாற்
றேரு முண்மை தெரிந்துகொளின்
இப்பால் வருவீர்; பலமொழிகள்
இயம்பிப் பின்ன ருணர்வமெனில்

அப்பாற் சென்று கேசவர்பால்
அடைவீர்,' எனநங் குருதேவர்
ஒப்பாய்த் தம்பா லுறுகுதர்க்கம்
ஓது மொருவர்க் குரைத்தனரே.

[வாதம் புரிவதில் விருப்பம் கொண்ட ஒருவரை நோக்கி, ஸ்ரீ ராமகிருஷ்ணர், "நான் கூறும் ஒரு வார்த்தையால் நீர் திருத்தியடைவீராயின் என்னிடம் வாரும். ஆனல், வெகு நேரம் வாக்குவாதம் புரிந்து உண்மையை அறிய விரும்பினுல், கேஸவ சந்திரஸேனரிடம் போம்," என்ருர்.]

[5]

மோன்ருநங் காலே யபக்கென்னும்
மொண்ட பின்னர் நீர்நிறைவால்
மெள்ள வடங்குங் குடம்போல
வீண்வா தங்கள் புரிந்தவரும்
தெள்ளத் தெளிந்த வறிவினராய்த்
திருப்பா தத்தை யடைந்தபினர்,
உள்ளத் துணர்வா லின்புற்றே
உரையா டாம லடங்குவரே.

[ஒரு குடத்தில் நீர் நிறையும்போது 'அபக் அபக்', என்னும் ஓசை கேட்கிறது. குடம் நிறைந்தவுடனே ஓசையும் நின்று விடுகிறது. அது போலவே, ஈசுவரனைக் காணுதவன் அவனைப் பற்றி வீண் வாக்கு வாதம் புரிகிருன். அவனைத் தரிசித்தவனே, மௌனமாகவே சச்சிதானந்தத்தை அனுபவிக்கிருன்.]

[6]

விவேக வைராக் கியமின்றேல்
விண்கல் வியினுற் பயனில்லை;
விவேக நித்யா னித்யத்தின்
விதத்தை யுணர்ந்து நிச்சயித்தல்

விவேக மாகும்; உடலுயிரின்
வேறென் றுணரு மறிவதுவே;
விவேகத் தாலே பற்றறுத்தல்
விளம்பின் வைராக் கியமாமே.

[விவேகமும் வைராக்கியமுமின்றி வேத நூல்களைக் கற்பதனால் யாதொரு பயனுமில்லை. முதற்கூறிய இரண்டுமின்றி ஆத்துமஞான விருத்தி சிறிதேனுமேற்படாது. விவேகம் என்பது ஸத்யம் (ஈசுவரன்) அஸத்யம் (இம்மாயப் பிரபஞ்சம்) இவ்விரண்டிற்குமுள்ள வேற்றுமையை அறியுந்தன்மை. 'ஸ்தூல சரீரம் வேறு; ஆத்துமா வேறு,' என்னும் ஞானமே விவேகம் எனப்படும். இவ்வுலகப் பொருள்களின்மீது பற்றற்று இருப்பதே வைராக்கியம் எனப்படும்.]

[7]

மழைநன் மரக்கா லிருபதென
வகுக்கும் பஞ்சாங் கந்தன்னைக்
குழையக் கசக்கிப் பிழிந்தாலுங்
கூடா தொருநீர்த் துளிதானும்;
மொழியு ஞான சாத்திரங்கள்
முத்தி நெறியை யெனினுமவை
வழிநின் றொழுகி னார்க்கல்லான்
மற்றோர்க் கியாதும் பயனிலையே.

['இந்த வருஷம் இருபது மரக்கால் மழை பெய்யும்,' எனப் பஞ்சாங்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. பஞ்சாங்கத்தைப் பிழிந்து பார். ஒரு துளி நீர் கூட வாராது. அது போல, வேத புராண நூல்களில் பல உபதேசங்களைக் காணலாம், அவற்றை வாசிப்பதனால் மாத்திரம் ஒருவன் ஆத்தும ஞானியாக மாட்டான். (ஆத்தும ஞானியாக வேண்டுமானால்) அந்நூற்களிற் கூறப்பட்ட அனுஷ்டானங்களைக் கைக்கொள்ள வேண்டும்.]

[8]

இருவ ரொருமா மரத்தோப்புக்
கேகி னார்;பின் னங்கவருள்

ஒருவன் விடைபெற் றருப்பழத்தை
உண்ணப் புகுந்தான் ; மற்றவனே,
அரிதில் மரத்தைக் கணக்கிட்டான் ;
யாரோ பெரியர் ? கலைபயின்று
பெருவா திடலி னருளமுதம்
பெற்று மகிழ்தல் பெரிதாமே.

[இருவர் மாந்தோப்பொன்றிற்குள் நுழைந்தனர். முதலாமவன் தோட்டத்திற்குள் நுழைந்ததும், தோட்டக்காரனைக்கண்டு பேசி அவனுடைய அனுமதிபெற்று, ஒரு மரத்தண்டை சென்று, பழத்தைப் பறித்துத் தின்னவாரம்பித்தான். இரண்டாமவனோ, 'மாமரங்கள் எத்தனை? ஒவ்வொரு மரத்திலுமிருக்கும் கனிகள் எத்தனை? தோட்டத்தின் விலை எவ்வளவிருக்கும்?' என மதிப்பிட ஆரம்பித்தான். இவ்விருவரில் புத்திசாலி யார்? மாம்பழம் உண். அது உன் பசியை அடக்கும். மரத்திலுள்ள இலைகளை எண்ணுவதாலும், தோப்பின் விலையை மதிப்பிடுவதாலும் பயனென்ன? மனவன்மையுள்ளவன் கடவுளைப்பற்றிப் பல வீண் வாதங்கள் புரிவான். ஆனால், தாழ்மைக் குணம் நிறைந்த ஞானியோ, பகவானருள் பெற்று இவ்வுலகில் பேரானந்தம் பெற்று விளங்குகிறான்.]

[9]

கடையிற் புகுமுன் னேவென்ற
கழிபே ரிரைச்சல், புகுந்தபினர்
விடையும் வினவு மாய்த்தெளியும்
விதம்போற் சமய வுணர்வசற்றும்
அடையப் பெறுதார் தெரிந்துகொளற்
கரிதா யிருந்த பொருளனைத்துந்
தடையில் லாமற் றெளிவாகுஞ்
சார்ந்து விசாரிப் பவர்தமக்கே.

[சந்தைக்கடைக்கு வெகு தூரத்திலிருக்கும் ஒருவனுக்கு, 'ஹோ, ஹோ' என்னும் இரைச்சலேதான் கேட்கும். ஆனால்,

சந்தைக்குள் நுழைந்த பிறகு இரைச்சல் என்னவென்பது விளங்குகிறது. சிலர் பேரம் பண்ணுவதையும் சிலர் சாமான்கள் வாங்குவதையும் அவன் காண்கிறுன். அதுபோல ஒருவன் ஸ்வானுபூதி பெறுவதற்கு முன் மதமென்ன என்பதன் உண்மைப் பொருளை அறிய மாட்டான்.]

[10]

ஆயுங் காலை வேதமுத
லான புராண மிருதியெலாம்
வாய்கொண் டுச்சா ரணஞ்செய்யு
மரபா லெச்சின் மன்னினவாம்;
தூய தாக நிலைத்திருக்குந்
தொன்மைப் பொருளோன் றதுபிரமம்;
மேய வதுவே வாய்மொழியால்
விளம்ப வொண்ணுத் தகைமைத்தே.

[வேதங்கள், புராணங்கள் முதலியவைகளெல்லாம் மனிதர்களால் வாய்விட்டுக் கூறப்பட்டதனுல் எச்சிலைப்போலாகிவிட்டன. ஆனுல், பிரமம் என்னும் பரம்பொருளோ, எதைப் போன்றது என்று ஒருவராலும் கூறப்படாமையினுல், அது மாத்திரம் அசுசியடையாது நிற்கின்றது.]

[11]

ஆதி யமலன் றனையணுகி
அடைந்த பேரின் பப்பெருக்கம்
ஈதென் றுலக மயலுற்றோர்க்
கியம்ப லியலாத் தொழிலாகும்;
காத லிருவர்க் கிடைநிறைந்த
கலவி யின்பந் தனைச்சிறுவர்க்
கோத லியலா தாங்கதுபோல்
உற்ற திதுவு முணர்ந்திடினே.

[ஒரு புருஷனுக்கும் அவன் மனைவிக்குமுள்ள உறவை ஒரு சிறு பையனுக்கு விளங்கக் கூறுவது எவ்வளவு கஷ்டமோ,

அவ்வளவு கஷ்டமாகும் சச்சிதாநந்த சுகத்தை இவ்வுலக வாழ்க்கையில் ஆழ்ந்தவனுக்கு விளக்குவதும்.]

[12]

தோற்றுஞ் சரிக மபதநிச
சுரமென் றுரைத்த லெளிதாகும்;
ஏற்ற கருவி தனிலிவற்றை
இசைத்த லெளிதன் றிம்முறையே
மாற்ற மின்றிச் சமயநெறி
வகுத்த மரபு தனைவாயாற்
சாற்ற லெளிது; பின்னவற்றைச்
சார்ந்து நிற்ற லரிதாமே.

[ஸ, ரி, க, ம, ப, த, நி என்று சுலபமாய் வாயாற்சொல்லி விடலாம். ஆனல், வாத்தியத்தில் வாசிப்பது அவ்வளவு சுலப மன்று. அதுபோல, மதத்தைப்பற்றிப் பேசுவது சுலபம். ஆனல், அதை அனுஷ்டிப்பது கஷ்டம்.]

[13]

'பூண்ட தியான முதிர்ச்சியினுற்
புகலுந் தன்னை யறமறந்து
மாண்டா னன்றோ சிவோகமென
வழுத்தற் குரியான்? அதுவரையும்
ஆண்டா னடிமைத் திறம்பேணி' தன்
றைய னுரைத்த மொழிகேட்டுத்
தூண்டு மதிசே ரொருமாணி
சுவரிற் பொறித்தவ் வழிநின்றுன்.

[துறவிகளைப்போல ஜடை வளர்த்துக்கொண்ட ராமசந்தி ரன் என்னும் பிரமசாரி, தக்ஷிணேசுவர ஆலயத்தில் ஸ்ரீ ராம கிருஷ்ணரைத் தரிசித்தான்; அங்கே ஆசனத்திலமர்ந்து, "சிவோஹம், சிவோஹம்" என்று அடிக்கடி கூறுவதேயல் லாமல், வேறென்றும் பேசாமல் மௌனமாயிருந்தான்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் அவனைக் கவனித்துவிட்டுப் பின், "சிவோஹம் என்பதைப் பல முறை ஜபிப்பதால் மாத்திரம் பயன் என்ன? ஒருவனுடைய ஹிருதய கமலத்தில் வீற்றிருக்கும் பகவானை ஆழ்ந்து தியானித்துத் தன்னுள்ளிருக்கும் சிவனை அறிந்த பின்புதான் இவ்வரிய மொழியை உச்சரித்தல் தகும். ஸ்வானுபூதியில்லாமல், வார்த்தையை மாத்திரம் உச்சரிப்பதனால் என்ன நன்மையுண்டாகும்? ஸ்வானுபூதி பெறும் வரைக்கும், ஈசுவரனை எஜமானனாகவும், தன்னை அடியவனாகவும் கருதுவது நல்லது," என்றார். இதையும் இதைப்போன்ற பல உபதேசங்களையும் கேட்ட பிரமசாரி, தான் செய்த பிழையையறிந்து, முன்னிலும் விவேகியானான். அந்தப் பிரமசாரி, அவ்விடத்தை விட்டுப் போவதற்கு முன், "ஸ்வாமிகளின் உபதேசப்படி, இன்றுமுதல் ராமசந்திர பிரமசாரி, ஈசுவரனைத் தன் எஜமானனாகவும், தன்னை ஓர் அடியவனாகவும் கருதுகின்றான்," என ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய அறையின் சுவரிலே எழுதிவிட்டுச் சென்றான்.]

இல்லறத்தானுக்கு இயைந்த சாதனை முறைகள்

[1]

நேடெனக் கரந்து செலும்விளை யாட்டிற்
 செவ்வனே பாட்டியைத் தொட்டோர்
ஆடலிற் கள்வ ராகிடா தெங்கும்
 அகலலாம்; ஆங்கது போல
நாடுமிவ் வுலகில் ஈசனார் செய்ய
 நளினபா தத்தினைப் பிடித்தோர்
வீடுறு மியலார்; இவருழை யுலக
 மிகுமயல் துன்பினை விளையா.

[மறைந்து தேடிப்பிடிக்கின்ற (கண்ணாமூச்சி) விளையாட்டிலே பாட்டியம்மாளைத் தொட்டுவிட்டால், அப்படித் தொட்டவர் எந்த இடத்துக்கும் கட்டுப்பாடில்லாமல் செல்லலாம்; விளையாடவுந் தேவையில்லை; கள்வனாகப் பிடிக்கப்படவுமாட்டார்.

இங்ஙனம் உலக விளையாட்டில் (சமுசார வாழ்வில்) விளையாடிக் கொண்டு திரிகிற ஒருவர், கடவுளுடைய கமலபாதத்தைத் தொட்டுவிட்டால் (சாக்ஷாத்காரமடைந்தால்), இவ்வுலக பந்தத்திலிருந்து விடுபட்டவராவார். இறைவனுடைய அருளுக்குத் தம்மைத் தாமே அர்ப்பணஞ்செய்தவர்களை ஆசைகள் பந்திக்க மாட்டா.]

[2]

செய்வயின் மூங்கிற் றடியினு லமைத்த
சிறுபறி யழகிதென் றதனுள்
உய்விலா தோடு மீன்படு துன்பம்
உணர்ந்தொரு சிலபுறத் துலவும்;
பொய்மய லுலகிற் புக்கவர் துன்பம்
பொருந்திய வியல்பினை யுணர்ந்து
மெய்யறி மாக்கள் ஈசனார் பதத்தை
விரும்புவார் காமத்தை வெறுத்தே.

[கிராமங்களில் இருக்கிறவர்கள் வயல்களில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும் கால்வாய்களிலே மீன்பறிவைப்பார்கள். மூங்கிற்பின்னல் வழியாகத் தண்ணீர் வடிந்துகொண்டிருக்கும் இரைச்சல் கேட்டுச் சிறு மீன்கள் அதிக சந்தோஷத்தோடு பறியினுள் நுழைந்துவிடும். அப்படி ஒரு முறை நுழைந்தவுடன் அவைகள் வெளியே வர முடியாமல், பிடிபட்டு, உயிரையும் இழந்துவிடுகின்றன. இரண்டொரு மீன்கள் மட்டும், மற்ற மீன்களுக்கேற்பட்ட கெடுதியைக் கண்டு, அதனாற்பயனடைந்து, மற்றொரு வழியாகத் துள்ளித் தப்பித்துவிடுகின்றன. அதைப் போல, மதியீனர்கள் உலகப் போக்குகளில் சிக்குண்டு, சிறிது காலம் உலகமாயையின் வசமாகி, (சமுசார மாயையில்) தொங்கிக்கொண்டு அதிகக் கஷ்டப்பட்டுக் கடைசியில் துன்பத்தையடைகிறார்கள். மதியுள்ளார் மற்றவருடைய அனுபவ மொழிகளைக் கேட்டுத் தாம் மண் பொன்னாசைகளிலிருந்து விடுபட்டுத் தனித்திருந்து, உண்மை ஆனந்தத்தை அடைந்து, கடவுளுடைய கமலபாதத்தை அடைவார்கள்.]

[3]

கனவினி லமைந்த கட்டட மென்னக்
கருதினர் ராமப்ர சாதர்;
எனினுமிவ் வுலக மிறைவனை யுணர்ந்தார்க்
கின்பமா ளிகையென விசையும்;
தினமுமுண் டுடுத்துத் திரிதலு மாகும்;
சிந்தையை யீசர்பாற் செலுத்திச்
சனகரிவ் வுலகின் இனிமையுந் துய்த்தார்
சார்ந்தில தவர்க்கொரு குறையே.

[இவ்வுலகமானது கனவினில் அமைக்கப்பட்ட கட்டட மென்று இராமப்பிரசாதர் நினைத்தார். இறைவனிடத்து அன்பு செலுத்துபவருக்கு இவ்வுலகம் இன்ப மாளிகையாகும். உண்ணுவதும் சந்தோஷிப்பதுமாகவும் நாட்களைக்கழிக்கலாம். ஜனக மகாராஜர் தம் சிந்தையை ஈசன்பால் வைத்து உலகப் பற்றில்லாமல் சுகங்களையும் அனுபவித்தார். அவர் இவ்வுல கத்தை அரசாட்சி புரிந்து வந்தார். அவருக்கு ஒரு விதமான குறைவும் இருந்ததில்லை. அவருடைய வல்லமை எவ்வளவு பெரியது!]

[4]

'இல்லற வியலோன் இறைவனை யடைதற்
கியலுமோ?' எனக்குரு தேவர்
சொல்லுவார்: 'நம்மூர் அவலெறி மகளிர்
சுதனுக்கு முலைதந்தும் அவலைக்
கல்லியுங் கதைத்தும் பலசெய்வ ருலக்கை
கையினைத் தகைந்திடா தாங்குச்
செல்லுநெஞ் சதுபோ லிறைவனை மறவிர்
திரும்பினுற் றிமைவந் தெய்தும்.

['இல்வாழ்க்கையிலிருப்போன் கடவுளிடத்து அன்புடைய வனாயிருத்தல் கூடுமோ?' என, பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரிடத்து ஒரு மனிதன் விசாரித்தான். அதனைக் கேட்ட

பகவான், புன்னகையோடுஞ் சொல்லுவார்: "நான் பிறந்த ஊருக்குச் சமீபமாயிருக்கும் கிராமங்களிலே, பெண்கள் அவல் இடிப்பதைப் பார்த்திருக்கிறேன். ஒரு கையினால் உரலிலுள்ள அவலைக் கல்லிக்கொண்டும், மற்றொரு கையினால் குழந்தையை அணைத்துப் பாலூட்டிக்கொண்டும், அவல் வாங்கவந்த ஒருத்தியைப் பார்த்து, 'பழைய கணக்கில் இவ்வளவு வருமதி; இன்றைக்குக் கணக்கு இவ்வளவு,' என்று சொல்லி வியாபாரம் நடத்திக்கொண்டும் இவ்வாறாகப் பல தொழில் செய்துகொண்டிருந்தாலும், கையில் உலக்கை விழாதவண்ணம் ஜாக்கிரதையாயிருப்பார்கள். அதுபோல, எத்தொழில் செய்யும்போதும் இறைவனை மறவாது உலகத்தில் வாழ்ந்து வருவாயாக. மறந்தால் தீமை வந்தெய்தும்.']

[5]

தலையினிற் பளுவாஞ் சுமையுள தெனினும்
தளர்ந்திடா திரிரு திசையும்
நிலைபெற நோக்கு மியல்புடைப் பலவான்
நிச்சயந் தவறிடா வகைபோல்
அலகிலா மயல்செ யுலகிடை வதிந்தும்
அகத்தினைச் சாதனை முறையாற்
கலைவிலா தடக்கும் பெரியனே வீரன்
கடவுளை மறந்திடாத் தகையோன்.

[இவ்வுலகத்தினுசைகளின் நடுவேயிருந்து சாதனை செய்து மனத்தையடக்கியாள்பவனே உண்மை வீரன். இவனுக்குப் பெரியதொரு பாரத்தைத் தலைமீது தாங்கிச் செல்லும்போதும் எந்தத் திசையிலும் திரும்பிப் பார்க்க முடியும். அதுபோல, மனத்தையடக்கியாளும் மனிதன், உலகத்தில் செய்யவேண்டிய கடமைகளால் சூழப்பட்டிருந்தபோதிலும், தன் நோக்கத்தைக் கடவுளின்மீதே வைத்திருக்கிறான்.]

[6]

ஒன்றின்மே லொன்றாய் நாலைந்து குடத்தை
ஒருமித்துத் தலையினாற் றூங்கிச்

சென்றிடு மகளி ருடன்செல்வா ரோடு
சிறுகதை பேசுவ ரெனினும்
என்றுந்தம் முள்ளங் குடத்தினிற் செல்லும்
இயல்பினர்; வழிமுறை நடப்போன்
குன்றிடா வூக்கத் தோடுநன் னெறியின்
குறிப்பினிற் றவறிடான் மாதோ.

[வடதேசத்திலேயுள்ள பெண்கள் ஒன்றின்மேல் ஒன்றாக நாலைந்து தண்ணீர்க்குடங்களைத் தலைமேல் வைத்து நடந்து போம்பொழுது உடன்போகிற பெண்களோடு தங்களுக்குள்ள துயரம் சந்தோஷங்களைப் பற்றிப் பேசிக்கொண்டு போவார்களேனும், மனம் குடங்கள்மேலிருக்கும். அவ்வண்ணமே, நன்னெறியிற்செல்லுகிற மனிதனும் தன்னுடைய சிந்தையை எப்பொழுதும் நிலைதவறாது உண்மை வழியில் நிறுத்தவேண்டும்.]

[7]

இசைவல பாணன் கருவியோ ரிரண்டை
யிசைத்திடு மரபினி லில்லத்
தசைவிலா துறைவோன் புரிவன புரிவா
னாயினு மமலனா மத்தை
நசையொடு மறவா துரைக்குவ னென்னி
னாதர்பாற் சென்றிடு முள்ளம்
வசையிலாக் கருமங் கரங்களே புரியும்
மார்க்கமும் வழுவில தாமே.

[சங்கீதக்காரன் ஒரே நேரத்தில் இரண்டு இசைகளை இசைப்பதைக் கண்டதில்லையா? இல்லற தருமத்திலிருக்கும் மனிதர்களே, நீங்களும் அவ்வண்ணமாக உங்களுடைய இரண்டு கையாலும் லௌகிக கருமங்களைச் செய்துகொண்டிருந்தாலும், உங்களுடைய மனத்தை ஈசனிடத்து வைத்து, அவனுடைய திருநாமத்தை உச்சரிப்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள்.]

[8]

சோரநா யகனி னெண்ணமே யுளத்திற்
றோன்றிட வவன்வரற் குரிய
ஆரிருட் பொழுதை நோக்கிய கண்ணாள்
அலைவிலாள் பலதொழில் புரியும்
நேரமுஞ் சிந்தை யவனையே நினைக்கு
நிலைமையள் நிலைமையை நிகர்ப்ப
ஏருறு மிறைவன் பால்மனஞ் செலுத்தல்
இல்லறத் தார்க்குறு கடனே.

[சோரம் போன பெண்ணானவள் வீட்டுப்பணிவிடைகள் செய்துகொண்டிருக்கும் நேரத்தில் தன் சோரநாயகனையும் அவன் வருவதற்குரிய நேரத்தையும் இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருக்கிறாள். இல்லறத்திலிருப்பவர்களே, நீங்களும் அப்படியே உங்களுக்குரிய தொழில்களைச் செய்வீர்களாக. ஆனால், உள்ளத்தை மாத்திரம் இடை விடாது இறைவனுடைய திருவடியில் நிறுத்துவீர்களாக.]

[9]

'தோற்றுமிவ் வுலகைத் துறந்திடா நிலையிற்
றொடர்பினை யகற்றுதற் குரிய
மாற்றமதெதுவோ?' என்றிடிற் பங்க
மச்சம்போல் வாழ்ந்திடல் வேண்டும்;
சேற்றிடை யுறையுஞ் சேறுதன் மீது
செறிந்திடாத் தகைமைய தந்த
ஆற்றினி லவனி யிடைநின்று முள்ளம்
அழுக்குறு தமர்ந்திடல் வேண்டும்.

[உலகத்தில் பற்றற்று வாழ்வது எப்படி?' என்று அறிவாயா? சேற்று மச்சத்தைப்போல வாழ வேண்டும். அது சேற்றினுள் வாழ்கின்றது. ஆனால், சேறு அதன்மேற்படுவதில்லை.]

வசனம்

1. விநாயகக் கடவுள்

அகரமென வறிவாகி யுலக மெங்கும்
அமர்ந்தகர வுகரமக ரங்க டம்மாற்
பகருமொரு மூன்ருகி வேறு மாகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொரு ளுன்கினையு மிடர்தீர்த் தெய்தப்
போற்றுநருக் கருட்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

பிரணவப் பொருளாகிய விநாயகக்கடவுளது திருப் பாதாரவிந்தங்களைச் சிரமேற்கொண்டு, அவனது அநந்த மாகிய அருட்டிருவிளையாடல்களுள் ஒரு சிலவற்றை எடுத்துக் கூறுவதற்கு எண்ணினும்.

முன்னுளிலே **பலி**யென்னும் பெயரினையுடைய அரச னொருவன் விநாயகமூர்த்தியை நோக்கிக் கடுந்தவம் புரிந்து மூவுலகத்தாரையும் ஏவல்கொள்ளும் சிறந்த வரத் தினைப் பெற்றனன். அவன் கரும்பொன், வெண்பொன், செம்பொன் என்கிற மூன்று லோகத்தாலாகிய மூவிதக் கோட்டைகளையுடையோனுய்த் **திரிபுரன்** என்னும் பெயரினைப் பெற்று, இந்திராதி தேவர்களை வென்று, மூவுலகங்களையும் அரசு புரிந்து வந்தான்; தன் மைந்தருள் **வச்சிர தமிட்டிரன்** என்பவனைச் **சுக்கிலம்** என்னும் இரும்புக்கோட்டைக்கும், **வீமகாயன்** என்பவனைச் **சுபிலம்** என்னும் வெள்ளிக் கோட்டைக்கும், **காளகூடன்** என்பவ னைச் **சுவிர்த்தி** என்னும் பொற்கோட்டைக்கும் தலைவ ராக்கித் தான் மேலதிகாரியாயிருந்து தன்னுணையின்படி அவர்களை நடத்தி வந்தான். திரிபுரனது கொடுமையைச் சகிக்கலாற்ருத தேவர்கள் துன்புற்றுத் தேவதேவராகிய சிவபெருமானுடைய திருவருளைப் பெற வேண்டியவர்க

ளாய்த் தாங்கள் அவரைச் சரணடைந்தவுடன் தங்கள் மீது இரக்கமுண்டாக்கத் தக்க ஏது எதுவென்றுலோசித்து, ஒரு தேரினையமைத்தார்கள். அத்தேர், சூரிய சந்திரர்களைத் திகிரிகளாகவும், இருதுக்களை உட்பரப்புக்களாகவும், சமயங்களை உள்ளிடமாகவும், பிரகிருதி மாயையை முகப்பாகவும், காஷ்டை முதலிய முகூர்த்த காலங்களை மச்சாகவும், பூவுலகத்தைத் தட்டாகவும், சுவர்க்கலோகத்தை ஆதனமாகவும், கலைகளை முளைகளாகவும், மந்தரகிரியை மேல் வட்டமாகவும், இமயகிரியைக் கொடிஞ்சியாகவும், உதயகிரியைக் கூம்பாகவும், மற்றைய பர்வதங்களையெல்லாம் தூண்களாகவும், தத்துவங்களைக் குடமாகவும், மேகங்களைச் சுற்றுமரங்களாகவும், கன்மேந்திரிய ஞானேந்திரியங்களை ஆபரணங்களாகவும், அண்டங்களை மாலைகளாகவும், புராண சாத்திரங்களை மணி வடங்களாகவும், நட்சத்திரங்களை விதானமாகவும், சமுத்திரங்களை அலங்கார வஸ்திரங்களாகவும், மருத்துவர்களைப் படிகளாகவும், கங்கைமுதலிய தெய்வநதிகளைச் சாமரைகளாகவும், மற்றைய நதிகளையெல்லாம் பதாகைகளாகவும், திதிவார முதலிய நாட்களை நடக்கின்ற வேகமாகவும் உடையது. அந்த இரதத்துக்கு வேதங்களைக் குதிரைகளாக்கி, வசுக்களை அக்குதிரைகட்கு வடிகயிறுகளாகத் தொடுத்து, கன்மகாண்டம் ஞான காண்டம் என்னும் இரண்டு வேத மார்க்கங்களையும் நுகத் தடியாகப்பூட்டி, உபநிடதங்களையெல்லாங் குதிரைகட்கு ஆபரணங்களாகத் தரித்து, பிரணவமென்னும் மத்திகையைக் கொண்டு பிரமனைச் சாரதியஞ்செய்வித்து, மகாமேருவை வில்லாகவும், வாசுகியை நாணாகவும், விண்டுவைப் பாணமாகவும், யமனை அலகாகவும், வாயுவை இறகாகவும், வடவாமுகாக்கினியைக் கூராகவும் புரிந்து, முன்னர்த் தாங்கள் செய்திருக்கின்ற இரதத்தோடு இவ்

வில் முதலிய ஆயுதங்களைக் கொண்டு இந்திராதி தேவர்கள் கைலாய பர்வதத்தைச் சேர்ந்து, இரதத்தை வெளியில் நிறுத்தித் தாங்களனைவருஞ் சிவபிரான் சந்நிதானத்திற்சென்று, அவர் திருவடிகளிற் பல புஷ்பங்களாலருச்சித்து, அஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, பலமுறை துதித்துத் தமது குறையைக் கூறி முறையிட்டு நின்றார்கள்.

இறைவர் தேவர்கட்கு அபயங்கொடுத்துப் பின்னர்த் தனித்திருந்து, திரிபுரனை நாசஞ்செய்யும் உபாயத்தினைக் கருதி, விழிகளை மூடிக்கொண்டு, விநாயகமூர்த்தியை மனத்திற்றியானித்து, ஏகாக்கிர மந்திரத்தைச் செபித்துச் சிறிது நேரம் தவத்திலிருந்தனர்.

விநாயகமூர்த்திக்குக்கிருபைசுரந்து, அவர்சிவபிரான் முகத்தினின்று ஐந்து முகங்கள் பொருந்திய திருமேனியோடு தோன்றி, எதிரில் நின்றனர்.

இறைவர் அவரை நோக்கி, ''தேவர்களின் வருத்தங்களை நீக்குமாறு யான் திரிபுரனைச் சங்கரிக்க வேண்டும். அதற்கனுகூலமாக நான்கு வேதங்கட்கும் முதன்மையாயிருக்கின்ற தேவரீரது மந்திரத்தை பீஜாக்ஷரத்துடனே உபதேசித்தருளவேண்டும்,'' என்று பிரார்த்தித்தார். கணேசமூர்த்தியும் கிருபை சுரந்து, மந்திரத்தையுபதேசித்து, ''காலகாலரே, நீர் அத்திரிபுரனையழிக்கும்படியாகக் கணை விடுகின்றபோது யானுமக்குரைத்த மந்திரத்தை நூறுருச் செபிக்க வேண்டும். மீளவும் அக்கணையைச் செலுத்தும்போது மூன்றுருச் செபிக்க வேண்டும்,'' என்று திருவாய் மலர்ந்தனர்.

இறைவரும் போர்க்களத்திற்போய்த் திரிபுரனோடு போராடிய பின்னர், கணேச மந்திரத்தை உச்சரித்துத் தமது திருக்கரத்தில் முத்தலைச் சூலத்தையெடுத்தனர்.

உடனே யாவரும் திரிபுரமும் பலியும் வெந்து நீறுவதைக் கண்டார்களேயன்றி, அச்சூலமிவ்வாறு சென்றதென்று ஒருவருங்காணவில்லை. தேவரானமைந்த தேரின் முன் சாரதியாகிய திசைமுகன் காணப் பாரதிவடிவாகிய இறைவர் வெண்ணீற்றையணிந்து, பாண்டரங்கம் என்னுங் கூத்தினையாடினார். அவுணர் வெந்து விழுந்தவெண்பனிக் குவையாகிய பாரதியரங்கத்திலே உமையவள் ஒரு கூற்றினளாய் நின்று, பாணி, தூக்கு, சீர்என்னுந்தாளங் களைச் செலுத்தத் தேவர் யாவரினுமுயர்ந்த இறைவர் ஐயானந்தத்தாற் கைகொட்டி நின்று, கொடுகொட்டி என் னுங்கூத்தினை ஆடினார்.

திரிபுரன் முத்தியடைந்த தினம் புரட்டாதி மாதத்துப் பூரணையாதலால், அத்தினத்தை யாவரும் பாருளியென்று வழங்குகின்றனர்.

தேவதேவராகிய சிவபெருமான் கணேசமூர்த்தியைப் பூசித்து வெற்றி பெற்ற வரலாற்றினைக் கூறினும்; இனி உலகமாதாவாகிய உமாதேவியார் விநாயக விரதம் அநுட்டித்துத்தாம் கருதிய வரத்தைப்பெற்றுக்கொண்ட வரலாற்றினைக் கூறுவாம்:

முன்னொரு காலத்திற் பிரம தேவன் குமாரர்களுள் ஒருவனான தக்ஷப்ரஜாபதி அரிய தவங்களைச் செய்து, அவற்றின் பெறுபேறாக உலக மாதாவாகிய உமாதேவியாரைத் தனக்குப் புத்திரியாராகப் பெற்று, அவ்வம்மையாரைச் சிவபெருமானுக்குத் திருக்கலியாணஞ் செய்துகொடுத்தான். தக்ஷனுக்குப் புத்திரியாராயினமையால், அம்மையாருக்குத் தாக்ஷாயணி என்று ஒரு பெயர் உளதாயது.

ஒரு நாள் தக்ஷன் கைலாயத்திற்சென்று சிவபெருமான் சந்நிதானத்தை அடைந்தனன். மருமகனாராகிய

இறைவர் தன்னைக் கண்டவுடனே எழுந்து மரியாதை செய்யாதிருந்தமைக்காகக் கோபித்த தக்ஷன், தன்னரண்மனையைச் சேர்ந்து, சிவபெருமானிலுந்தான் உயர்வடைய வேண்டுமென்னுங் கருத்திளுேடு விண்டுவாதி சகல தேவர்களையும் வரவழைத்து, அவர்கள் முன்னிலையில் ஒரு யாகத்தை நடத்துவானுயினன். அதனையறிந்த தாக்ஷாயணியம்மையார், தம் தந்தையாகிய தக்ஷனையும் தாயாகிய வேதவல்லியையும் நோக்கி, "இறைவரை நிந்தை செய்தல் தகாத செயல்," எனப் பல முறையுங் கூறியும் அவர்கள் கேளாமையினுல், கோபமுற்று, "யாகசாலை பேய் விளையாடும் சுடலையாகக் கடவது!" என்று சபித்து விட்டுத் தம் ஒப்பற்ற நாயகரைநிந்தித்ததக்ஷன் வளர்த்த வுடலைத் தாங்குதல் தகாதென்று தம்முடலினை விட்டனர்.

இறைவர் இந்நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்றுக் கோபங் கொள்ள, அக்கோபாக்கினியினின்றும் வீரபத்திரக் கடவுள் தோன்றினர். இறைவர் வீரபத்திரக் கடவுளை நோக்கித் தக்ஷனது யாகத்தை அழிக்கும்படியாகக் கட்டளையிட்டுவிட்டு, விரைந்து சென்று, சதி (தாக்ஷாயணி) யினுடைய உடலத்தைக் கையிலெடுத்து, பெருந்துயருற்று நின்றனர். [சதியினுடல் விழுந்தவிடம் மாயாபுரி என்னும் ஹரித்துவாரத்திலுள்ள சதி குண்டம் எனவும், விஷ்ணு மூர்த்தி இறைவருடைய துயரினைத் தீர்க்கும் பொருட்டுச் சக்கரப்படையினுற் சதியினுடலத்தை ஐம்பத்தொரு கூறு செய்திட்டாரெனவும், அக்கூறுகள் விழுந்தவிடங்கள் ஐம்பத்தொரு சத்தி பீடமெனவும் புராணங்கூறும்.]

இறைவியார் தாம் தக்ஷனுக்கு மகளாராகிய தன்மையை முற்றிலும் நீக்கிவிட வேண்டுமென்று கருதிப்

பர்வதராஜனுக்கும் அவன் மனைவி மேனைக்கும் குமாரியாகத் திருவவதாரஞ்செய்தருளினர். உரிய காலம் வருதலும், அம்மையார் இறைவரையடைய வேண்டுமென்று கருதி, தம் தந்தையாகிய பர்வதராஜனை நோக்கித் தமதெண்ணத்தைத் தெரிவித்து, அது நிறைவேறுதற்குரிய மார்க்கத்தை உரைக்கும்படி கேட்டருளினர். பொன் மலை மன்னவனும் புத்தியினால் ஆராய்ந்துணர்ந்து, இஷ்ட சித்திகளைத் தருவதாகிய **விநாயக சதுர்த்தி** விரதத்தினியல் பினைக் கூறுவானாயினன்:

"மந்தண மாவது வல்லை நாற்பயன்
தந்திட வல்லது சாபந் தீர்தர
இந்திர னுற்றிய திறைமை மூவரு
மைந்துற வாற்றியே மருவு நீரது.

"அரும்பிய விடரெலாம் அறுக்கத் தக்கது
பெரும்பிணி முழுவதும் பெயர்க்கத் தக்கது
பொரும்பகை வலிகளும் போக்கத் தக்கது
விரும்பிய பொருளெலாம் விளைக்கத் தக்கது.

"தேவர்க டேவன்சிந் துரமு கத்தவன்
மூவர்கண் முதல்வன்முத் தொழிற்குங் காரணன்
மேவர மகிழ்வது விளம்பு நாமமும்
தாவறு விநாயக சதுர்த்தி யென்பரால்."

"இவ்விரதம் ஆவணி மாதம் பூர்வ பக்கத்தில் வருகின்ற சதுர்த்தி தினத்தில் ஆரம்பிக்கப்படுவது. அவ்வண்ணம் ஆரம்பிப்போர், அதிகாலையிலெழுந்து ஸ்நானஞ்செய்து, நித்தியவனுட்டானங்களை நிறைவேற்றிப் பூஜா மண்டபமமைத்துப் பூஜைத் திரவியங்களைச் சேகரித்துப் பரிசுத்தமான இடத்தில் மிருத்திகையெடுத்து முறைப்படி திருவுருவம் சமைக்க வேண்டும். இத்திருவுருவத்தில் விநாயக மூர்த்தியைப் பாவித்து, அடுத்த

மாதச் சுக்கிலபக்ஷ சதுர்த்தி வரையும் நாள்தோறும் விதிப்படி பூஜிக்க வேண்டும்,'' என்று பர்வதராஜன் பூஜாக்கிரமங்களையெல்லாங்கூற, உமாதேவியார் செவி குளிரக்கேட்டு, விரதத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி தந்தையாகிய பர்வதராஜனுக்குச் சொல்லினார். விதி முறைப்படி உமாதேவியார் விநாயக சதுர்த்தி விரதத்தை அனுட்டிக்க, ஐங்கரக் கடவுள் அவர் முன் தோன்றி, அவர் விரும்பிய வரத்தைக் கொடுத்தார்.

உலக மாதாவாகிய உமா தேவியார், விநாயகமூர்த்தியை நோக்கி விரதமிருந்து இஷ்ட சித்திகளைப் பெற்ற வரலாற்றினைக் கூறினும். ஐங்கரக் கடவுள் உமாதேவியாருக்கு மைந்தராகத் திருவவதாரஞ்செய்த திருவிளையாடல்களுள் ஒன்றினைக் கூறுவாம்:

கயிலையங்கிரியில் இமாசல ராசன் புதல்வியாரோடும் எழுந்தருளியிருந்த இறைவர், இளவேனிற்காலம் வந்த போது குளிர்ச்சி வேண்டித் தம் தேவியாரோடும் உய்யான வனத்தையடைந்து, ஆங்குள்ள ஒரு சித்திர மண்டபத்தினுள் எழுந்தருளியிருந்தார். அப்போது உமாதேவியார் அம்மண்டபச் சுவர்களிலெழுதியுள்ள சித்திரங்களைப் பார்த்துக்கொண்டே வரும்போது அவைகளின் ஒரு பால் சத்த கோடி மகாமந்திரங்களும், அவைகளுக்கெல்லாம் முதலில் களிறும் பிடியும் (ஆண் யானையும் பெண் யானையும்) கலந்த காட்சியதாகிய சித்திரத்தோடு கூடிய பிரணவ மந்திரமும் எழுதப்பட்டிருக்கக் கண்டார். கண்டு, பெண் யானையைப் பார்த்துக்கொண்டு நிற்க, இறைவரும் ஆண் யானையை நோக்கினர். உலக காரணர்களாகிய இருவரும் நோக்குதலும், மந்திரத்தினின்று பிரணவ சொரூபியாகிய விநாயக மூர்த்தியானவர் கோடி சூரியப் பிரகாசத்தோடு தோன்றிச் சிவபிரானையும் உமா

தேவியாரையும் பணிந்து நின்றனர். உடனே அவ்விருவரும் ஆனந்தங்கொண்டு, தமக்குப் புத்திரராக வந்த விநாயகமூர்த்தியைப் பரிவோடெடுத்தணைத்து, உச்சி மோந்து, உள்ளம் பூரித்துத் தம் மடியின்மீது வைத்துக் கொண்டனர்.

அப்பொழுது சிவபிரான் விநாயகமூர்த்தியை நோக்கி, "ஓ குமாரனே, என்னில் வேருகாமல் எனக்குப் பிள்ளையாயிருக்கின்ற உன்னை யார் வணங்குகின்ருர்களோ, அவர்களுக்குச் சகல இடையூறுகளையும் தீர்த்து, அவர்கள் விழைந்த காரியங்களை விரைவிற் கைகூடும்படியாக அனுக்கிரகஞ்செய்திடுக; கணங்கட்கெல்லாம் தலைமை பெற்றிருந்து கிருபையை வழங்குக. அதனுல், யாவரும் உன்னைக் கணபதியென்று சொல்லுக. உன்னை யாரும் எக்காரியத்தினும் முன்னதாக வணங்குக. அவ்வாறு வணங்காதோருக்கு இடர்களைப் புரிக. தேவர்களுக்குத் துன்பம் விளைக்கும் கஜமுகாசுரனைச் சங்கரித்துத் தேவர் துயர் தீர்த்தருளுக," என்று திருவாய் மலர்ந்து, உமாதேவியாரோடு அச்சித்திரமண்டபத்தை விடுத்துக் கணபதிப் பெருமானை அழைத்துக்கொண்டு சென்று அவரைத் தமது கைலாயவாயிலின் முகப்பிலிருத்தினர்.

பின்னர்க் கணேசமூர்த்தியானவர், பூதவீரர்கள் புடைசூழச்சென்று, கஜமுகாசுரன் அரசாட்சி செய்யும் மதங்க நகரினையடைந்து, அவனேடு போராடினர். அவ்வசுரன் ஆயுதங்களினுலிறவாதிருக்கும் வரத்தினையுடையவனென்பதை அறிந்து, தமது வலப்புறக் கோட்டின் முனையையொடித்து அவன்மீது விட்டனர். அது கஜமுகாசுரனது மார்பைப் பிளந்து போய்ச் சமுத்திரத்தில் ஸ்நானஞ்செய்து, மீட்டும் சுவாமிகளிடத்தில் வந்து சேர்ந்தது. நிலத்தில் விழுந்த கஜமுகன் மலையைப்

போன்ற ஒரு பெருச்சாளி உருவத்தோடு எதிர்த்து வந்தான். இறைவர் அவ்வாகுவை அசைவறப் பிடித்து முதுகிலாரோகணித்தருளினர். கணபதி மூர்த்தியினது திருக்கரம் பட்ட மாத்திரத்திலே அசுரன் மெய்ஞ்ஞானம் பெற்று விளங்கினன். அவ்விடத்தில் கணேசமூர்த்தி ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, அத்தலத்திற்குக் கணபதீச்சுரம் என்று திருநாமஞ்சூட்டினர்.

பின்னர்க் கணபதி மூர்த்தியானவர் ஆகு வாகனத்தைச் செலுத்திக்கொண்டு வடதிசையை நோக்கி வருதலும், ஆங்கு ஓரால மரத்தடியில் ஏழுயோசனை விசாலித்திருக்கின்ற இருண்ட பொந்தினுள்ளே குருட்டு மலைப்பாம்பாகியிருந்த விஷ்ணு மூர்த்தி, அவ்வுருவத்தினின்று நீங்கிப் பழைய தெய்வவுருவம் பெற்றுக் கணேசமூர்த்தியைப் புஷ்பம் முதலியவற்றால் பூசனைசெய்து, "ஐய, உமாதேவியாரும் சிவபெருமானும் சூதாடியபோது நான் சாட்சியாயிருந்தேன். தேவியார் ஆட்டத்தில் வெற்றி பெற, நான் அவ்வுண்மையை மறைத்துச் சிவபெருமான் வெற்றி பெற்றாரென்று கூறினேன். அதனால், உமாதேவியார் என்னைக் குருட்டு மலைப்பாம்பாகும்படி சபித்தார். இன்று தேவரீருடைய கருணையினால் சாபத்தினின்று நீங்கினேன்; தேவரீரைத் தரிசிக்கும் பேற்றினையும் பெற்றேன். இத்தினம் மார்கழிச் சஷ்டியாதலால் வருடந்தோறும் வருகின்ற இத்தினத்தில் யாவரேனும் தேவரீருக்கு வழிபாடு செய்வார்களாயின், அவர்கள் சகல அரிட்டங்களினின்றும் நீங்கி, இட்டகாமியார்த்தங்களைப் பெறும்படி அநுக்கிரகிக்க வேண்டும்," என்றார். அதனைக் கேட்ட கணேசமூர்த்தி, 'அவ்வாறே செய்வோம்,' என்று அநுக்கிரகித்துத் தமது யதாஸ்தானமாகிய முதற்கோபுர வாயிலில் எழுந்தருளியிருந்தனர். (விநாயக சஷ்டி விரதமனுட்டிப்போர் குறித்த தினத்துக்கு இருபத்தொரு நாட்களுக்கு

முன்பு ஆரம்பித்து, இருபத்தோர் இழையாலாகிய காப்பைக் கையிற்கட்டி, விநாயகமூர்த்தியைப் பூசித்து, விரதமனுட்டித்து, முடிவிற் புரோகிதர்க்குத் தக்ஷிணை முதலியன கொடுத்துக் காப்பையறுத்து, அதனையும், பூசித்த மிருத்திகைத் திருவுருவம் முதலியவற்றையும் ஆற்றிலாவது தடாகத்திலாவது விடுவர்.

மேலைக் கோபுர வாயிலிலிருந்த விநாயகமூர்த்தியின் முன்னிலையில் தேவர்கள் வந்து நின்று இருகரங்களையும் முட்டி பிடித்து மூன்றுதரம் சிரசிற்குட்டிக்கொண்டு, பின்னர் அக்கரங்களை மாறிச் செவிகளைப் பிடித்துத் தோப்புக்கரணம் போட்டுப் பின்பு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து நின்றார்கள். கொடியோனாகிய கஜமுகாசுரனுக்குத் தாம் செய்துவந்த குட்டிக்கும்பிடல், தோப்புக்கரணமென்னுமிவற்றை இந்திராதிதேவர் அக்கஜமுகனைச் சங்கரித்த விநாயகமூர்த்திக்குச் செய்தாராதலினால், அன்று முதல் மூவுலகத்தாரும் அவ்வழக்கத்தைப் பின்பற்றினர். கணபதி விநாயகர் திருவவதாரத்தின் வரலாறு இதுவாகும்.

ஆதியிற் பிரமா விஷ்ணு உருத்திரனாகிய மூவரையும் சிருஷ்டித்து முத்தொழிலுக்குந் தலைவராக்கிய **வக்கிரதுண்ட விநாயகர்**, கபில முனிவருடைய சிந்தாமணியைக் கவர்ந்த கணராஜனை வென்று அதனை மீட்டும் அவர்க்களித்தருளிய **சிந்தாமணி விநாயகர்**, காலரூபனென்கிற விக்கினனையழித்து உலகங்களையெல்லாங் காத்தருளிய **விக்கினராஜ விநாயகர்**, கமலாசுரனைச் சங்கரித்து வேதசாஸ்திரங்களைத் தேவர்களுக்களித்த **மயூரேச விநாயகர்**, சிந்தாசுரனைக் கொன்று தேவர்களைச் சிறைமீட்ட **உபமயூரேச விநாயகர்**, தவராசனுக்கும் அவன் மனைவி சமுதைக்குந் தீங்குசெய்த தூமராஜனைக் கொன்று அவ்விருவரையும் பாதுகாத்த

பாலசந்திர விநாயகர், திரிபுராதிகளை வெல்லும்படியாகச் சிவ பிரானுக்கு அநுக்கிரகித்த கணேச விநாயகர், நராந்தகனையும் தேவாந்தகனையுஞ் சங்காரஞ் செய்து காசிராஜனுக்கு முத்தியளித்த மஹோற்கட விநாயகர், விசுவநாத மூர்த்திக்குக் காசிநகரையளித்த துண்டிவிநாயகர், மரீசியிருடியின் புத்திரி யாகிய வல்லபையையும் விஷ்ணுமூர்த்தியின் புத்திரிகள் பன்னிருவரையுந் திருமணஞ் செய்து விஷ்ணுவுக்கு யோகஞான தத்துவப்பொருளையுபதேசித்த வல்லப கணே சர் என விநாயகர்க்குக் காரணப் பெயர்கள் பல உண்டு.

யாம் முன்புகூறிய வரலாற்றைச் சிவபெருமான் சுப்பிரமணிய மூர்த்திக்குத் திருவாய் மலர்ந்தருளியதாகப் பார்க்கவ புராணம் கூறும்.

பந்த மகற்று மனந்தகுணப்
பரப்பு மெவன்பா லுதிக்குமோ
எந்த வுலகு மெவனிடத்தி
லிண்டி யிருந்து சுரக்குமோ
சந்த மறையா கமக்கலைகள்
அனைத்து மெவன்பாற் றகவருமோ
அந்த விறையாங் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

2. நம் நாட்டின் பெருமை

ஆதிகால முதற்கொண்டு புண்ணிய பூமியான நம் நாடு ஸமரஸத்தைப் போதிக்கும் ஸாதுக்கள் நிறைந்திருக் கிறது. பூர்வகாலத்தில் நம் பாரதவர்ஷத்தின்மீது அயல் நாடுகளிலிருந்து அந்நியர் பலர் படையெடுத்து நம்மவரை அடக்க முயன்றனர். ஆயின், அப்படையெழுச்சிகள் என்னவாயின? வந்தவர் எக்கதியடைந்தனர்? தொட்டதையெல்லாம் புனிதமான பொன்னாக்கும் சத்தி

பெற்ற இரசவாதியைப் போன்று, நம் தேசம் வந்தவர்களுடைய பகைமைக் குணத்தைக் குறைத்து முன்னிருந்தவர்களோடு ஒற்றுமை பாராட்டும்படி செய்கிறது. வந்தவர்களும் நம் நாட்டுச் சமயங்களையே கைக்கொண்டார்கள். அன்றேல், தாம் அவலம்பித்து வந்த சமயத்தை நம் நாட்டிலும் கைக்கொள்ள, அச்சமயமும் ஈசனடியைப்பணிய மார்க்கமாகுமெனப் போற்றப்பட்டு வருகின்றது. இறைவனுடைய மக்கள் யாமெல்லோரும் என அறிவுறுத்துவதனாற்றான், பிற நாடுகள் இருக்குமிடம் தெரியாது அழிந்து போனகாலத்தும் இந்நாடு நன்றாய் இருந்து வருகின்றது. இதனாற்றான் இன்னல்கள் தோன்றினும், இடுக்கண்கள் பல விளையினும், இறைவனொருவனையே நம்பி, இவ்வுலக சுகத்தை விட்டு, இதற்கப்பாலுள்ள ஸத்திய லோகத்தையே நாடுபவர் அனைவரும் சகோதரர் என நம்பச் செய்கிறது.

பெரியார் சமரஸத்துவம் சகோதரத்துவம்

இச்'சகோதரத்துவம்' வெற்று வாய்ப்பேச்சன்று. கல்வி நிறைந்த சீமான்களுள் பலர் இஃது உண்மையே என நம்புகின்றனர். தேசத்திலே முக்கிய சமயங்களுள் ஸநாதன தருமம் இஸ்லாமியக் கொள்கை ஆகிய இரண்டையும் சமரஸப்படுத்தி, இரண்டினும் கூறப்பட்ட தெய்வங்கள் ஒன்றென நம்பின பெரியோர்களுமுண்டு. ஹிந்துப் பெற்றோருக்குப் பிறந்து இஸ்லாம் கொள்கையைத் தழுவினவர்களும், இஸ்லாமிய குடும்பத்திற்பிறந்து ராமநாம ஸ்மரணை செய்தவர்களுமுண்டு. மஹான் நானக்கு, பத்தர் கபீர் தாஸர், பகவான் கௌரங்கர், ஞானி மஸ்தான் சாகிபு அவர்கள்—ஆகிய இவர்கள் எல்லோரும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கினரேயன்றித் தனியாகக் கடவுள் தமக்கெனக் குறித்துக்கொள்ளவில்லை. இப்பெரியோர்

களை இரு ஸமயத்தினரும் ஒரேவிதமாகவே கொண்டாடுகின்றனர். தம்மைப்போலவே பிறரும் சத்தியசந்தர், தருமத்தைக் கடைப்பிடிப்பவர் என நம்மவர் நம்புவதனாலேயே இப்படி இனிமையுடன் இருவரும் ஒருமித்து, ஒருவர் மற்றொருவருடைய சமயக் கொள்கைகளை மதித்து நடக்க, நம் நாட்டில் இயலுகின்றது.

சமயச் சண்டைகள்

ஆயின், இச்சமரஸத்தையும் சமய நல்வாழ்க்கையையும் உண்மையோவெனப் பரிக்ஷிப்பதுபோல, சில சந்தர்ப்பங்கள் நிகழ்கின்றன. ஸநாதன தருமத்தை அவலம்பிக்கும் ஜனங்களுடைய திருவிழாக்களும் தெய்வவாசகமாகிய குர்ஆனைப் பின்பற்றுகிறவர்களுடைய கொண்டாட்டத் தினங்களும் சில சமயங்களில் ஒரே காலங்களில் நிகழும். அப்போது சமய நூல்களின் உட்பொருளை முழுவதும் அறியாது அரைகுறையாக உணர்ந்த அறிவிலிகள், தம் மதமே உயர்ந்ததெனக்கருதி, பிற மதத்தினரைத் தூஷித்து, வீண் சண்டைக்கிழுக்கின்றனர். உயிர்ச்சேதமும் சிற்சில சமயங்களில் நேருவதுண்டு. இவ்வாறு மோசமான காரியங்கள் நம் தேசத்திலே சிற்சில இடங்களிலேதான் நடைபெற்றன சில நாட்களுக்கு முன்.

சமயச்சண்டைகள் அறிஞரால் வெறுக்கப்பட்டவை

இரு சமயத்திலுமுள்ள அறிஞர்கள் இவ்வித முரட்டுத்தனமும் மூடத்தனமுமான செய்கைகளைக் கண்டித்து, சகோதரத்துவம் பாராட்டியும், ஒற்றுமை உண்டாகும்படி உழைத்தும் வருகின்றனர். ஆனால், இரு சமயத்தினருக்கும் கலகம் மூட்ட எண்ணித்திரியும் கசடர் சிலர் இச்சம்பவங்களை 'வேம்பன்றோ காக்கை விரும்பும் கனி?' என்பது போல, விரித்துக் கூறி வருகின்றனர். இம்மதியினர்கள் நாடெங்கும் ஒற்றுமையுடன் வாழ்ந்து

வரும் ஒரு தாய் வயிற்றிற்பிறந்த எண்ணிறந்த அறிஞரை ஒரு பொருளாக எண்ணுவதில்லை போலும்! சில இடங்களில் நடக்கும் சச்சரவுகளைக் கூறித்திரியும் இவர்கள் பல கோடி இடங்களில்—தத்தமக்குரிய வழிகளில் இறைவணைப் பாங்குடன் தொழுவதை அரியாரோ? கடுகைக் கணக்கெண்ணக் கண்ணுள்ள இக்கசடர்களுக்குப் பூசனிக்காயை எண்ணப் பார்வையில்லாது போயிற்றோ?

சமயச் சச்சரவுகளுக்குக் காரணம் சமய உணர்ச்சியின்மையும் அறியாமையுமே.

இஃதொருபுறமிருக்க, நம் நாட்டிலுள்ள சமயங்களைத் தழுவுபவர்களுக்குள் சிறிய அளவிலேனும் சச்சரவு ஏற்படக் காரணம் என்ன? பிற நெறியைக் கொள்பவர்களுடைய உண்மை மனநிலைமையை அறியாமையேயாம். எவ்வுயிரையும் படைத்த ஈசனார் தமது அமிசத்தில் ஒரு சிறிதேனும் நம்முள்ளத்திலடங்கியிருக்கிறார். அழிவற்றதும், ஆனந்தம் நிறைந்ததும், கருணை பொருந்தியதும், எல்லாவுயிரையும் தனதாகவே பாவிக்கும் இயற்கை உள்ளதுமான ஈசுவராமிசம் நாமே என்பதை மறந்து, நம்மைக் கேவலம் உண்ணவும் உறங்கவும் ஏற்பட்டுள்ள பிராணிகளாக்கி, பிறரிடம் குற்றமும் குறையும் கண்டு, அதனால் பல தொல்லைகளுக்குட்படுகிறோம். இதனால், நாமறிவது யாது? நம் நாட்டிற்பிறந்த-அன்று-உலகத்திற் பிறந்த மானிடர் அனைவரும் தாம் மேற்கொள்ளும் சமயத்தை உண்மையுடன் அறிந்து, அதில் கூறியுள்ள கொள்கைகளை அவலம்பிக்க முயற்சி செய்ய வேண்டும். பிறகு பிற மதங்களின் உண்மையை அறியவேண்டும். அப்படிச்செய்யாவிடின், பளிங்கு மாளிகையில் வசிப்போர் தாம் இருக்குமிடம் மறந்து, பிறர்மீது வம்புக்காகக் கல்லெறிவது போல முடியுமேயன்றி, வேறன்று.

ஒத்து வாழ்பவர்களே அதிகம்.

சில வருஷங்களுக்கு முன் பல ஸர்வ சமயக் கூட்டங்கள் கூடியதுண்டு. அக்கூட்டங்களிலே, சபையிலுள்ளோர் தம்முடைய பெருமையையும் பிற மதத்தினுடைய சிறுமையையும் பேசி வருவார். ஆனால், இப்போது அத்தகைய மூட எண்ணம் மறைந்துவிட்டது எனலாம். இக்காலத்தில் கூட்டம்கூடுவோர், தமது மதம் சில விஷயங்களிற் சிறந்தது எனக்கூறினும், பிற மதங்களைக் கைக்கொள்பவரும் தம்மைப் போலவே பத்தியுடன் ஈசுவரனைத் தொழுபவராய் இருக்கின்றனர் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது. அதோடு நாம் முதலிற்கூறியதுபோல, தம் சமய நூல்களை முதலில் வாசித்தறிந்து, அவைகளில் கூறியுள்ள மேலான தருமங்களை அனுபவத்தில் அவலம்பித்தல் அவசியமென்றும் கூறுகின்றனர்.

நம் நாட்டில் சமயவுணர்ச்சியே பலமானது.

மேற்பகுதியில் கடைசியில் கூறப்பட்டவைகளை நாம் மனத்தில் வைக்க வேண்டும். ராஜிய சுதந்தரமே முக்கியமென்று நம் நாட்டார் கருதும் இத்தருணத்தில் சமயச் சண்டைகள் ஏற்படின், நாடு அலங்கோலமடையும். பலர் ஒன்று கூடி வாழ எப்படித் துரைத்தனம் வேண்டுமோ, அப்படியே ஒவ்வொருவனும் தன் தனி வாழ்க்கையில் வாழச் சமயமும் அவசியம். மேலும், மேல் நாட்டாருக்கு ராஜிய விஷயங்கள் மிகவும் அவசியம். அவைகளுக்காகத் தம் உயிரையும் கொடுக்க அன்னார் தயாராயிருப்பர். ஆனால், இந்தியரோ, அவற்றைச் சமயவுணர்ச்சிக்கும், சமயவாழ்க்கைக்கும் தாழாகவே கருதுவர். இது நம் தேச சரித்திரத்தினுண்மையாகும். ஆதலின், நாடு செழிப்புற்று விளங்கவேண்டுமென விரும்புவோர், சமயநூல்கள்

பரவவும், சமய வாழ்க்கையை மேலும் மேலும் அனைவரும் அவலம்பிக்கவும் முயற்சி செய்ய வேண்டும். சமய வாழ்க்கை, அதாவது ஒவ்வொருவனும் தான் வேத மெனக் கருதும் நூல்களில், பெரியோர் கூறிய மொழி களில் எவை மேலானவைகளோ அவைகளைக் கடைப் பிடித்தொழுகல் வேண்டும். அப்போதே சுயநலங்கரு தும் குணமும் துர் எண்ணமும் மறையும்.

3. வைதிக நெறி

'வேதமுட னாகம புராணமிதி காசமுதல்
வேறுமுள கலைகளெல்லாம்
மிக்காக வத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவா யெடுத்துரைக்கும்;
ஓதரிய துவிதமே யத்துவித ஞானத்தை
உண்டுபணு ஞானமாகும்;
ஊகமனு பவவசன மூன்றுக்கு மொவ்வுமீ
துபயவா திகள்சம்மதம்;
ஆதலி னெனக்கினிச் சரியையா திகள்போதும்;
யாதொன்று பாவிக்கநான்
அதுவாத லாலுன்னை நானென்று பாவிக்கின்
அத்துவித மார்க்கமுறலாம்;
ஏதுபா வித்திடினு மதுவாகி வந்தருள்செய்
எந்தைநீ; குறையுமுண்டோ?
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே!'

—தாயுமானவர்

வேதம்

திருவளர்ந்தோங்கிய பரதகண்டத்திலே, தொன்று தொட்டு வழங்கிவருகின்ற சமயநெறி, வைதிகநெறியாகும்.

வைதிகம் வேதசம்பந்தம் ஆதலின், வேத நூல் வழி நின்றோர் வைதிகரெனப்படுவார். இவரையே ஆஸ்திக ரெனவுங்கூறுப. வேதம் என்பன இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்னும் நான்குமாம். இவற்றின்வேறாய நூல்களை வேதமென வழங்குவது உபசாரமாத்திரையேயாம். வேதப்பொருளைத் தமிழிற் கூறும் நூல்களை உத்தர வேதம், தமிழ் வேதமென ஆன்றோர் அடையடுத்துக் கூறிய வழக்கினை நோக்குங்கால், பூருவ வேதமாகிய வட மொழி வேதமே முதனூலென்பது நன்கு பெறப்படுகின் றது. இம்முதனூல் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று புருஷார்த்தங்களைத் தருவனவாகிய கருமானுஷ் டானங்களைக் கூறும் கருமகாண்டமெனவும், மோக்ஷமாகிய வீடு பேற்றினைத்தரும் ஞானனுஷ்டானங்களைக் கூறும் ஞான காண்டமெனவும் அமைந்த இரு காண்டங்களாகி இம்மை மறுமைப் பயனனைத்தினையும் ஒருங்கே தரும் மாண்பினையுடையது.

வேதாங்கம்

இம்முதனூற்பொருளை ஆராய்வதற்கு இன்றியமை யாதனவாகிய கருவி நூல்கள் ஆறு உள. இவற்றை **வேதாங்க**மென்ப. வேதத்தின் உச்சாரண லக்ஷணத்தை உணர்த்துகின்ற **சிக்ஷை**, பதலக்ஷணத்தை விரித்துக் கூறும் **வியாகரணம்**, வேதத்தின் பதங்களுக்கு விவரணங் கூறுகின்ற **நிருத்தம்**, இலக்கினம், திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம் முதலியவற்றால் வைதிக கருமங்களுக்குக் காலம் அறிவிக்கும் **சோதிடம்**, வைதிக கருமங்களைப் பிர யோகிக்கும் முறைமையைக் கற்பிக்கும் **கல்பம்**, வேதத்தில் கூறப்படும் உத்தை முதலிய சந்தோபேதங்களுக்கு அக்ஷர சங்கியை கற்பிக்கும் **சந்தோவிசிதி** ஆகிய ஆறும் வேதாங்க மெனப்படுவன.

ஆகமம்

ஆகமம் என்பது ஆத்த வாக்கியம். ஆகமங்கள் லௌகிகம், வைதிகம், அதியான்மகம், அதிமார்க்கம், மந்திரம் என ஐவகைப்படுமென்ப. இவ்வைவகைப் பொருளும் வேதத்தினுள்ளுங் காணப்படுவனவாதலின், வேதமும் ஆகமமும் ஒத்த பொருளினவேயாம். ஆகமம் என்னும் பொதுமொழி ஆத்தவாக்கியம் அனைத்தினை யுங் குறிக்குமாயினும், மந்திர நூற்பொருளை விசேடித்துக் கூறும். சிவாகமம், சாக்தாகமம் ஆகிய இரண்டினையுமே ஆகமமெனச் சிறப்பித்துக் கூறுதல் வழக்காமென்பது. காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அரிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌர வம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற் கிதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமே சுரம், கிரணம், வர்துளம் என்னும் இருபத்தெட்டுஞ் சிவாகமங்களாம். சாக்தாகமங்கள் எண்ணிறந்த பல வாம். ஆகமங்களனைத்தும் ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் எனத் தனித்தனி நான்கு பாதங்களையுடையன. இந்நான்கு பாதங்களுங்கருதிய பொருள் வீடு பேறு. வேதங்கருதிய பொருள் முன்னர்க் காட்டியவாறு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும். ஆதலினாலே, வேதம் பொது நூலெனப் பட்டது. அனைத்துப் பொருளையுங் கூறும் நூல், பொது நூல்; ஒரே ஒரு பொருளைத் தனித்துக் கூறும் நூல் சிறப்பு நூல். அதர்வ வேதத்துக்குரிய உபநிடதங்க ளாகிய அதர்வசிகை, அதர்வசிரசு, அத்யாத்துமம், அன்னபூர்ணம், அமிர்தநாதம், அமிர்தவிந்து, அவ்யக் தம், கிருஷ்ணம், கௌளம், க்ஷுரிகம், கணபதி, காத்தியா ணம், காலாக்கினி ருத்திரம், குண்டிகம், திரிபுரதகனியம்,

தக்ஷிணாமூர்த்தி, தேவித்வயம், தியானவிந்து, நாதவிந்து, நாரதீயம், நாராயணம், நாரசிங்கதபனீயம், பாசுபதம், பிரஹ்பபைங்களம், பைப்பலாதம், வகுவரீசம், விருகஜாவலம், பஸ்மம், முக்திகம், ரகஸ்யம், ராமதபனி, வஜ்ரபஞ்சரம், வாராகம், வாசுதேவம், சரஸ்வதி ரகஸ்யம், சுதரிசனம் என்றித் தொடக்கத்து உபநிடதங்கள் கூறும் பொருளே மந்திரநூற்பொருளாக விரிந்து நின்றதாதலின், "வேதசிவாகமங்களுக்குப் பேதம் காண்கின்றிலம்; வேதமே சிவாகமம்," என்று கூறிய நீலகண்ட சிவாசாரியார் வாக்கு நிலைபெறுகின்றது.

புராணம்

வேதத்துட்பொருளை விளக்குகின்ற பழங்கதைகள் மேற்றொடர்ந்து வருவனவாய், உயர் தனிப்பொருளை எளிதிலுணர்த்தும் நீர்மையவாய் விளங்கும் புராணங்கள் பதினெட்டு உள. அவைதாம் மச்சம், கூர்மம், வராகம், வாமனம், பதுமம், வைணவம், பாகவதம், பிரமம், சைவம், இலிங்கம், பௌடியம், நாரதீயம், காரூடம், பிரமகைவர்த்தம், காந்தம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமாண்டம் என்பன. அவையுமன்றி, நாரசிங்கம், சநற்குமாரம், நாரதியம், சிவதன்மம், துருவாசம், நந்திகேச்சுரம், அவுசனம், காளிகம், வாருணம், சாமபேசம், பராசரம், பிரமாண்டம் என்னும் பதினெட்டு உபபுராணங்களும் உள. புராணங்கள் ஐவகை இலக்கணங்களையுடையனவென அறிஞர் கூறுவர். அவையாவன, சர்க்கம் (உலகத்தோற்றம்). உபசர்க்கம் (உலகவொடுக்கம்), மந்வந்தரம் (காலவெல்லை வரையறை), வமிசம் (அரசர் வரன்முறை), வம்சாநுசரிதம் (வரன்முறையையொட்டிய கதைகள்) என்பன. இவ்விலக்கணங்களையுடையனவாய்ப் பிற்காலத்திற்பிறந்த நூல்களும் புராணங்களேயாம்.

இதிகாசம்

காவற்கடவுளாகிய இறைவன் ஸ்ரீராமசந்திரனாய் அவதரித்து இராவணாதியரை வென்று உலகத்தில் தருமத்தை நிலை நாட்டிய வரலாற்றினைக் கூறும் **இராமாயணம்** என்னும் தெய்வநூலும், ஸ்ரீ கிருஷ்ணனாய் அவதரித்துத் துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலஞ் செய்த மாண்பினைக் கூறும் **மகாபாரதம்** என்னுந் தெய்வநூலும் இதிகாசமெனப் போற்றப்படுவன. மகாபாரதத்தினுள்ளே கிருஷ்ணார்ச்சுன சம்வாதரூபமாய் விளங்குகின்ற **கீதாசாஸ்திரம்** வேதப் பொருளனைத்தையுந் தொகுத்துக்கூறும் மாண்பினது.

வேறுமுள கலைகள்

உடலுக்குற்ற பிணிகளைப் போக்குதற்குரிய வழிவகைகளைக் கூறும் ஆயுர் வேதமும், இசை மரபு கூறும் காந்தர்வ வேதமும், வில் வித்தையுரைக்கும் தநுர் வேதமும், அரசியல் மரபு பொருள் செயல் வகை என்னுமிவற்றைக் கூறும் அர்த்த வேதமுமாக உபவேதங்கள் நான்கு உள. இவையும் பதினெண் ஸ்மிருதி, அறுபத்து நான்கு கலைக்கியானம் என்றின்ன பிறவும் வேறுமுள கலைகள் எனப்பட்டன.

அத்துவித துவித மார்க்கம்

'இங்ஙனம் பரந்து விரிந்து நூல்களனைத்தினாலுங் கூறப்படுகின்ற முடிந்த பொருள் எதுவோ?' என்னின், மோக்ஷாநுபவம் என்பது. இவ்வநுபவம் உரை மனம் இறந்து நின்ற நிலையினதாதலின், இத்தகையதென நூல்களாற் கூறவொண்ணாதது. 'பின்னர் நூல்களாற் கூறப்படுவதெதுவோ?' எனின், அவ்வனுபவத்தினை அடைவதற்கு அப்பியசிக்க வேண்டிய மார்க்கம் என்பது. இம்மார்க்கங்கள் பல திறப்படுவன. ஆயினும், இவை

அனைத்தும் அத்துவித மார்க்கம், துவிதமார்க்கம் என இரண்டாயடங்குவன. துவிதம் என்பது அன்புக்குரியானை யும் அன்பு செய்யுந் தன்னையும் இருவராகக் காணும் நிலை. அத்துவிதம் என்பது தானேயவள், அவளே தானென்று உணரும் அபேத உணர்ச்சி நிலை.

துவிதமே அத்துவித ஞானத்தை உண்டுபண்ணும் ஞானம்.

துவித நிலையினின்று பேரன்பு பூண்டார்க்கன்றி, அத்துவித நிலை வந்தெய்தப் பெறுதாதலின், "துவிதமே அத்துவிதஞானத்தை உண்டு பண்ணும் ஞானமாகும்," என்று கூறப்பட்டது. இங்ஙனம் அத்துவிதஞானத்துக்கு வாயிலாகவிதந்து கூறப்பட்ட துவித ஞானமானது அன் பின் வயத்ததாதலானும், அன்பு உள்ளத்துணர்வா லனுபவிப்பதன்றி உரையினுற் கூறவொண்ணுததாத லானும், துவித நிலையை, "ஓதரிய துவிதம்" என்ருர். அஞ்ஞான நிலையிலிருப்போன் பேதவுணர்ச்சியினுலே பொருளைப் பலவாகக் காண்பான். ஞானநிலையிற்செல்லா நின்ற பெரியானேவெனின், உள்ளத்தாலறிய அன்பின் முதிர்ச்சியினுலே பிரபஞ்சம் அனைத்தினையும் மறந்து, தன்னையும் தலைவனையுங்கண்டு நிற்பான். இந்நிலையில் நிற்போனுக்குப் பிரபஞ்சம் இல்பொருளாகின்றது. உண்டுடுத்துக் களியாடும் மாக்களுக்குப் பிரபஞ்சம் உண்மைப்பொருளாயினுகுக. தன்னையுந் தலைவனையுமன் றிப் பிறிதொன்றனையுமறியா அன்பனுக்குப் பிரபஞ்சம் இன்மைப் பொருளேயாம். இந்நிலையானது இரு பொருளே யன்றிப் பிற பொருளறியா நிலையாமாகலின், இதனைத் துவிதமெனல் பொருந்தும். எஞ்சிநின்ற மனமும் அற்றுப் போகத் தன்னையும் மறந்து தலைவனை மாத்திரம் உணரா துணர்ந்து நின்ற நிலை அத்துவித நிலை என்ப. அங்ஙன

மாதலின், துவிதவாயிலானன்றிமோஷாநுபவத்தையடைதல் கூடாதென்னும் துவித வாதிகள் கூற்று அத்துவித வாதிகளுக்குஞ் சம்மதமானதே என்பது பெறப்பட்டது.

ஊகம் அநுபவ வசனம்

உண்மையையறிந்து நிச்சயித்தற்கு மூன்று வாயில்கள் உண்டு. அவைதாம் சுருதி, யுத்தி, அநுபவம் எனப்படுவன. இவற்றுள் அநுபவம் எனப்படுவது மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் என்னும் ஆறு வாயிலானும் நேரே கண்டறியப்படுவது. அங்ஙனம் நேரே கண்டறிந்த உண்மைகளை ஆதாரமாகக்கொண்டு, நியாயநூல், தருக்கநூல் என்னும் கருவிகளாற் செயற்கைப்படுத்தி முடிவு செய்த உண்மை யுத்தி எனப்படுவது. இறைவனால் நேரே கண்டறிந்த உண்மைகளும் வினையின் நீங்கி விளங்கிய அறிவினையுடைய முனிவர்களால் வெளியிடப்படும் உண்மைகளும் சுருதி எனப்படுவன.

உபயவாதிகள் சம்மதம்

துவித ஞானமே அத்துவித ஞானத்துக்கு வாயிலாக நிற்பதெனும் மேலான உண்மை, மேலே காட்டிய மூன்று பிரமாணங்களாலும் பெறப்படுவது. அஃதன்றியும், இவ்வுண்மை துவிதவாதிகள், அத்துவிதவாதிகள் ஆகிய இரு சாராருக்கும் ஒருப்பாடானது. விசிஷ்டாத்வைதம் ஏனைய இரண்டினுக்கும் இடை நிகர்த்ததாய் நின்றதாதலின், அதனைத் தனித்துக் கூறாது விட்டார்.

சரியையாதிகள் போதும்

ஞானத்தையடைவதற்குச் சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று படிகள் உள. இப்படிகளை முறையே அநுஷ்டிக்க, ஞானம் தானே வந்து எய்துமாதலின், தவப்பெருஞ்செல்வராகிய **தாயுமான சுவாமிகள்,** "எனக்

இனிச் சரியையாதிகள் போதும்,'' என மொழிந்தார்; 'நான்கு பாதங்களும் அரும்பு, மலர், காய், கனியை ஒத்தன,' என மற்ருேரிடத்துங் கூறினர். முதனின்ற மூன்று பாதங்களும் தலைவனைத் தனக்குப் புறம்பாக நினைத்துத் தொண்டு, பூசை, பாவனை, தியானம் என்னும் இவற்றைச் செய்தற்குரியவாதலால், இவை துவித மார்க்கமாயின.

உன்னை நான் என்று பாவிக்கின் அத்துவித மார்க்கமுறலாம்.

'ஆன்மா சார்ந்ததன் வண்ணமாவது,' எனத் துவிதவாதிகள் கூறுவார்கள். இதனை அநுபவத்தில் தூலமாகக் கண்டறிதல் கூடும். நாடகத்தில் ஸ்திரீ வேடமிட்டு நடிப்பவனோர் ஆண்மகன், நாடக அரங்கத்துக்குப் புறம்பேயும் ஸ்திரீகளைப்போல நடத்தல் வசனித்தல் செய்வதையும், ராஜவேஷமிட்டு நடிப்போனது நடையில் ஓர் உயர்வு காணப்படுவதையும் நேரில் நிச்சயித்தல் கூடும். இறைவனுடைய அருட்குணங்களைச் சதா சிந்தை செய்துகொண்டிருப்பவனிடத்தே அவ்வருட்குணங்கள் தோன்றுவதுமியல்பே. உடலுக்கும் உயிருக்கும் ஏற்பட்ட தொடர்பினை நிகர்த்தது, உயிருக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள தொடர்பு. ஆதலினுல், இறைவனை "உயிரினுக்குயிர்'' என்ருர். அங்ஙனமாகலின், இறைவனை உயிருக்குயிராகப் பாவித்துச் சிந்தையில் வைத்துத் தியானிக்குமிடத்து, அபேத உணர்ச்சியாகிய அத்துவித ஞானம் வந்தெய்தும். இறைவன், "எது பாவித்திடினும் அதுவாகி வந்தருள் செய்வான்.'' ஆதலினுலே, அவனை எதுவாகப் பாவித்திடினும் அதனுலெய்திய "குறை'' இல்லை என்பது பெறப்பட்டது அனைத்துயிர்களும் எம்மிறைவனிடத்திருந்து தோன்றிய

வாதலின், இறைவனை "எந்தை" என்றார். இச்செய்யுளினால் வேறுபடு சமயங்களால் உணர்த்தப்படும் உண்மைப் பொருள் ஒன்றே என்பதனையும் அவ்வுண்மைப் பொருளை அடையும் மார்க்கம் இதுவென்பதனையும் தாயுமான சுவாமிகள் தெளிவாக விளக்கியருளினார்.

4. 'அழுத பிள்ளை பால் குடிக்கும்.'

"கண்மலர்க ணீர்ததும்பக்
கைம்மலர்க ளாற்பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய்
மணியதரம் புடைதுடிப்ப
எண்ணின்மறை யொலிபெருக
எவ்வுயிருங் குதூகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம்
பொருமியழு தருளினார்." —சேக்கிழார்

'அழுதபிள்ளை பால்குடிக்கும்.' இதற்கு எள்ளளவேனும் ஐயமில்லை.

'தாய் பிற தொழிலில் முயற்சி செய்திருக்கும் வேளையாயினும், குழந்தை பசித்து அழுமாயின், தாயானவள் உடனே வந்து குழந்தையைக் கையிலெடுத்து மார்போடணைத்துப் பாலூட்டிப் பசி தணித்துப் பின்பு வேறு தொழில் பார்க்கப் போவாள். தாய் கொடுத்த ஒரு விளையாட்டுப் பொருண்மேல் ஊக்கமாயிருக்கிற குழந்தை, சற்று நேரந் தாயை மறந்திருக்கும். பின்பு விளையாட்டுப் பொருள்மேலுள்ள ஆசை அகன்று போகத் தாயினுடைய ஞாபகம் வரும். வருதலும், விளையாட்டுப் பொருளை வீசியெறிந்துவிட்டுக் குழந்தையானது தாயை நினைந்து அழுது விம்மும். அழுகை செவிப்படலும் அன்னை ஓடோடியும் வந்து, குழந்தையினுடைய கண்ணீ

தைத் துடைத்தும் பாலூட்டியும் ஆறுதல் அளிப்பாள். ஜகன்மாதாவாகிய அன்னையினுடைய இயல்பும் இதுவே' என்னப் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர் சொல்லுகிறார்.

உலகிலுள்ள மானிடரனைவரும் ஜகன்மாதாவினுடைய குழந்தைகளே. அன்னை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விளையாட்டுச்சாமான் கொடுத்திருக்கிறாள்.

ஒருசாரார், கல்வியென்னும் விளையாட்டுப் பொருளைக் கைக்கொண்டு, இரவும் பகலும் அதன்மேல் ஊக்கஞ் செலுத்துபவராகிச் சாங்கியம், யோகம், வைசேஷிகம், வேதவேதாந்தம், தருக்கம், வியாகரணம், சிக்ஷை, மீமாஞ்சை என்னும் இவற்றைக் கற்று, இவற்றின் பொருளைச் சொல்லுவதிலும் பிரசங்கிப்பதிலும் காலங்கழிக்கின்றனர். ஜகன்மாதா புன்னகையோடு பிறதொழில் புரிந்துகொண்டிருக்கிறாள். கல்வியென்னும் விளையாட்டுப் பொருளோடு காலங்கழிக்கும் இக்குழந்தைகளை அவள் திரும்பிப் பார்ப்பதில்லை.

வேறு சில குழந்தைகளுக்கு அவள் செல்வத்தைக் கொடுத்திருக்கிறாள். அவர்கள் பொன்னிலும் அதன் மூலமாக வருகின்ற சுகாநுபவங்களிலுஞ் சிந்தையைச் செலுத்தி அன்னையை மறந்திருக்கிறார்கள்.

வேறு சிலர், மண்ணாசை, பெண்ணாசை என்னுமிவற்றிற் கட்டுப்பட்டுக் காலங்கழிக்கின்றனர்.

ஆசையையுடைய உள்ளம் ஆசைப்பட்ட பொருளை நாடியோடுமாதலால், ஆசை வலையிற்சிக்கிய மானிடர் அன்னையை மறப்பது இயல்பாயிற்று. விளையாட்டுப் பொருள் போன்ற நிலையற்ற கல்வி, செல்வம் என்னும் இவற்றின்மேற்செல்லும் உள்ளமானது, இவற்றை

வெறுத்து ஜகன்மாதாவை நோக்குமாகில், அம்பிகை உடனே பிரசன்னமாவாள். அழுத பிள்ளை பால் குடிக்கும். இதற்குச் சற்றேனும் ஐயமில்லை. மனிதர் கேவலம் பொருள் இன்பங்களை விழைகிறார்கள். அன்னை அவர்களுக்கு அவற்றைக் கொடுக்கிறாளாதலால், மேலான முத்தி நிலையை அவர்களடைவதில்லை. இவற்றையெல்லாம் வெறுத்தெறிந்துவிட்டு உண்மையார்வத்தோடு "அன்னாய், அன்னாய்," என்று அழுதால், அன்னையினுடைய மடித்தலத்தையடைதல் கூடும்.

'பரந்த இப்பிரபஞ்சத்தையும், உயிர்க்கூட்டங்களையும், நம்மனைவரையும் பெற்ற உலகமாதா ஒருத்தி இருக்கின்றாள். அறியுமறிவெல்லாம் அவள் அறிவிக்குமறிவே. பெறுகின்ற பொருளனைத்தும் அவளுவந்தளித்த பொருளே. கந்தனையுங் கணபதியையும் பெற்ற உத்தமி, முப்பத்திரண்டறம் வளர்த்த முதல்வி, மணி முடி சூடி மதுரையையாண்ட மகாராணி, இந்திரனும் சந்திரனும் ஏனைய தேவர்களும் தன் கான்மலரண்டை வீழ்ந்து கிடப்ப அணி மணிச்சிங்காசனத்து வீற்றிருந்து மூவுலகையும் அரசு புரிகின்ற ராஜ ராஜேஸ்வரி ஆகிய இத்தகைய ஜகன்மாதா எம் அன்னையாய் இருக்கும்பொழுது எமக்குற்ற குறைதான் என்னை?' என இவ்வாறு உள்ளத்து நினைத்து நாம் களி கூர்வோம்.

இங்ஙனம் களிகூர்வது ஒரு கணப்பொழுதுதான். ஏனெனில், பின்பு சந்தேகப் பேய் வந்து உள்ளத்தைப் பற்றிக்கொள்ளுகிறது. 'செயற்கருந்தவமிழைத்த செந்தண்மையோராற்காண்டற்கரிய திரிபுரசுந்தரியாகிய அம்பிகை, பேதையேமுடைய அவலக்குரல் கேட்டு அருள் புரிய வருதல் யாங்ஙனம் ஆகும்? எம்பெருமாட்டியின்பெருமை எத்துணை மேதகவுடையது! நாயினுங்கடையேமாகிய

சிறியேமுடைய புன்மை எந்நீர்மையது?' இத்தகைய எண்ணங்கள் மனத்தைப் பீடித்துத் துன்புறுத்து கின்றன. அங்ஙனம் துன்புறுகின்ற வேளையில் நம் உள்ளத்துற்ற அவலமும் ஐயமும் நீங்குதற்பொருட்டு அழுத பிள்ளை பால் குடித்த கதையைச் சிந்திக்கவேண்டும். மகத்துவம் பொருந்திய அக்கதையைச் சுருக்கமாக ஈண்டுத் தருவாம்:

"அவம்பெருக்கும் புல்லறிவின்
அமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள்
பாழ்படநல் லூழிதொறும்
தவம்பெருக்குஞ் சண்பையிலே
தாவில்சரா சரங்களெலாஞ்
சிவம்பெருக்கும் பிள்ளையார்
திருவவதா ரஞ்செய்தார்."

இங்ஙனம் பிள்ளையார் திருவவதாரஞ்செய்த காலத்திலே மலயமாருதம் மெல்லென்று வீசிற்று. வாவிக்கரைதொறும் பூக்களலர்ந்து தேனைப் பொழிந்தன. மங்கல முரசொலியும் அந்தணாளரோதுகின்ற வேதவொலியும் யாண்டும் பரந்தன. இங்ஙனம் உலகு களிகூராநிற்பப் பெறற்கரும்பேறு பெற்ற **சிவபாதவிருதயர்** குழந்தைக்குச் சாதகர்மம் முதலிய இயற்றுவித்து, உள்ளங்களிகூர்ந்திருந்தனர். ஆளுடைய பிள்ளையார் மூன்று வயதுப் பிராயமாயிருக்கும்பொழுது ஒரு நாள் தந்தையார் நீராடப் போவாரோடு தாமும் போதற்கு விழைந்து பின்சென்றார்.

"பின்சென்ற பிள்ளையார்
தமைநோக்கிப் பெருந்தவத்தோர்
முன்செல்கை தனையொழிந்து
முனிவார்போல் விலக்குதலும்

மின்செய்பரற் கிங்கிணிக்கால்
கொட்டியவர் மீளாமை
உன்செய்கை யிதுவாகிற்
போதெனவங் குடன்சென்றார்.''

தடாகக் கரையை அடைதலும் பிள்ளையாரைக் கரையிலிருத்திப் பிரிந்து போதற்கஞ்சிய சிவபாத விருதயர், திருத்தோணியப்பரையும் அம்மையாரையும் வணங்கிப் பெருங்காவல் பெற்றவராய் வாவியுள்ளிழிந்து நீராடினார். அந்தண குலமுதல்வராகிய சிவபாதவிருதயர் நீரினுள் மூழ்குதலும் ஆளுடைய பிள்ளையார் தந்தையாரைக் காணாதாராய், முன்னையுணர்வு வந்தெய்த, நீர் பொழிகின்ற கண்மலர்களைக் கைம்மலர்களாற் பிசைந்து, கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயினது மணியதரம் துடிப்ப, உலகமனைத்தும் உவகையுறத் திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து, "அம்மே! அப்பா!" என்று அழைத்து அழுதார்.

"அங்கிலையிற் றிருத்தோணி
வீற்றிருந்தா ரருளோக்கான்
முன்னிலைமைத் திருத்தொண்டு
முன்னியவர்க் கருள்புரிவான்
பொன்மலைவல் லியுந்தாமும்
பொருவிடைமே லெழுந்தருளிச்
சென்னியிளம் பிறைதிகழச்
செழும்பொய்கை மருங்கணைந்தார்.''

இங்ஙனம் குழந்தை அழுதலும் அதனைக்கேட்ட எம் பெருமானும் எம்பெருமாட்டியும் ரிஷப வாகனத்தின்மேற் பொய்கைக் கரைக்கு வந்தருளினர்.

"அழுகின்ற பிள்ளையார் தமைநோக்கி யருட்கருணை
பொழிகின்ற திருவுள்ளத் திறையவர்தா மெவ்வுலகும்

தொழுகின்ற மலர்க்கொடியைப்
பார்த்தருளித் துணைமுலைகள்
பொழிகின்ற பாலடிசில்
பொன்வள்ளத் தூட்டென்ன

"ஆரணமு முலகேழு மீன்றருளி யனைத்தினுக்குங்
காரணமாய் வளம்பெருகிக் கருணைத்திரு வடிவான
சீரிணங்கு சிவபெருமா னருளுதலுஞ் சென்றணைந்து
வாரிணங்கு திருமுலைப்பால் வள்ளத்துக் கறந்தருளி

"எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்தருளி
உண்ணடிசி லெனவூட்ட வுமையம்மை யெதிர்நோக்குங்
கண்மலர்நீர் துடைத்தருளிக்
கையிற்பொற் கிண்ணமளித்
தண்ணலையங் கழுகைதீர்த் தங்கணு ரருள்புரிந்தார்.

"யாவருக்குந் தந்தைதா யெனுமிவரிப் படியளித்தார்
ஆவதனு லாளுடைய பிள்ளையா ராயகில
தேவருக்கு முனிவருக்குந் தெரிவரிய பொருளாகுந்
தாவிறனிச் சிவஞான சம்பந்த ராயினர்.

"சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரங்கிலையில்."

"யாவருக்குந் தந்தை தாய்" என்னும் அருண்மொழியை நோக்கும்போது உலகமாதாவாகிய அம்பிகை நம்மனைவருக்கும் அன்னையென்பது பெறப்படுகின்றது. இக்கருத்துப் பற்றியே ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகளும்,

'மாதா ச பார்வதீ தேவி, பிதா தேவோ மஹேஸ்வர:
பாந்தவா: சிவ பக்தாஸ்ச, ஸ்வதேசோ புவனத்ரயம்.'

என்று அருளிச்செய்தார்.

அழுத பிள்ளைமேல் அன்பு சுரந்து அம்மையார் பாலூட்டினாரென்பது இக்கதையினாற்பெறப்படுகின்றது. 'அழுத பிள்ளை பால்குடிக்கும்,' என்னும் முதுமொழியை யாம் என்றும் மறவாதிருப்போமாக!

5. தில்லைத் திருநடனம்

"ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி
போற்றி!

"கற்பனை கடந்த சோதி கருணையே வடிவ மாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புறு நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி
போற்றி!"

—பெரிய புராணம்

சிதம்பர ஸ்தலம்

உரை மனமிறந்து நின்றவொரு தனிக்கடவுள் ஆன்மாக்கள்மீது வைத்த பேரருளினாலே அவ்வருளே வடிவமாகத் தோற்றுவன் என்னும் உண்மையை **'நடராஜ வடிவம்'** என்னும் வியாசத்தில் ஆராய்ந்துணர்ந்தாம். ஆங்கு உருவம் பற்றி ஆராய்ந்தாம். 'தில்லைத் திருநடனம்' என்னும் இத்தலைப் பெயர்க்கீழ்த் தொழில் பற்றி ஆராய்வாம். முதலில் தரிசிக்க முத்திதரும் சிறந்த ஸ்தலமாகிய சிதம்பர ஸ்தலத்தின் மகிமையைப் பற்றிச் சில குறிப்புகள் கூறி அப்பாற்செல்வாம். நிலவுலகத்திலுள்ள ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்கும்வண்ணம் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் கோயில் கொண்டு

எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்களுள்ளே மிகச் சிறந்த ஸ்தலம் சிதம்பர ஸ்தலமாம். இது முன்னாளில் தில்லைக் காடாயிருந்த காரணம்பற்றித் **தில்லை வனம்** எனவும் வழங்கப்படும். புலிக்கால் முனிவராகிய **வியாக்கிரபாதரும்** ஆதிசேஷனுடைய அவதாரமாகிய **பதஞ்சலி** மகாமுனிவரும் தவம் புரிந்து நடராஜ மூர்த்தியைக் கண்டு தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்ற இடம் தில்லை வனமென்ப. இந்தத் தில்லை வனமானது விராட்புருடனுக்கு நடுநாடியாகிய சுழுமுனை நாடியாய் அமைந்தது. இந்த ஸ்தலத்திலே மூலலிங்கத்திற்குத் தெற்கே வேதங்களும் காணாத நிலை பெற்ற சபையொன்றுண்டு. அச்சபையின்கண்ணே எம்மையாளுடைய ஐயன் எக்காலத்தும் ஆநந்தநிருத்தம் செய்தருளுவான். இவ்வுண்மையை,

‘நாடரு நடுவி னாடி நலங்கிளர் தில்லை நேர்போய்க்
கூடுமங் கதனின் மூலக் குறியுள ததற்குத் தென்னர்
மாடுறு மறைகள் காணு மன்னுமம் பலமொன் றுண்டங்
காடுது மென்று மென்று னென்னையா ளுடைய ஐயன்.’

என்னும் **கோயிற்புராணச்** செய்யுள் இறைவனுடைய திருவாக்காக எடுத்துக்கூறும். அண்டமும் பிண்டமும் தம்முள் ஒப்புடையவாதலினாலே, பிண்டத்தில் அமைந்திருக்கின்ற இடைநாடி, பிங்கலைநாடி, சுழுமுனை நாடியென்னும் இவற்றிற்கு நேரொப்பாக இலங்கை, இமயம், தில்லையாகிய மூன்று தலங்களும் அண்டத்தில் அமைந்திருக்கின்றன. இடைநாடி இலங்கைக்கு நேராகச் செல்லும். பிங்கலை நாடி நன்மை மிக்க இமயமலைக்கு நேராகப் போகும். நாடுதற்கரிய சுழுமுனை நாடி தில்லை வனத்துக்கு நேரே போய்க்கூடுமெனவும், தாம் அத்திருத்தலத்தில் சதா ஆநந்த நிருத்தம் செய்வதாகவும் நடராஜமூர்த்தி ஆதிசேஷனுக்குக் கூறினர். சுழுமுனை நாடியிற் பிராணனை

நிறுத்திய யோகிகளுக்குப் பேரின்பப் பெரும்பேறு வந்து எய்துவதையொப்பச் சிதம்பர ஸ்தலத்தை அடைந்து தரிசித்தபேருக்கு முத்தியின்பங் கைகூடுமாதலினால், அண்டத்திலுள்ள சிதம்பரமும் பிண்டத்திலுள்ள சுழுமுனை நாடியும் தம்முள் ஒத்து நடப்பன.

"எண்டரு பூத மைந்து மெய்திய நாடி மூன்றும்
மண்டல மூன்று மாகி மன்னிய புணர்ப்பி னாலே
பிண்டமு மண்ட மாகும்; பிரமனே டைவ ராகக்
கண்டவர் நின்ற வாறு மிரண்டினுங் காண லாகும்."
—கோயிற்புராணம்

சிற்சபை பிரமபுரம்

சித்+அம்பரம்—சிதம்பரம். 'அம்பரம்' என்னும் மொழி, ஆகாசம் அல்லது வெளியெனப் பொருள்படும். இச்சொல் அம்பலம் எனத் திரிவு பட்டும் நடக்கும். சிதம்பரம் சிற்றம்பலமாகும். ஹிருதய கமலத்திலே சிதாகாச வடிவமாகிய பரவெளி அமைந்திருக்கின்றது. இஃது அனைத்தினுக்கும் ஆதாரம். சாந்தோக்கியோபநிடதத்தின் எட்டாவது பிரபாகடத்தின் முதற்காண்டம் இவ்வுண்மையைத் தெளிவுபடுத்துகின்றது. அக்காண்டத்தை மொழி பெயர்த்துத் தருவாம்:

1. ஓம். பிரமபுரமாகிய இச்சரீரத்திலுள்ள தகரமாகிய புண்டரிக வீட்டினுள்ளே ஆகாசம் இருக்கின்றது. அவ்வாகாசத்தினுள்ளே இருக்கிற பொருளைத் தேடியறிதல் வேண்டும்.

2. "பிரமபுரமாகிய இச்சரீரத்திலுள்ள தகரமாகிய புண்டரிக வீட்டினுள்ளே ஆகாசம் இருக்கிறது. அவ்வாகாசத்தினுள்ளே எதனைத்தேடியறிதல் வேண்டும்?" என (மாணுக்கர்) விசாரிப்பாரெனின்,

3. "புறத்தேயிருக்கிற ஆகாசம் எவ்வளவு விரிவாயிருக்கிறதோ, இருதயத்தினுள்ளேயிருக்கிற ஆகாசமும் அவ்வளவு விரிவாயிருக்கிறது. மண்ணுலகமும், வானுலகமும், காற்றும், நெருப்பும், சூரியனும், சந்திரனும், மின்னற்கொடியும், நக்ஷத்திரக் கூட்டமும் என்று புறத்தே தோன்றுகின்றனவும், இனிமேல் தோன்றப் போகின்றனவுமாகிய அனைத்தும் அதனுள்ளே இருக்கின்றன," என்று (ஆசிரியன்) கூறுவான்.

4. "எல்லாப் பிராணிகளும், எல்லா விருப்பங்களுமாகிய அனைத்தும் (இச்சரீரமாகிய) பிரமபுரத்தினுள் இருக்கின்றனவென்றால், வயது முதிர்ந்து உடல் விழும் போது யாது சம்பவிக்கின்றது?" என (அவர்கள்) விசாரித்தால், அதற்கு மறுமொழி வருமாறு.

5. "இதனுடைய மூப்பினால் அது மூப்படைவதில்லை. இதனுடைய மரணத்தினால் அது மரணமடைவதில்லை. (இருதய கமலத்தினுள்ளிருக்கும் உண்மைப் பொருளாகிய) அதுவே உண்மையான பிரமபுரம். அது தீங்கற்றதாய், மூப்புச் சாக்காடற்றதாய், துன்பமற்றதாய், பசி தாகமற்றதாய், உண்மையை விரும்பி உண்மைத் தீர்மானங்களைக் கைக்கொள்ளும். இங்குளார் இடந்தேசங்களின் மேற்பற்று வைத்துக் கட்டளைக்கமைந்து நடப்பது போல."

6. இவ்வுலகத்திற் பாடுபட்டுத் தேடிய பொருள் அழிந்து போவது போலப் புண்ணிய பலத்தினால் வந்த மேலுக வாழ்க்கையும் அழிந்து போம். ஆன்மாவாகிய உண்மைப் பொருளையறியாது இவ்வுலக

வாழ்க்கையினின்று நீங்குவோர், மற்ற உலகங்களிலும் பந்தமுற்றவராவார். இவ்வுலக வாழ்க்கையில் ஆன்ம ஞானத்தை அடைந்தவர் எல்லா உலகங்களிலும் பந்தமற்ற வீட்டுநிலையை அடைந்தவராவர்."

மேலே கருதியுரைத்த ஆகாசமே **சிதாகாசம்** எனப்படுகிறது.

பஞ்சபூத பரிணமம்

சித்தாகாசம், பூதாகாசம் என வேறு இரு வகை ஆகாசங்கள் இருக்கின்றன. நம்முடைய இயல்பினை நோக்கும் போது நாம் ஒருவரில் மூவராயிருக்கின்ற தன்மையை அறிவோம். சீதோஷ்ணங்களால் வருந்தும் போதும் நோயுற்ற போதும் உடலமே நாமென்று நினைத்துத் துன்புறுவோம். ஞான சாஸ்திரங்களை ஆராயும் போது அவற்றின்மேற் கருத்துப் பதியச் சரீரத்தை மறந்து, மனமே நாமென்னும் எண்ணமுற்றிருப்போம். மனம் மடிந்த சமாதி நிலையில் சிவத்தோடு அத்துவிதமாய் நின்ற நமது உண்மை நிலையை அறிவோம். மேலே எடுத்துக்காட்டிய சுருதியினால் அறிவுறுத்தப்பட்டது அவ்வுண்மை நிலையேயாம். இம்மூன்று நிலைக்குமொப்பவே மூவகையாகாசமும் நிலைபெற்று நின்றன. பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாகிய மாயையும் மூன்று. அவை **சுத்தமாயை** (மகாமாயை, பரப்பிரகிருதி, விந்து, குண்டலினி, வித்தை மாயை, பரை, பரவாகீசுவரி என்பன பரியாய நாமங்கள்), **அசுத்தமாயை** (சூக்குமப்பிரகிருதி, மோகினி), **பிரகிருதி மாயை** (தூலப்பிரகிருதி, மகத்) என்பன. தூலப் பிரகிருதியினுட் சூக்குமப் பிரகிருதியும், சூக்குமப் பிரகிருதியினுள் மகாமாயையும் வியாபித்து நிற்பது போலப் பூதாகாசத்தினுள் சித்தாகாசமும், சித்தாகாசத்தினுட்

சிதாகாசமும் வியாபித்து நிற்பன. ஆதலினால், சிதாகாசமே அனைத்தினுக்கும் ஆதாரமானது. ஆகாசத்தினின்று வாயுவும், வாயுவினின்று தேயுவும், தேயுவினின்று அப்புவும், அப்புவினின்று பிருதிவியுந் தோற்றுவன என்பது சமயநூலுக்கும் பௌதிக சாஸ்திரத்துக்கும் ஒப்பமுடிந்ததாதலின், பருப்பொருளாகிய பிரபஞ்சத் தோற்றமாக நம் கண் முன்னே தோற்றுகிற மண், நீர், நெருப்பு, காற்று என்னும் நான்கு மகா பூதங்களும் அவ்வுருவ வடிவமான பூதாகாசத்தினின்று தோற்றின என்பது புலப்படுகின்றது. ஆகாச (Ether)ப் பரப்பிலே நீர்ச்சுழிகள் போலத் தோன்றி நின்ற நுண்ணிய மின்னுருக்களின் (Electrons) கூட்டமாகிய அணுக்களால் (Atoms) அமைந்தன அனைத்துச் சடப்பொருள்களுமென இக்காலத்து விஞ்ஞான நூலாசிரியருங் கூறுவர். சிதாகாச சித்தாகாசங்களினியல்பை அன்னார் அறியார்.

பஞ்சகிருத்தியத் தலைவர்

இனித் தோற்றக் கிரமத்தை ஆராயும்போது அதுவும் தூலசிருஷ்டி, சூக்கும சிருஷ்டி என இருவகைப்படுமென்றறிவாம். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்சகிருத்தியங்களும், மண், நீர், அனல், வாயு, ஆகாசம் என்னும் பஞ்ச பூதங்களும் நிரனிறையாக ஒன்றினோடொன்று தொடர்புற்று நிற்பன. அவ்வுருவமாகிய ஆகாயத்தினின்று உருவ பூதங்களாகிய வாயு, தேயு, அப்பு, பிருதிவி என்னுமிவை முறையே தோன்றியது போல, நிஷ்கள சகள வடிவினராகிய சதாசிவ மூர்த்தியினிடத்தினின்று மகேசுவரர், உருத்திரர், விஷ்ணு, பிரமா என்னுஞ் சகள மூர்த்திகள் நால்வரும் முறையே தோற்றுவர். பிருதிவி தத்துவத்துவத்தினுள் வியாபித்து நின்ற நிவர்த்திக் கலையை அதிஷ்டித்த பிரம

தேவர் உலகங்களைப் படைப்பார். நாராயண (நீரிற் ருேன்றிய) மூர்த்தி உலகங்களைக் காப்பார். அக்கினி நிறத்தினராய் அக்கினிப்புவனத்திலிருக்கும் உருத்திரர் அழித்தற்ருெழிலைச் செய்வார். வாயு புவனத்தினின்ற மகேசுவரர் மறைத்தற்ருெழிலைச் செய்வார். ஆகாய புவனத்தில் வசிக்கும் சதாசிவர் அநுக்கிரகத் தொழிலைச் செய்வார்.

"பரசிவம் பிரம மென்னப் பட்டொரு திரிவு மின்றி
உரைமன மிறந்து நின்ற வொருசிவ லிங்கந் தன்னின்
வருமுயர் சதாசி வன்ருன் மற்றவன் றணைப்பொ ருந்தும்
அருமைகொள் ஞான சத்தி யவர்களாற் சிவனு திப்பன்.

[சிவனென்றது மகேசுவரரை]

"சாற்றுமச் சிவனுக் கிச்சா சத்தியவ் விருவ ரானுந்
தோற்றுவ னுருத்தி ரன்ருன் சொல்லிய விவற்குச் சத்தி
மாற்றருங் கிரியை யென்பர் மற்றிவ ரிருவர் பாலும்
போற்றுறு மரியு திப்பன் பொறியவன் சத்தி யாமால்.

"அத்திரு மாலு மாவு மளிப்பவந் துதிப்பன் வண்டு
மொய்த்திசை முரலுஞ் செங்கேழ் முளரிவா னவன வற்குச்
சத்திவெண் கமலை மின்னுர் தரவரு முலகத் தோற்றம்
நித்தனங் குருகு கேச னினைவுமாத் திரையி னுமால்."

—பிரபுலிங்க லீலை

திருநடனத்திலே பஞ்சகிருத்தியமும் நடைபெறுவன. "அவனன்றி யோரணுவு மசையாது," என்னும் ஆப்தர் வாக்கின்படி பஞ்சகிருத்தியத் தலைவர் பரமபதியாகிய இறைவனுடைய அருட்சத்தியினுலே ஐந்தொழிலும் நிறைவேற்றுவர். அவன் இயக்காவிட்டாற் பஞ்ச கிருத்தியங்களும் நடைபெற மாட்டா. முதல்வன் உயிருக் குயிராகி நின்றமையினுல், அவன் மேற்பட்ட அடி, சர்வ

ஜீவகோடிகள் மேலும் பட்டது. அவன் சனகர் முதலிய முனீந்திரர் நால்வருக்கும் ஞானபாதத்தை உபதேசித்த பொழுது ஒரு கண நேரத்துக்கு யோக நிலையிலிருக்க, விண்ணுலகத்துத் தேவரும், மண்ணகத்து மானிடரும் காமபப்பற்றின்றியிருந்தனர். உமாதேவியார் இறைவனது கண்ணினை மறைக்க, எல்லாவுலகங்களிலும் இருள் சூழ்ந்துகொண்டது.

"போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரித லோரார்
யோகியா யோக முத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியா னாற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூட ரெல்லா மும்பரி னொருவ னென்பர்.

"நாயகன் கண்ணை யப்பா னுயகி புதைப்ப வெங்கும்
பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பிற்
றேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேச தென்னார்.

"கண்ணுதல் யோகி ருப்பக் காமனின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை யோரார் மாறன்
எண்ணிவேண் மதனை யேவ
வெரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப்
பேரின்ப மளித்த தோரார்.

"உலகமே யுருவ மாக யோனிக ளுறுப்ப தாக
இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
அலகிலா வுயிர்கட் கெல்லா மறிவினை யாக்கி யைந்து
நலமிகு தொழில்க ளோடு நாடக நடிப்ப னாதன்."

—சிவஞான சித்தியார்—சுபக்கம்

அரங்கத்திலே புகுந்து நடிக்கின்ற கூத்திற்கு உருவும் உறுப்பும் கரணமும் பயனும் தொழிலும் அமைந்தவாறே, சிதாகாசமாகிய அரங்கத்து நடிக்கும் பரம நடிகனாகிய

முதல்வனுக்கும் அசித்துப் பிரபஞ்சம் தூலஉருவமாகவும், சித்துப் பிரபஞ்சம் உறுப்புக்களாகவும், இச்சை ஞானக் கிரியைகள் காரணமாகவும், உயிர்கட்கு அறிவினையாக்கி வைத்தல் பயனாகவும், பஞ்ச கிருத்திய விரிவே தொழிலாகவும் அமைந்து நின்றன.

பஞ்சகிருத்திய வடிவத்தின் இலட்சணம்

தோற்றப் பொருளனைத்தினுக்கும் ஆகாசம் ஆதாரமாமென முன்னர்க் கூறினோம். இவ்வாகாசம் ஒலி பற்றியெழுவது ஆதலால், இறைவனுடைய கையிலேந்திய டமருகம் ஒலிக்குறிப்பின் வழி வந்த ஆகாசத்துக்கு உற்பத்தித்தானமானது; ஆதலால், அனைத்துப் பொருள்களுக்கும் உற்பத்தித் தானமாயிற்று. "அஞ்சன்மின்" என்னுங் குறிப்பினைக் காட்டும் அபயகரம், காத்தற்றொழிலைச் செய்கின்றது. கையிலேந்திய அக்கினி, சங்காரத் தொழிலைச் செய்வது. முயலகன், ஆணவ வடிவம். அவனை மிதித்த திருப்பாதம், மறைத்தற்றொழிலைக் காட்டுவது. தூக்கிய திருப்பாதத்தின் நிழலில் இந்தக் கலியுகத்திற்றானும் திருநாளைப் போவார் நாயனாரென்னும் நந்தனாரும், திருவாதவூரடிகளும் அடைந்தார்கள்.

சிதம்பர ரகசியம்

சிதம்பரத்தில், சிற்சபையிலே, நடராஜமூர்த்திக்கு வலப்பக்கத்திலே மாசு படியா ஆகாய மூர்த்தமாகிய சிதம்பர ரகசியம் இருக்கின்றது. இம்மூர்த்தம் நாமரூப விகற்பப்படாதது; ஆதலினால், அனைவராலும் வழிபடற்குரியது.

"சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளுந் தானொன் றாகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்ட தில்லை
பகர்வரிய தில்லைமன் றுட் பார்த்த போதங்

கென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியே யென்ன
எச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்
கன்மார்க்க நெஞ்சமுள வெனக்குந் தானே
கண்டவுட னானந்தங் காண்ட லாகும்.''

எனத் தாயுமான சுவாமிகள் கூறிய செய்யுளை நோக்குக. காஞ்சியிற் பிருதிவி மூர்த்தமாகவும், திருவானைக்காவில் அப்புமூர்த்தமாகவும், திருவண்ணாமலையில் தேயு மூர்த்த மாகவும், சூரிய விம்பத்திற் சூரிய மூர்த்தமாகவும், சோம நாதத்திற் சந்திர மூர்த்தமாகவும், அனைத்துயிர்களிடத்தி லும் பசுபதியாகவும் அமர்ந்த முதல்வன், சிதம்பர ரகசியத்தில் ஆகாய மூர்த்தமாக விளங்குவான்.

ஆநந்த நடனம்

ஐந்தொழில்களும் ஆநந்த நடனத்தினால் நடந்தேறு கின்றன எனவுணர்ந்தோம். நாம் சூத்திரப்பாவை; கயிற்றை இயக்கி நம்மை ஆட்டுபவன் நடராஜன். தில்லை மன்றுள் நடிக்கின்ற திருநடனத்தைக்கண்டு தரிசித்தோர் மேலான உண்மைப் பொருளைக் கண்டு தெளிந்து பிறவிப் பயனைப் பெறுவார்களாதலினால் 'தெரிசிக்க முத்திதருஞ் சிவசிதம்பரம்' என ஆன்றோர் கூறினர்.

“செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு
[காண்பதென்னே!''

—அப்பர்

தில்லைத் திருநடனத்தைக் கண்டு தரிசித்த கண்ணி னாலே பின்னர்க் காண்பதற்குத் தகுந்த பொருள் வேறு இல்லையாதலால், மைதீட்டிய ஒள்ளிய கண்ணினையுடைய

உமா தேவியார் கண்டு மகிழ்ந்து நிற்ப, எம்மிறைவன் கனக சபையின்கண்ணே எந்நாளும் செய்கின்ற ஆனந்த நடனத்தைக் காண்பதே கண்ணிணைப் பெற்ற பயனாகும்.

"குனித்த புருவமுங் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேயிந்த வையகத்தே."

—அப்பர்

6. பழந்தமிழ் நாட்டுச் சமவாய வாழ்க்கை

சில ஆண்டுகளாகப் பழந்தமிழ்க் காப்பியங்கள் அச்சு வாகனமேறி யாண்டும் உலவுகின்றன. அவற்றை முறையாகக் கல்லாது தொட்டதும் விட்டதுமாகக் கற்றவர்கள், ஆரிய திராவிட வேறுபாட்டுக் கொள்கைகள் வகுத்துச் சமய வாழ்க்கையை நிலைகுலைத்து வருகின்றார்கள். மேற்றிசைப் பண்டிதர்களுரைத்த ஒரு சில முடிவுகளைத் தமக்கு ஆதாரமாக்கிக்கொண்டு திராவிட நாகரிகம் மிகப் பழமையானது என்று பாராட்டும் போலி வித்துவான்கள், தாம் ஆதாரமாகக் கொண்ட ஹக்ஸ்லி, டார்வின் என்னும் மேற்றிசையறிஞருடைய உண்மைக் கருத்தை அறிவாராயின், நாணியொதுங்குவர். இக்காலத்துத் தோடர், ஓராயர் முதலியவர்களுடைய நாகரிக நிலைமையே மேற்றிசைக் கலைஞர் ஆதிபூர்வ நாகரிகமெனக் கொள்வர். இஃதொரு சாராக, தமிழர்கள் தெற்கே லெமூரியாக் கண்டத்திலிருந்து வந்து குடியேறினார்களென்றும் பலபடக் கூறுகிற, முடிந்த முடிபல்லாத

வெறுங்கொள்கைகளைத் தேவ வாக்கியமெனக் கடைப் பிடித்து உண்மை வேதமாகிய இருக்காதி நான்மறைகளை ஆரியர் பாட்டு என்று கடிந்தொதுக்குவதும், இன்னோ ரன்ன பிறவும் தமிழாராய்ச்சி என இந்நாளில் பாராட்டப் பட்டு வருகின்றன. இவற்றைக் கேட்ட இளமாணவர் நெஞ்சம் பொறாமைக்கும் பிரிவினைக்கும் உறைவிடமாகின் றது. இவை வாஸ்தவத்தில் உண்மையாயிருப்பின், இக்கொள்கைகளைப் பரப்புவாரது பிழை பெரும்பிழை யாகாது. அங்ஙனமின்றித் தற்பெருமை கருதிப் பொய்க் கொள்கைகளைப் பரப்பிப் பிரிவினையை உண்டாக்குந் தூர்த்தர், மதியிலிகள் என்ற அளவோடு நில்லாது, நம் நாட்டை நிலை குலைத்து நெறியழித்து வளங்குறைக்கின் றனரா, ஒற்றுமை கூறுகின்றனரா என்பது எம்மாலாரா யத்தக்கது.

சமவாய வாழ்க்கையின் இயல்பெதுவெனச் சிறிது ஆராய்வோம்: இவ்வுலகிற்பிறந்த மாத்திரத்தே தாய் தந்தையர், உடன் பிறந்தார், சுற்றத்தார் என்னுந் தொடர்புகள் ஏற்படுகின்றன. சில்லாண்டு கழித்துப் பள்ளிக்கூடத்துக்குச்செல்லுங்கால், ஆசிரியன், உடன்கற் போன், தோழன் என்னுந் தொடர்புகள் ஏற்படுகின்றன. இத்தொடர்புத் தொகுதியே சமவாய வாழ்க்கையாகும். இத்தொடர்புகள் எவ்வளவுக்கெவ்வளவு இன்பஞ்செறிந் தனவாய் நிற்பன! பொறாமையினாலும், பிரிவினையினா லும் ஒரு போதும் இன்பம் ஏற்படாது. தமிழ் நாட்டி லுள்ள நாமனைவரும் ஒன்று கலந்து வாழ்வோமாயின், பெருவலியும் உறுதியும் படைத்துப் பிறர் மதிக்க வாழ் வோம். பிரிவினை செய்துகொள்வோமாயின், பிறரால் இகழ்ந்து ஒதுக்கப்படுவோம்.

முன்னாளிற் பாரி என்பானொரு வள்ளல் இருந்தான். அவனுக்கு உற்ற நண்பர் கபிலர் என்பாரோர் அந்தணர்

வேளாளரைப் பாடினரெனவும், தமிழ் நாட்டரசர் ராஜசூயம் முதலிய யாகாதிகிரியைகளைச் செய்தார்களெனவும், இழிகுலத்தோரென மதிக்கப்படுகிற பாணர் முதலினோரை அரசர்கள் உடனிருத்தி விருந்துண்டார்களெனவும், பாரி மகளிரைப் பார்ப்பனர் மணம் முடித்தாரெனவும், வடநாட்டில் இன்றும் நடந்து வருவது போல அந்தணர் அரசர் முதலிய அனைவரும் வேறுபாடின்றி ஊனுணவு உட்கொண்டார்களெனவும், தீண்டாமையென்னுங்கொடுமை அந்நாளிலிருந்ததில்லையெனவும், 'இட்டார் பெரியோர்; இடாதார் இழிகுலத்தோர்,' என்னும் முதுமொழிப்படி பண்டை நாளில் இரு வேறு பிரிவேயிருந்து வந்தன எனவும், அரசர் குடிகள் மீது அன்புடையவராய் அவர்க்கு வேண்டுவன செய்துவந்தாராதலின், மன்னன்பொருட்டு உயிரைக் கொடுப்பது வாள் வீரர்க்கு மரபாயிருந்ததெனவும் இன்னோரன்ன ஒற்றுமை பற்றிய குணங்கள் பல இருந்ததாக அறிவோம்.

ஆண்மைத் தன்மை பொருந்திய ஆண் மக்களும் பெண்மைத் தன்மை பொருந்திய பெண்களும் நிறைந்து விளங்கிய பழந்தமிழ் நாடு, காதலுக்கும் வீரத்துக்கும் உறைவிடமாயிருந்தது. இவ்விரண்டு குணங்களையுஞ் சிறப்புற விரித்துக்கூறும் திணை மரபுகளை ஆராய்வாக நோக்குவோமாயின், உண்மைக் காதலும் வீரமும் பொருந்திய மனத்தினையுடைய ஆண் மகன் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாதல் வேண்டும் என அறிவோம். கலத்தினுங் காலினுஞ் சென்று பொருளீட்டினர், அப்பொருளைத் தமக்கென ஈட்டாது, பிறர்க்குதவி புரிவதையே உறுதிப் பொருளாகக் கொண்டார். இதனாற் பழந்தமிழ் நாட்டுச் சமவாய வாழ்க்கை சிறப்பெய்தியது.

அரசராகவும் குரவராகவும் அமைந்தோர் சுமக்க வேண்டிய பாரம் மிகப் பெரிதாயிருந்தது. அகால மரண

மடைந்த சிறுவனுடைய தாய் அரசனையணுகி, "உன் செங்கோல் வழுவினமையால் என் குழந்தை இறந்தது," எனக் கூறியதனையும், ஆவின் கன்றை அறியாது தேர்ச் சில்லுட்படுத்திய அரசிளங்குமரனைத் தெருவிற்கிடத்திக் கடுந்தேர் நடத்திய சோழர் கோமானுடைய செய்கையையும் உற்று நோக்கும் போது பழந்தமிழ் நாட்டில் நிலைபெற்றிருந்த அறநெறியின் செவ்வியை அறிந்து கொள்ளலாகும். கடுந்தவமியற்றி ஞானநோக்கடைந்து சீடருடைய பாவத்தைத் தாமாகச் சுமக்கும் கருணை பூண்ட குரவர்கள் எக்காலத்தும் மதிப்புக்குரியவர்களே. பழந்தமிழ் நாட்டினர் அறிவுடையோரைக் குலநலம் பேசாது உவந்தேற்றுப் பூசித்தனர் என்பதற்குப் பல மேற்கோள்களுண்டு.

பெண்டிர் இயற்கையிலே இழிவுடையரென்று வேற்று நாட்டார் ஒரு பொழுதுங் கருதினாரல்லர். எவ்வெப் பாங்கினும் ஆடவர் பெண்டிரைத் தமக்கு ஒத்த நிலையினராகக் கொண்டு அறநெறி நடத்தி வந்தனர். இக்காரணங்களால் தமிழ் நாட்டினர் ஆண்மையும் வீரமும் பொருந்தியிருந்தனர். அவர்கள் வாழ்ந்த நாடு திருமகளுக்கும் கலைமகளுக்கும் வீர மகளுக்கும் உறைவிடமாயிருந்தது. அவர் வழி வந்த நாமனைவரும் அவர்கள் சென்ற நெறியைப் பின்பற்றிப் பெருங்குணம் வாய்ந்து ஒற்றுமையாக வாழ்வோமாக![1]

---

[1] 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' ரக்தாக்ஷி ஆண்டு, ஆவணித் திங்கள், 'தேசாபிமானி'யிலிருந்து எடுத்தது.

7. வரகுண தேவர் சரித்திரம்

பூர்வ காலத்தில் வரகுணதேவர் என்னும் பெயரினை யுடைய ஒரு பாண்டிய அரசர் இருந்தார். இவர் இறைவன் மீது இடையறாத பேரன்பு செலுத்தி வருபவர்; சிவனடியாரைச் சிவனெனக் கருதி வழிபாடு புரிபவர். ஒரு நாள் இந்த அரசரது திருமனையுள்ளே கள்வன் ஒருவன் புகுந்து திரவியங்களைக் கவர்ந்தனன். காவலர் கடுகிக் கள்வனைப் பிடித்துத் தளையிட்டு அரசர் முன் விடுத்தனர். அன்பின் களஞ்சியமாகிய அரசரும் அக்கள்வனது உடம்பில் விபூதி துலங்குதலைக் கண்டு, 'இவர் ஒரு சிவனடியவர் போலும்! இவர் சிவனடியவர்பொருட்டுப் பொருள் வேண்டி இவ்வகை புரிந்தனர்,' என்று அவனைப் பிணித்திருந்த தளையை நீக்கக் கட்டளையிட்டனர்.

மற்றொரு நாள் அரசர் அரண்மனைக்கண் கண்ணுறங்குகையில் நடு இராத்திரியில் நரிகள் ஊளையிட, அவ்வொலி அரசர் காதில் விழ, சிவனடியார்களின் ஒலி போல்கின்ற இவை யாங்ஙனமிருந்து எழுந்த ஒலியோ?'' என்ன, மந்திரியார், 'இவை நரிகளின் ஊளை' என்ன, 'ஆயின், அவை குளிரால் வருந்தி இறைவனைப் பாடுகின்றன போலும்!' என்று அந்நரிகளைத் துன்புறுத்தாது பிடித்து வரக் கட்டளையிட்டு, அவற்றிற்கு உயர்ந்த போர்வைகள் அளித்துப் போக்கினர்.

மற்றொரு நாள் மழையின் மிகுதியால் தவளைகள் அரற்ற, அது அரசருக்கு 'அர, அர' என்னும் ஒலி போலக் கேட்க, அமைச்சரை அழைத்து, அவ்வொலிக்குக் காரணம் வினவினர். அவர்கள், அது தவளைகளின் ஒலி என, 'அவை மழை மிகுதியால் இரைபெறாது இறைவனை நோக்கிக் கூவுகின்றன போலும்!' என்று எண்ணிப் பொற்காசுகளுடன் பல ஆகாரங்களைக் கலந்து தூவவினர்.

வேறொரு நாள் சிவனடியார் ஒருவர் எம்பெருமானுடைய திருமஞ்சனத்துக்கு உபயோகமாகும்பொருட்டு எள்ளினை வெயிலில் காய வைத்திருக்க, அவ்வழிச் சென்ற ஒரு பேதை ஒரு பிடி எள்ளையெடுத்து வாயிலிட்டனன். சிவனடியவர் அவனை விழுங்கவொட்டாது பிடித்துக்கொண்டு போய் வரகுண தேவர் முன் விட்டனர். தேவரும் கள்வனைப் பார்த்து, "ஏடா, ஏனிவ்வாறு செய்தனை?" என வினவலும், "அரசரே, இவர் திருமஞ்சனத்தின்பொருட்டு எள் கொடுத்துச் சிவகதியடைய எண்ணி இவ்வாறு இயற்றினர். அடியேன் இனி வரும் பிறவியில் அதை ஆட்டும் எருதாகப் பிறந்து அப்புண்ணியத்தைப் பெறக்கருதி இவ்வாறு செய்தேன்," என, அரசரும் இருக்கையினின்று திடுக்கெனக் குதித்து, "என்ணெயாடும் செக்கினை இழுப்பவை இரண்டு எருதுகளல்லவா? அவற்றில் நீவிர் ஓர் எருதாயின், நானும் ஓர் எருதாகி அப்புண்ணியத்தைப் பெற எண்ணுகிறேன்," என்று அக்கள்வனது வாயிலிருந்த எள்ளிற்பாதியை எடுத்து உண்டனர்.

அரசர் ஒரு நாள் திருவீதி வலம் வருகையில் ஒரு தலையோடு வழியில் இருக்க நோக்கி, 'இறந்தும் இத்திருவீதியிலிருக்கும் புண்ணியத்தைக் கைக்கொண்டீர். உம்மைப்போன்று எமது தலையிருக்க வரந்தந்து அருள் புரிய வேண்டும்," என்று பல முறை அதனை இரந்தனர்.

மற்றொரு நாள் மருதவாணரைத் தரிசிக்க வரகுண தேவர் செல்ல, அதற்குமுன் ஒரு நாய் திருக்கோயில் முற்றத்தில் மலவிசர்ச்சனம் செய்து அகன்றது. இதனைக்கண்ட அரசர் மனம் பதைத்து, இதனை நான் முதலில் பிரதக்ஷிணம் செய்து வருமுன் யாவரேனும் அகற்றுவரேல், என் நாட்டிற் காற்கூறு தருவேன்,' என்று

சங்கற்பித்து, பிரதக்ஷிணத்தை முடித்து, இரண்டாம் முறை வலம் வருகையில் நோக்க, அதனை எவரும் எடாமை கண்டு, 'இப்பிரதக்ஷிணம் முடித்து வருமுன் எடுப்பாருக்கு என் நாட்டில் அரைப் பங்கு கொடுப்பேன்,' எனச் சங்கற்பித்து, அதனையும் முடித்து வந்து நோக்க, எடாமை கண்டு மனம் வருந்தி, 'மூன்றும் முறை வலம் வருவதன் முன் எடுப்பாருக்கு முக்காற்கூறு கொடுப்பேன்,' எனச் சங்கற்பித்து, அந்தப் பிரதக்ஷிணம் முடித்து நோக்குகையில் அக்கட்டம் இருக்கக் கண்டு, 'முழுக் கூறும் எனதேயாகுக!' என்று அந்நாய்க் கட்டத்தினை அகற்றினர்.

வேறொரு நாள் வழியில் வேப்பம்பழங்கள் உதிர்ந்து இருத்தலை நோக்கி, அவை சிவலிங்க உருக்கொண்டிருப்பன என்று, அமைச்சரை நோக்கி, அவ்வுருக்கொண்ட கனிகளைத் தரும் வேம்புகளுக்கு மேற்கட்டி இடும்படி செய்தனர்.

இவ்வாறு அன்பே உருவாயிருந்த வரகுண தேவர், விக்கிரம சோழனை வெல்ல, சோழராசன் இவருடைய உறவைப்பெற விரும்பித் தன் மகளை இவருக்கு விவாகம் செய்து வைத்தான். வரகுண தேவரும் சோழன் மகளுடன் பள்ளியறையை அடைந்து, அவளுடைய வடிவழகைப் பார்த்து, 'உலகத்துச் சிறந்த பொருள் எமதாண்டவனுக்குரித்தாகையால்,நானிவரை எமதாண்டவனுக்கு அர்ப்பணம் செய்வேனாக!' என்று அவள் கரத்தைப் பற்றிக் காவலாளர் அறியாது புறம் போந்து, திருக்கோயிற்கதவு பூட்டியிருந்தமையால், 'மருதப்ப' என்றழைக்க, இறைவரும் 'வரகுண' என்று திருக்காப்பு நீக்கி வருவித்தனர். வரகுணதேவர் உள்ளடைந்து, தம் தேவியை இறைவரிடம் விட்டு, 'இவளை ஏற்க. இன்றேல், உயிர்

வாழேன்!' என்ன, இறைவரும், அவளது ஒரு கை ஒழிந் தவைகளை உள்ளடக்கினர். அரசர் நீங்க, திருக்கதவும் காப்படைக்கப் பெற்றது. அரசரும் காவலர் அறியாது சென்று பள்ளியறையை அடைந்தனர். பொழுது புலர்ந்த பின் திருத்துயில் உணர்த்துவோர் சென்று திருக்காப்பு நீக்குகையில், சிவலிங்கத் திருவுருவில் ஒரு பெண்ணினுடைய கை தொங்கக் கண்டு, அரசருக்கறி வித்தனர். வரகுணதேவர் மருதவாணர் திருச்சன்னி தியை அடைந்து, "தலைவ, இஃது எளியேன் தொட்டது என அகற்றிவிட்ட கைத்தலமோ?" என்று கேட்க, இறைவர், "உனது அன்பினை உலகத்தார் அறிந்து வழிபடுதல் வேண்டி இவ்வாறு செய்தனம்," என்று அக்கரத்தினையும் காயாரோகணமாக்கினர்.

இச்சிறந்த பேரன்பின் திறத்தைப் **பட்டினத்தடிகள்**, **'திருவிடைமருதூர் மும்மணிக் கோவை'** என்னும் நூலில் வியந்து பாடியிருக்கின்றனர்:

"வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்,
ஓடும் பன்னரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்தும்,
குவளைப் புனலிற் றவளை யரற்ற
ஈசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னும் கலந்து தூவியும்,
வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்தும்,
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி

உம்மைப் போல வெம்மித் தலையுங்
கிடக்க வேண்டுமென் றடுத்தடுத் திரங்தும்,
கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்றுநாய்க் கட்ட மெடுத்தும்,
காம்பவிழ்த் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்,
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்''

—தி. ம. மும்மணிக் கோவை, 28

இப்படிப் பட்டினத்தடிகள் முதலிய மகான்களால் சிறப்பித்துப் பாடப்பெற்ற பெரிய அன்பினர் வரகுண தேவருடைய அன்பின் திறத்தைச் சிறியேமாகிய யாமா சொல்ல வல்லேம்!

"அல்லமருங் குழலாளை வரகுணபாண்
டியராச ரன்பா யிந்தார்;
கல்லைதனின் மென்றுமிழ்ந்த வூனமுதைக்
கண்ணப்பர் கனிவா லிந்தார்;
சொல்லியதண் டலையார்க்குக் கிரையுமா
வடுவுமொரு தொண்ட ரிந்தார்;
நல்லதுகண் டாற்பெரியோர் நாயகனுக்
கென்றதனை நல்கு வாரே."

—தண்டலையார் சதகம்

8. உறக்கமும் விழிப்பும்

அந்தணர் வானவ ரானினம் வாழ்க! அனைத்துயிருஞ்
சிந்தை துயரற! மாமழை வீழ்க! திருமலிக!
செந்தமி ழாரிய மோங்குக! ஆண்டு சிறப்புறுக!
நந்த மிதயத் தரனடி யார்பதம் நண்ணுகவே!

உரை மனமிறந்து நின்ற ஒரு தனிக்கடவுளைத் துதித்துத் தேவலோக வாழ்க்கைக்கும் மண்ணுலக வாழ்க்கைக்கும் இடையிலுள்ள தாரதம்மியத்தைப் பற்றிய ஒரு சில குறிப்புகளைக் கூறுவாம்.

இவ்வுலக வாழ்க்கை கழிந்த பின்பு எய்துகின்ற நிலையைப்பற்றிச் சமயவாதிகள் பலரும் பலவாறுகச் சொல்லுகின்றுர்கள். பொது மறையருளிப் பொருள் தெரிவித்த முத்தமிழ்ப் புலவராகிய திருவள்ளுவ நாயனுர்,

“உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.”

என்றுர். அவர் மொழி என்றும் பொய்யா மொழி; ஆதலால், உண்மை காண விழைவோருக்கு உறுதுணையாகும் இயல்பினது. ‘சாக்காடு உறங்குதலை நிகர்த்தது,’ என்பது நாயனுருடைய கருத்து எனத் தோற்றுகிறது.

பகல் முழுதும் தொழில் புரிந்து உடலம் களைப்புற்றுேன் அயர்ந்து உறங்கப் போகும்போது, தான் உறங்கப் போவதை அறிவானுயினும், இக்கணத்திற்றுன் உறக்கம் வந்து எய்தியது என்பதை அறிய மாட்டான். இளைப்புற்ற உடல் ஒரு வகைத் துன்பமுமின்றி உறங்கிவிடுகின்றது; மீட்டும் காலைப்பொழுது வருதலும் விழித்துக் கொள்கின்றது. இவ்வண்ணமே மரணமும் உணர்வு அடங்கியபின் வந்து எய்துகின்றது. அங்ஙனம் அடங்கிய உணர்வு, பிறப்பின் பின் மீட்டும் வந்து அடைகின்றது.

இங்கு நாம் உணர்வு என்றது, அகங்காரத்தோடு மருவி நின்ற "நான் உளன்" என்னும் (Self-Conciousness) அறிவையேயாம். இறப்புக்கும் பிறப்புக்கும் இடையிலுள்ள நிலை எத்தன்மையது என ஆராய்வோமெனின், அஃது உறக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையேயுள்ள நிலையினை ஒருவாறு நிகர்த்தது எனக் காண்போம். தன்னை மறந்த துயிலுமுண்டு, கனவோடு கூடிய துயிலுமுண்டு. அங்ஙனமாயின், 'இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், கூடசாலம், கும்பி பாகம், அள்ளல், அதோ கதி, ஆர்வம், பூதி, செந்தும் என்னும் நரக லோகங்களும் கனவு நிலையை நிகர்த்தனவாமோ?' என்னும் கேள்வி எழுகின்றது. இதனை ஆராயப் புகுதற்கு முன் கனவு நிலைக்கும் விழிப்பு நிலைக்கும் இடையிலுள்ள தாரதம்மியத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளுவது இன்றியமையாததாகின்றது.

கனவு நிலை

விழிப்பு நிலையில் பலவேறு வகைப்பட்ட தொழில்களைப் புரிகிறோம்; பலவேறு வகைப்பட்ட அநுபவங்களையும் அநுபவிக்கின்றோம். கனவு நிலையில் அநுபவமுண்டு; செயல் இல்லை; அதாவது விழித்திருக்கும் பொழுதிற்செய்த கருமங்களின் பயனாக வருகிற அநுபவங்கள் சில கனவு நிலையில் வந்தெய்துகின்றன; ஆனால், அந்நிலையிற் புதிய கருமம் செய்யப்படுவதில்லை. 'சுவர்க்கமும் நரகமும் கருமாநுபவத்துக்கு மாத்திரம் உரியனவா, அன்றேல் கருமம், கருமாநுபவம் ஆகிய இரண்டினுக்கும் உரியனவா?' என்று வினவுவோமாயின், சுவர்க்க நரகங்கள் கருமாநுபவத்துக்கு மாத்திரம் உரியனவெனச் சமய சாஸ்திரங்கள் அனைத்தும் விடை பகர்கின்றனவெனக் காண்போம். அங்ஙனமாயின், அவற்றைக் கனவு நிலையொடு ஒப்பிடுதல் பொருத்தமேயாமென்பது. சுவர்க்க

நரக வாழ்க்கையினும் பார்க்க இவ்வுலக வாழ்க்கை உயர்வுடையது என்பதும், தேவர் நரகரினும் பார்க்க மக்கள் உயர்வுடையர் என்பதும் இதனுற் பெறப்படுகின்றன. உலக வாழ்க்கையில் கருமம் கருமாநுபவம் மாத்திரம் உண்டு என்பதும் சுவர்க்க நரக வாசம் எல்லையுட்பட்டது என்பதும் இதனுற்பெறப்படுகின்றன.

இந்திரலோகம்

துயின்றேன் விழித்துக்கொள்வது போலச் சுவர்க்க நரக அநுபவமுடிவில் மீட்டும் பிறவி வந்தெய்தும். அங்ஙனம் வந்தெய்துகின்ற பிறவி முந்தைப் பிறவியின் தொடர்பாவதேயன்றிப் பிறிதாகாது. மூடனுகத் தூங்கியவன் மூடனுகவே விழித்து எழுகிருன்; அறிவுடையோன், விழித்தெழும் பொழுதும் அறிவுடையவனேயாம். இங்ஙனம் ஆராயுமிடத்து, உலக வாழ்க்கையின் மருமம் சிற்றளவாவது புலப்படுகின்றது. வாழ்க்கையை இங்கு நாம் எவ்வளவுக்குச் செம்மைப்படுத்திக்கொள்கிறேமோ, அவ்வளவுக்குச் சுவர்க்க நரகாநுபவங்களை அநுபவித்தற்குத் தகுதியுடையோராவோம்.

நானும் என் நண்பரொருவரும் இந்திரலோகத்தில் சிறிதுகாலம் வசித்தோம் என்று வைத்துக்கொள்வோம். என் நண்பர் பூவுலகத்திற் சங்கீத வித்துவானுயிருந்தவர். எனக்குச் சங்கீதத்தில் ஓர் அக்ஷரமும் தெரியாது; எனக்குக் கணித சாஸ்திரத்தில் நிரம்பிய பயிற்சியுண்டு. என் நண்பருக்குக் கூட்டல் கழித்தல்தாமும் நன்ருகத் தெரியா. நாங்கள் இருவரும் பல நாள் இந்திரலோகத்தில் வசித்தோம். நாரதமுனிவர் ஒரு நாள் இந்திரனுடைய அத்தாணி மண்டபத்துக்கு வந்து யாழைச் சுதிகூட்டித் தெய்வகானங்களைப் பாடினுர். என் நண்பர் அடங்கா மகிழ்ச்சியெய்தி, ஆனந்த சாகரத்தில் அழுந்

தினர். நான் யாழிலுள்ள நரம்புகள் எத்தனையென்று கணக்கிட்டுக்கொண்டிருந்தேனேயன்றி, வேறொருவகை மகிழ்ச்சியும் பெற்றேனில்லை. பூவுலகத்திலிருக்கும் போது சங்கீதக் கச்சேரிகளுக்கு நான் போகவில்லை. சங்கீதத்தின் இயல்பினையறியா எனக்கு அஃதனால் எய்தப்பெறும் சுகங்கிடைக்காமற் போனது அதிசயமான காரியமன்று.

மற்றொரு நாள் இந்திரனுடைய சபைக்கு வராஹ மிஹிரர் வந்தார். கணிதநூலில் வல்லவராகிய இந்தப் பெரியவர் நட்சத்திரசலனம், கிரக ஓட்டம், ஆகருஷ்ண சத்தி, சூரியசந்திர காற்றோட்ட நிருணயம் என்னும் இவற்றை விரித்துப் பிரசங்கஞ் செய்தார். அவரது வார்த்தையைக் கேட்ட நான் ஆனந்த சாகரத்திலமுந்தினேன். என்னுடைய நண்பர் என்னை நோக்கி, "வராஹ மிஹிரர் பிதற்றுகிற மொழியொன்றும் எனக்குப் புலப்படவில்லை. சங்கலிதம், விபகலிதம், குணனம், பாகாரம், வர்க்கம், வர்க்கமூலம், கணம், கணமூலம் என்றாரே, அவையெல்லாமென்ன?" என்றார்; "மறுமுறை பூவுலகத்திற் சந்திக்கும் போது கட்டாயமாகச் சொல்லித் தருகிறேன்," என்றேன். **தகுதி இல்லாவிடில் அநுபவம் இல்லை.**

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து."

என்னும் நாயனார் மொழி எனக்கு அப்பொழுது ஞாபகத்துக்கு வந்தது. என் நண்பருக்குக் கணிதங் கற்பித்து வைக்க விரும்பினேன். ஆனால், அது தேவலோகத்தில் முடியாத காரியம்; அங்கு அநுபவம் மாத்திரமேயுண்டு. என் நண்பர் எனக்குச் ச, ரி, க, ம, ப, த, நி என்னும் சத்தசுரங்களின் இயல்பையாவது சொல்லி வைக்க முயன்றார்; அதுவும் முடியாத காரியமாயிற்று. 'சுகாநுப

வத்துக்குரிய பொருள் நிறையவிருந்தாலும், அநுபவித்தற்குத் தகுதியில்லாத வழி அநுபவம் கைகூடாது,' என்னும் மேலான உண்மை எனக்கு அப்பொழுது புலப்பட்டது. சங்கிதசிரோமணியாகிய நாரதர் கானம் பாடுகிருர்; கேட்போர் அதனைத் தேவாமிர்தம் என்கிருர்கள். இசையறியாச் செவியுடைய எனக்கு அது பயன்படாது கழிகின்றது. செல்வர் ஒருவர் நிறைந்த தின்பண்டங்களை வாங்கி வைத்திருக்கிருர். அவர் குன்ம வியாதியால் வருந்துகிருர். நூக்கு நொய்க்கஞ்சி மாத்திரமே அவருக்கு உணவு. ஐயோ! பாவம்! அவர் நறு நீர்க் குளத்தின் பக்கலிலிருந்து தாகத்தால் தவிப்பவர்போல, நிறைந்த உணவுப் பொருள்களின் மத்தியிலிருந்தும் உணவின்றி வாடுகிருர்.

ஆதலால், சுகாநுபவங்களை அடைவதற்குப் பொருள் தேடுவதொன்று மாத்திரம் போதாது; மனத்தையும் கருமேந்திரிய ஞானேந்திரியங்களையும் அடக்கி நிலையினிறுத்தி நல்வழியிற்பயிற்றல் வேண்டுமென்பது புலப்படுகின்றது. இங்ஙனம் பயிற்றினல், இவ்வுலகத்திலிருக்கும் பொழுதே தேவலோக இன்பத்தைப் பெறுதல் கூடும்; பயிற்ருவிட்டால், தேவலோகத்துக்குப் போனலும் இன்பம் கிடைக்க மாட்டாது.

கருவியும் கருத்தாவும்

தேகம் கருவி; ஆன்மா கருத்தா. கருவி சுத்தமாயிருந்தாலன்றி அநுபவம் சுத்தமாகாது; மனத்தூய்மைக்குத் தேகசுகம் இன்றியமையாதது. திடகாத்திர தேகமும், நோயற்ற வாழ்வும் உடையவனுக்கு உயிர் வாழ்க்கையே பெரியதோர் இனிமையைத் தருகின்றது. நோய்வாய்ப்பட்டவனுக்கு உடலமே நரகமாகின்றது. இளம்பருவம் முதற்கொண்டு மனத்தினைப் புலங்களின்

வழிச்செல்லவொட்டாது தடுத்துப் பிரமசரியங்காத்து வந்தவன், உரியகாலத்தில் விவாகஞ்செய்து மனமகிழ்ச்சியை அடைகின்றான். துர்நடையிற்பயின்று காக்க வேண்டிய ஆண்மைப் பொருளைப் போக்கிய மூடன், ஆண்டன்மையை இழந்து, இவ்வுலகத்திலேயே நரக வேதனையை அநுபவிக்கிறான். மிதமான உணவினை உண்டு, அது அற்றதறிந்து நன்கு பசியெடுத்த பின்பு மீட்டும் அளவறிந்து உண்ணுபவன், உணவினால் வருகிற சுகத்தை அனுபவிப்பான். அளவு கடந்து உண்ணுகிற மூடன், நோய்வாய்ப்படுவதோடுகூட, உணவினால் வருகிற இன்பத்தை அநுபவித்தற்கு உரிமையில்லாதவனாகிறான். தேகாப்பியாசம், உணவு, நித்திரை என்றின்னவற்றையெல்லாம் அளவறிந்து செய்பவன், தேகத்தினால் அடைதற்குரிய சுகங்கள் பலவற்றை அடைகிறான். இயற்கை வனப்பினைக் கூர்ந்து நோக்கக் கண்களைப் பயிற்றி வைத்திருப்பவன், கண்ணினால் பெறுதற்குரிய இன்பத்தை அடைகிறான்.

பேரின்பப் பேறு

காம குரோத லோப மோக மத மார்ச்சரியமாகிய உட்பகைகள் ஆறையும் அடக்கிய வீரன், அனவரதமும் ஆனந்தத்தினால் நிறைந்தவனாய் இருக்கிறான். அவனுடைய மனத்தில் அன்பு என்னும் மலரானது புஷ்பித்து, அருளென்னும் பழத்தினைத் தரும். தாபத்திரயங்களால் வெதுப்புற்ற மானிடர்கள், அவனுடைய கால் நிழலை நோக்கி வருவார்கள். அவன் இவ்வுலகத்திலிருக்கும்போதே தேவருலகத்தினும் மூவருலகத்தினுஞ்சிறந்ததாகிய முத்தியுலகத்தில் வாழ்கின்றான். அத்தகைய பெரியோனுடைய திருவடி நிழலை அடைந்தவர்களும் இவ்வுலகத்திலேயே கவலையனைத்தும் நீங்கப்பெற்று

ஆனந்த நிறைவோடு வாழ்கின்றார்கள். காமன், குரோதன், லோபன், மோகன், மதன், மார்ச்சரியன் என்னும் யமகிங்கரர்கள் இவர்களை அணுகுவதில்லை. இவர்கள் சரண் புகுந்த குருமூர்த்தியினது பேரருளினாலே, இவர்களுக்கு எல்லா நன்மையும் உண்டாகின்றன.

நரக லோகம்

ஆராய்ந்து பார்க்குமிடத்து, இம்மையிலும் மறுமையிலும் நரக துன்பத்துக்குக் காரணமாவன, நாம் மேலே கூறிய உட்பகைகள் ஆறுமேயாம். உதாரணமாகக் குரோதம் என்னும் பொல்லாத குணம் ஒருவனுடைய உள்ளத்திற் புகுமாயின், அவனுக்கு இரவிலே தூக்கம் இராது. அச்சம் அவன் உள்ளத்திற் குடி கொள்ளுகிறது. அவன் ஆறுதலழிந்து அலைவுற்று உடற்சுகங் கெட்டு வன்னெஞ்சனாகி இறக்கிறான். குரோதன் என்னும் யமதூதன் அவனை மறுமையிலுந் தொடர்ந்து சென்று பைசாச உலகத்திற் சேர்ந்து மக்களோடும் தேவரோடும் குரோதங்கொள்ளும்படி செய்கிறான். இவ்வுலகத்தில் அநுபவித்த நரகத்துன்பத்தினது தொடர்ச்சியை அனுபவித்து முடித்த பின் மீட்டுங் குரோத நிறைவோடு பிறக்கிறான்.

ஆசை வேரை அடியோடு களைதல்

நற்செய்கைகளினாலும், நல்லோரிணக்கத்தினாலும் பூவுலக வாழ்க்கையிலேயே மனத்தைச் சுத்தி செய்தாலன்றி, மறுமையின்பம் யாங்ஙனம் வந்தெய்தும்? இதனை அறிந்த காரணத்தினாலேதான் சுகர் முதலிய பெரியோர் குழவிப் பருவத்திலேயே உலக வாழ்க்கையைத் துறந்து, குரோத-லோப-மோக-மத-மாற்சரியங்களையும், இவற்றுக்கெல்லாம் வேராகிய ஆசையையும் முற்றிலுங் களைந்து, இவ்வுலகத்திலிருக்கும் பொழுதே ஞானானந்தத்தை

அடைந்து, தேவர்களாற் பூசிக்கப்பட்டார்கள். இந்தப் பெரியோருடைய நிலை தவத்திற்சிறந்த ஒரு சிலருக்கே உரியது.

அங்ஙனமாயினும், இல்லற வாழ்க்கையிலிருந்து கொண்டே, இவ்வுலகத்தைத் தேவலோகமாக்குதலுங் கூடும், நரகலோகமாக்குதலுங் கூடும்.

மனித வாழ்க்கையிற் சுவர்க்கமும் நரகமும்

" தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு ? "

என்றார் உண்மையுணர்ந்த திருவள்ளுவநாயனார். அன்றிலும் பேடும் போல இணை பிரியாத அன்பினையுடைய சதிபதிகள் பலரை நாம் கண்டிருக்கிறோம். அவர்கள் இருவரும் ஒருங்கு தேவலோகத்துக்குப் போவதாயின், ஒரு வேளை ஒருப்படுவார்கள். ஒருவர் மாத்திரம் சுவர்க்கம் போவதென்றால், "சுவர்க்கம் வேண்டா ; நாங்கள் பிரிவின்றி இம்மண்ணுலகத்திலேயே வாழ்வோம்," என்பார்கள். இது ஒருபாலாக, மற்றொரு பக்கம் நோக்கும் போது, "என் பெண்டாட்டி இருக்கும்போது யமகிங்கரர்களும் வேண்டுமோ ?" என்று சொல்லுகிற புருடரும், " இந்த யமகாதகனோடு வாழ்வதினும் ஏழா நரகத்துக்குப் போய்விடுதல் நன்று!" என்று சொல்லுகிற பெண்டிரும் கூடி நடத்துகின்ற குடித்தன வாழ்க்கைகளையும் கண்ணாரக் காண்கிறோம். இவற்றையாராய்ந்து பார்க்கும் விவேகிகள், இவ்வாழ்க்கையை தேவலோக வாழ்க்கையாக்கிக்கொள்ளுவார்கள். மனத்திலுள்ள உட்பகைகள் ஆறினையுங்களைந்து, சதிபதிகளாயிருந்தால், அவர்கள் அடைகின்ற இன்பத்துக்கு இந்திரனுடைய கற்பகக்கா நிழலும் ஈடாகாது. அன்பு என்னும் நற்குணத்தைத் தொடர்ந்து, பொறுமை, ஈகை, தவம், தானம் என்னுஞ்

சிறந்த குணங்கள் ஏற்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் ஆதாரமாகிய அன்பு உயிருக்கே ஆதாரமாய்விளங்குவது.

'அன்பின் வழியது உயிர் நிலை.'

இது பற்றிப்போலும் திருவள்ளுவ நாயனாரும்,

"அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு."

என்றார்! அன்னத்தினால் உடல் வளர்கின்றது; அன்பினால் உயிர் வளர்கின்றது. உடல் உயிர் இரண்டினுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. உடல் துன்புற்றிருக்கும் போது உள்ளமும் துன்பமடைகின்றது. உள்ளத்திற் கவலை தோன்றுங்காலத்தில் உடலத்திலும் நோய் உண்டாகிறது. மனத்தில் நிறைந்த மகிழ்ச்சியுண்டாகுமாயின், உடலமும் பூரித்து வளர்ச்சியடைகின்றது. அன்புடையாரிருவர் பிரிந்திருக்குங் காலத்து ஒருவரையொருவர் நினைத்து மனவிரக்கமுற்று உடலம் மெலிவடைகின்றார்கள். ஆண்டு பல கழித்து ஒருங்கு வந்து சேரும்போது மனமகிழ்ச்சியினால் உடலம் பூரிப்படையக் கழிந்த இளமைப்பருவம் மீட்டும் வந்து எய்தப்பெறுகிறார்கள். புதுப்பெண்ணும் மாப்பிள்ளையும் உடற்பொலிவு உடையவர்களாயிருப்பது உண்ணும் உணவினாலல்ல, உள்ளத்தெழுந்த உவகையினால் என்பதை யாவருமறிவர்.

இங்ஙனமெல்லாம் ஆராய்ந்து நோக்கும்போது உடலத்தின் வளர்ச்சிக்கு அன்னத்தைப் போலவே அன்பும் இன்றியமையாது வேண்டப்படும் என்பது நன்கு பெறப்படுகின்றது. அன்னத்தைப் பெறாத உடல் அறுபது நாட்களுக்கு நிலைத்திருத்தல் கூடுமென்பர். அன்பினைப் பெறாத உயிர் கணப்பொழுதாயினும் நிலைத்

திருக்க மாட்டாது. அன்பே உடல் உயிர் இரண்டுக்கும் ஆதாரமாவது. அகண்டமாகிய பிரபஞ்சம் அனைத்தினும் நிறைந்து, காந்தத்துக்கும் ஊசிக்குமிடையிலுள்ள கவர்ச்சியாகவும், சூரியனுக்கும் தாமரைக்கும் இடையிலுள்ள நேயமாகவும், சீவராசிகளனைத்தினுடைய உள்ளத்திலும் வெளிப்படுகின்ற அன்பாகவும் நிலைபெற்றிருப்பது ஒரு பொருளேயாம். இப்பொருளின் இயல்பினையாராய்வதே உலகிலுள்ள வேதாகம சாஸ்திர புராணேதிகாசங்கள் அனைத்தினுக்கும் கருதிய பொருளாகும்; அன்பு சிவம் என்பன ஒரு பொருட்சொற்கள்; அன்பு நிறைந்த உள்ளத்தவர்கள் கடவுளை எப்பெயரிட்டு வணங்கினாலும், அவர்களே உண்மைச் சைவர்களாவார்கள். அகத்துக்கண் காம–குரோத–லோப–மோக–மத மார்ச்சரியங்களை நிறைய இருத்திக்கொண்டு தம்மையுஞ் சைவர் என்று வாய்ப்பறையறையும் வன்கண்ணர், 'சைபர்' (Cipher) என்னும் ஆங்கில மொழியினாற்குறிப்பிடப்படுவர்.

காயமே கோயில்.

சைவசமய சகோதர சகோதரிகளுக்கு ஒரு சில கூறி இக்கட்டுரையை முடிப்பேன். சைவராய்ப் பிறந்தோராகிய நாம் எவ்வெவரிடத்தும் தண்ணளியுடையோராய் இருத்தல் வேண்டும். எங்கும் நாம் சிவத்தைக் காணுதல் வேண்டும். நம்மிறைவனுக்குப் **பசுபதி** என்பது பெயர். அவன் அனைவருடைய உள்ளத்திலும் நிறைந்திருக்கின்றான்; திருக்கோயிலிலுள்ள சிவலிங்கத்திலே, கனக சபையிலே, நாம் ஊனக்கண்ணாற் கண்டு தரிசிக்கும் பொருட்டுப் பிரசன்னமாயிருக்கிறான். ஆனந்த நடராஜனுடைய திருவுருவம் திருவுருவமல்ல; அது அவனுடைய அருட்டிருமேனி; "தென்பாண்டி நாடு சிவலோகம்" என்று **மணிவாசகப்பெருமான்** கூறியிருக்கின்றார். மற்றொரு சிவலோகத்தைத் தேடவேண்டிய அவசிய

மென்ன? தேவர்களும் இங்கு வந்து வணங்கிவிட்டுப் போகிறார்கள்.

சாலோக மோக்ஷம்

சில நாட்களுக்கு முன் திருமயிலாப்பூரில் பிரமோத்ஸவம் நடைபெற்றது. நண்பரோருவர்—சமயச்சார்பாகப் பல விஷயங்களையும் விசாரித்தவர்—சாலோகமென்னும் பதமுத்தியைப் பற்றியும் அதனையடையும் மார்க்கத்தைப் பற்றியும் என்னை விசாரித்தார். "நல்லது, வாரும்," என்று அழைத்துச் சென்று திருக்கோயிலினுட்புகுந்து, "நாம் இப்பொழுது சாலோக பதவியடைந்துவிட்டோம். தினமும் இங்கு வந்து திருமுற்றத்திலுள்ள குப்பை முதலியவற்றையகற்றித் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல் முதலிய திருப்பணிகளைச் செய்து வருவீராயின், உமக்கு இப்பொழுது முதற்கொண்டு நித்தியமாகச் சாலோகங்கிடைக்கும்," என்றேன். அவருக்கு என் கருத்து முற்றிலும் புலப்படவில்லை. பின்னர், நான் அவரை நோக்கிப் 'பாரீர் நண்பரே, இதோ இருக்கும் திருக்கோயிலினுள்ளே நம் தலைவனாகிய கபாலீச்சுரன் வாழ்கின்றான்; அதோ தெரிகிற திருமனையினுள்ளே நம் அன்னை கற்பகவல்லி இருக்கிறாள். நாம் நிற்குமிடஞ் சிவலோகம். நம் கண்முன்னே தோற்றும் இவர்கள் மனிதர்களல்ல; சிவகணங்கள். அந்தச் செம்பட்டை மயிருள்ள கட்டையன் கள்ளும் இறைச்சியுஞ் சாப்பிடுகிறவன். அவனும் சிவகணநாதன்தான்; கூளிப்பூதங்கள் குறட்பூதங்களுக்கு உணவு வரையறையில்லை; அப்படியாயினும், அவை அசட்டைக் குணம் மேலிட்ட வெள்ளை வேட்டிப் பூதங்களைப்போல எம்பெருமானுடைய தொண்டிற் குறைவுபடுவதில்லை. சிவகணங்களாகிய இக்குறட்பூதங்கள், "ஆவுரித்துத் தின்று உழலும்புலை"க் குலத்திற் பிறந்தனவாயினும், "கங்கைவார் சடைக்கரந்த" எம்

அண்ணலுக்கு அன்பு பூண்டிருக்கின்றன. ஆதலால், இக்குறட்பூதங்களுடைய பாதத்தைச் சிரமேற்கொண்டு நாம் வணங்குதல் கடமையாகும்; இது சிவலோகத்திற் செய்யவேண்டிய முறை; மறந்து போகாதீர்,'' என்றேன்.

பின்பு சிறிது நேரம் சிவலோகத்திலிருந்துவிட்டு, எம்பெருமானிடத்தும் எம்பெருமாட்டியிடத்தும் விடை பெற்றுக்கொண்டு, திருவள்ளுவ நாயனுரையும் வாசுகியம்மையாரையுந் தரிசிக்கும்பொருட்டு நானும் என் நண்பரும் முதற்பாவலருடைய திருமனையை நோக்கி நடந்தோம்.

நாவ மர்ந்தவெண் கமலைநா யகனுநன் னீழற்
காவை யும்பர்நின் றிம்பரிற் கொணர்ந்தகார்முகிலும்
சேவை மாந்தருள் சோதியுங் காணுைத் திறல்சேர்
தேவ தேவன்மெய்ச் சேவடி சென்னியிற் சேர்ப்பாம்.

9. அர்த்த நாரீசுவர வடிவம்

'நாரத்தோ டொன்ருவர் தாரத்தோர் கூருவர்
தாரத்தோ டெங்குந் தலைநிற்பர்—தாரத்தின்
நாதாந்தத் தேயிருப்பர் நாற்ருனத் தேயிருப்பர்
வேதாந்தத் தேயிருப்பர் வேறு.''

—திருக்களிற்றுப்படியார்

எனப் பரமபதியாகிய இறைவனுக்கு அறுவகை நிலைகள் சொல்லப்பட்டன. இவற்றினுள்ளே 'தாரத்தோர் கூருவர்' என்புழிச் சொல்லப்பட்ட அர்த்த நாரீசுவரத் திருக்கோலத்தினது இயல்பினைப்பற்றி ஒரு சில கூறப் புகுந்தனம். இத்திருக்கோலத்தை மாணிக்கவாசக சுவாமிகள் 'தொன்மைக் கோலம்' என்றனர். ஏனைய திருக் கோலங்களுக்கெல்லாம் முற்பட்டு, அவையெல்லாம் தோற்றுவதற்கு ஆதாரமாய் நின்றதாதலின், அர்த்த நாரீசுவர வடிவம் தொன்மைக் கோலமாயிற்று.

(தொன்மை = பழமை) வலப்பால் இறைவனுடைய திருவுருவமும் இடப்பால் இறைவியினுடைய திருவுருவமும் ஒருங்கு பொருந்த நின்ற ஒப்பற்ற திருக்கோலமே அர்த்த நாரீசுவர வடிவமாகும். இறைவனது உடை தோல்; இறைவியணிந்திருப்பது, துகில்; இறைவனது திருச்செவியில் விளங்குவது குழை; இறைவியினுடைய திருச்செவியில் விளங்குவது தோடு; இறைவனத்து திருமேனியிற்பொலிவது பால் போன்ற வெள்ளிய திருநீறு; இறைவி அணிந்திருப்பது பசிய சாந்து; இறைவனுடைய திருக்கரத்திலுள்ளது சூலம்; இறைவியுடைய வளை அணிந்த திருக்கரத்திற்பொருந்தியது பச்சை நிறக் கிளிப்பிள்ளை; வலப்பால் இறைவன்றிருவுருவமும் இடப்பால் இறைவி திருவுருவமும் தோற்றக்கண்டனராதலின்,

"தோலுந் துகிலுங் குழையுஞ் சுருடோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்
சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ!"

—திருவாசகம்

எனத் தும்பியை விளித்துக் கூறுமுகத்தால் மாணிக்க வாசக சுவாமிகள் அர்த்த நாரீசுவர வடிவத்தினியல் பினைச் சிவாநுபூதியாகிய தேனினையுண்ண விழைவுற்ற மாந்தரனைவருக்கும் எடுத்தியம்பினர். தவப்பெருஞ் செல்வராகிய பட்டினத்தடிகளும் ஓர் அழகிய செய்யுளி னால் இத்திருக்கோலத்தின் நீர்மையைக் கூறியிருக்கிறார். இச்செய்யுட்பொருளையாராய்ந்து அப்பாற்செல்வாம்:

திருவடி

"நெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து
வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவந்து
சிலம்புங் கழலு மலம்பப் புனைந்து

கூற்றி னுற்றன் மாற்றிப் போற்ருது
வலம்புரி
நெடுமா லேன மாகி நிலம்புக்
காற்றலி னகழத் தோற்ருது நிமிர்ந்து
பத்தி யடியவர் பச்சிலை யிடினும்
முத்தி கொடுத்து முன்னின் றருளித்
திகழ்ந்துள தொருபாற் றிருவடி யகஞ்சேந்து
மறுவில் கற்பகத் துறுதளிர் வாங்கி
நெய்யிற் ருேய்த்த செவ்வித் தாகி
நூபுரங் கிடப்பினு நொந்து தேவர்
மடவரன் மகளிர் வணங்குபு வீழ்த்த
சின்னப் பன்மலர் தீண்டிச் சிவந்து
பஞ்சியு மனிச்சமு மெஞ்ச வெஞ்சாத்
திருவொடும் பொலியு மொருபாற் றிருவடி.'

—தி. ம. மும்மணிக்கோவை, 1

வலப்பால், தெய்வத் தன்மை பொருந்திய தாமரை மலரினது அழகினைப்போல மலர்ந்து, எக்காலத்தும் வாடுதலில்லாத அன்றலர்ந்த மலரினது இதழைப்போலச் சிவந்து, திருச்சிலம்பினையும் வீரக்கழலினையும் ஓசையுண்டாக்கும்படி அழகுபெற அணிந்து, யமனுடைய வலிமையினைப் போக்கி, சக்கரத்தைத் தாங்கின திருமால் பன்றியினுருவாகிப் பூமியினுட்புகுந்து வலிய கொம்பினுற் பிளந்து வருந்தியும் அத்திருமால் தன்னைப் போற்ருத காரணத்தினுலே தரிசனந்தாராமல் ஓங்கி, அன்புள்ள மெய்யடியார் பச்சிலையையிட்டு அருச்சிக்கினும் அன்னுருக்குத் தரிசனந்தந்து முத்தியின்பத்தையும் இஷ்டகாமியங்களையும் அளித்து விளக்கமுற்றிருக்கின்றது ஒருபாலுள்ள திருவடி.

இடப்பால், குற்றமற்ற கற்பக விருக்ஷத்தினது தளிரினை நெய்யிற்ருேய்த்தாலன்ன அழகினை உடையதாய்

உள்ளகஞ்சிவந்து திருச்சிலம்பு தங்கியிருப்பதற்கு வருந் தித் தெய்வ மாதர்கள் திருவடியை வணங்குகையில் விழும்படி செய்த சின்னப்பூவென்னும் தலையணி படுத லினால் நொந்து சிவந்து செம்பஞ்சும் அனிச்ச மலரும் தன் குணத்திற் பின்னிடக்குறையாத செல்வத்தொடு பொலிந்து விளங்கும் ஒரு புறத்துத் திருவடி.

திருவிடை

"நீலப் புள்ளி வாளுகிர் வேங்கைத்
தோலின் கலிங்க மேல்விரித் தசைத்து
நச்செயிற் றரவக் கச்சையாப் புறுத்துப்
பொலிந்துள தொருபாற் றிருவிடை; இலங்கொளி
அரத்த வாடை விரித்துமீ துறீஇ
இரங்குமணி மேகலை யொருங்குடன் சாத்திய
மருங்கிற் றுகு மொருபாற் றிருவிடை."

—தி. ம. மும்மணிக்கோவை, 1

வலப்பால், கரிய நிறப்புள்ளியும் கூரிய நகங்களையு முடைய வேங்கையினது தோலை ஆடையாகப் புனைந்து, விஷ நீர் தங்கிய பற்களையுடைய பாம்பாகிய இடைக் கட் டினைக் கட்டி விளங்கியுள்ளது ஒரு புறத்துத் திருவிடை.

இடப்பால், ஒளி வீசுகின்ற செம்பட்டாடையினை விரித்து மேலே சாத்தி ஒலிக்கின்ற இரத்தினங்களாலா கிய மேகலாபரணத்தை அணிந்துள்ள பக்கத்தையுடைய தாகும் ஒரு புறத்துத் திருவிடை.

திருமேனி

"செங்க ணரவும் பைங்க ணுமையுங்
கேழற் கோடும் வீழ்திர ளக்கும்
நுடங்கு நூலு மிடங்கொண்டு புனைந்து
தவளநீ றணிந்ததோர் பவளவெற்பென்ன
ஒளியுடன் றிகழும் ஒருபா லாகம்;
வாரும் வடமும் ஏர்பெறப் புனைந்து
செஞ்சாந் தணிந்து குங்கும மெழுதிப்

பொற்ரு மரையின் முற்ரு முகிழென
உலகே ழீன்றும் நிலேயிற் றளரா
முலேயுடன் பொலியு மொருபா லாகம்.''

—தி. ம. மும்மணிக்கோவை, 1

வலப்பால், சிவந்த கண்களேயுடைய பாம்பும், பசிய கண்களேயுடைய ஆமையும், பன்றியினது கொம்பும், தொங்குகின்ற பூணூலும் அணிந்து, வெண்மையாகிய விபூதியினே அணிந்ததாகிய ஒரு பவள மலேயைப்போலப் பிரகாசத்துடன் விளங்காநிற்கும் ஒரு புறத்துத் திரு மேனி.

இடப்பால், கச்சும் மணிமாலேயும் அழகு பெறத் தரித்துச் சிவந்த சந்தனத்தையணிந்து, அழகிய தாமரையின் முதிராத அரும்பைப் போன்று ஏழுலகங்களேயும் பெற்றும் நிலேயிற்றளர்ச்சியடையாத முலேயுடன் விளங்காநிற்கும் ஒரு புறத்துத் திருமேனி.

திருக்கரம்

"அயில்வா யரவம் வயின்வயி னணிந்து
மூவிலே வேலும் பூவாய் மழுவுந்
தமருகப் பறையு மினேயன தாங்கிச்
சிறந்துள தொருபாற் றிருக்கரம்; செறிந்த
சூடகம் விளங்கிய வாடகக் கழங்குடன்
ஒமென் பந்து மம்மென் கிள்ளேயுந்
தரித்தே திகழு மொருபாற் றிருக்கரம்.''

—தி. ம. மும்மணிக்கோவை, 1

வலப்பால், கூர்மையான பற்களே வாய்ந்த வாயினேயுடைய பாம்புகளே இடந்தோறும் அணிந்து, சூலப்படையும் மழுவாயுதமும் டமருகப் பறையும் பொருந்தும்படி தாங்கிக்கொண்டு, சிறப்பு வாய்ந்திருப்பது ஒரு புறத்துத் திருக்கரம்.

இடப்பால், நெருங்கிய சூடகம் அணிந்து, பொன்னூலாகிய அம்மனையும் ஓமென்னும் ஓசையுடன் கூடிய பந்தும் அழகிய மென்மையுடைய கிளிப்பிள்ளையுந் தரித்து விளங்கும் ஒரு புறத்துள்ள திருக்கரம்.

திருக்கண்

" இரவியு மெரியும் விரவிய வெம்மையின்
ஒருபால் விளங்குந் திருநெடு நாட்டம்;
நவ்வி மானின் செவ்வித் தாகிப்
பாலிற் கிடந்த நிலம் போன்று
குண்டுநீர்க் குவளையிற் குளிர்ந்து நிறம்பயின்
றெம்மனோர்க் கடுத்த வெம்மைநோய்க் கிரங்கி
உலகேழ் புரக்கு மொருபா னாட்டம்."

—தி. ம. மும்மணிக்கோவை, 1

வலப்பால், சூரியனும் அக்கினியும் கலந்துள்ள வெப்பத்தினோடு ஒரு புறத்து விளங்காநிற்கும் அழகிய நெடிய நேத்திரம்.

இடப்பால், இளமானினது அழகினையுடையதாகிப் பாலிலே கிடந்த நீல மணியினது நிறம்பயின்று, ஆழமாகிய நீரிலுள்ள நீலோற்பலம் போலக் குளிர்ச்சியெய்தி, என்னையொத்தவர்களுக்கு உண்டாகிய மும்மல மயக்கத்திற்கு இரங்கி, ஏழுலகங்களையுங் காத்தருள் புரியும் ஒரு புறத்துத் திருக்கண்.

திருமுடி

" நொச்சிப் பூவும் பச்சை மத்தமுங்
கொன்றைப் போதும் மென்றுணர்த் தும்பையுங்
கங்கை யாறும் பைங்கட் டலையும்
அரவு மதியமும் விரவித் தொடுத்த
சூடா மாலை சூடிப் பீடுகெழு
நெருப்பிற் றிரித்தனைய வுருக்கிளர் சடிலமொடு

நான்முகங் கரந்த பானிற வன்னங்
காணு வண்ணங் கருத்தையுங் கடந்து
சேணிகந் துளதே யொருபாற் றிருமுடி; பேணிய
கடவுட் கற்பின் மடவரன் மகளிர்
கற்பக வனத்துப் பொற்பூ வாங்கிக்
கைவைத்துப் புனைந்த தெய்வ மாலை
நிலக் குழன்மிசை வளைஇ மேனிவந்து
வண்டுந் தேனுங் கிண்டுபு திளைப்பத்
திருவொடும் பொலியு மொருபாற் றிருமுடி.''

—தி. ம. மும்மணிக்கோவை, 1

வலப்பால், நொச்சி மலரும், பசுமையாகிய உன்மத்த மலரும், கொன்றை மலரும், மிருதுவாகிய கொத்துக்களை யுடைய தும்பை மலரும், கங்கா நதியும், பசிய கண்களை யுடைய தலைமாலையும், அரவாபரணமும் விரவித்தொடுத்த மாலையினையணிந்து, அன்னப்புள்ளாகிய பிரமன் தேடிக் காணு விதம் மனத்தையுங்கடந்து ஆகாயத்தைத் தாண்டி உள்ளது, ஒரு புறத்துத் திருமுடி.

இடப்பால், தெய்வத் தன்மை தங்கிய கற்பினையுடைய பெண்கள் கற்பகச் சோலையிலுள்ள அழகிய பூவைக் கொண்டு முறைமையாகப் பொருத்தி அலங்கரித்த மலர் மாலையை நில நிறம் பயின்ற கூந்தலின்மேற் சுற்றி மேலோங்கி வண்டுகளும் தேன் வண்டுகளுங் கிண்டி நுகர அழகுடன் விளங்காநிற்கும் ஒரு புறத்துத்திருமுடி.

திருவுருவக் காட்சி

"இனைய வண்ணத்து நினைவருங் காட்சி
இருவயி னுருவ மொருவயிற் ருகி
வலப்பா னாட்ட மிடப்பா னேக்க
வானுதல் பாகம் நானுதல் செய்ய
வலப்பாற் றிருக்கர மிடப்பால் வனமுலை

தைவந்து வருட மெய்ம்மயிர் பொடித்தாங்
குலக மேழும் பன்முறை யீன்று
மருதிடங் கொண்ட வொருதனிக் கடவுள்"

—தி. ம. மும்மணிக்கோவை, 1

இத்தகைய அழகினையுடைய நினைத்தற்கரிய தோற்றத்தவராகிய இருபுறத்துத் திருவுருக்களும் ஒன்ருக அமையப்பெற்று வலப்பக்கத்துத் திருக்கண் இடப்புறத்துப் பார்த்தலினுல் ஒளிதாங்கிய நெற்றியினையுடைய இறைவியின் பாகமானது நாணுதலைச் செய்ய, வலப்பக்கத்துத் திருக்கரமானது இடப்பக்கத்துள்ள அழகிய ஸ்தனத்தைத் தடவி வருடுதலால் தேகத்தில் மயிர்க்கூச்செறிந்தாற்போல ஏழுலகங்களையும் பல முறை பெற்றுத் திருவிடமருதைத் திருப்பதியாகக்கொண்ட ஒப்பற்ற தனி முதல்வன்

திருவடியை வணங்குதலால் எய்தும் பயன்:

"(ஒருதனிக் கடவுள்)நின்
திருவடி பரவுதும் யாமே நெடுநாள்
இறந்தும் பிறந்து மிளைத்தனம் மறந்துஞ்
சிறைக்கருப் பாசயஞ் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வுபெறற் பொருட்டே."

—தி. ம. மும்மணிக்கோவை, 1

ஒப்பற்ற தனி முதல்வரே, நாங்கள் பல ஜன்மங்களிற் பிறந்தும் இறந்தும் இளைத்தோம். இனி மறந்தாயினும் காவற்கிடங்காகிய கருப்பாசயத்தில் சேர்ந்து மீண்டும் பூமியிற்பிறவாத வாழ்வை அடையும்பொருட்டுத் தேவரீருடைய திருவடியை யாம் வணங்குகின்ருேம்!

10. சர்வம் சத்தி மயம்.

வாக்குமனுதீதகோசரமாகிய ஒரு பரம்பொருள் உண்டென வேதங்கள் கூறுகின்றன. 'அப்பரம்பொருளினை நாம் அறிதல் கூடுமோ?' எனின், அறிதல் கூடாது, உரையினாலும் மனத்தினாலுமளத்தலே அறிதலாதலால், அறிதற்குரியபொருள் உரை மனம் இரண்டினுக்கும் உட்பட்டு நிற்றல் வேண்டும்; ஆதலால், உரை மனமிறந்து நின்ற பரம்பொருளை யாம் எங்ஙனம் அறிதல் கூடும்? அங்ஙனமாயினும், வேதங்கள் அப்பரம்பொருளை 'அநந்த கல்யாண குணமுடையோன்' எனப் போற்றித் துதிக்கின்றன. குணியாகிய பரம்பொருள் உரை மனமிறந்து நின்று எம்மால் அறியப்படாததொன்று ஆயினும், அப்பரம்பொருள் குணங்கள் எம்மால் அறியப்படுந் தகையன. சத்தனாகிய உருத்திரனை நாம் அறியோம்; சத்தியாகிய உருத்திராணியை நாம் அறிய வல்லோம். தினமும் மாலைக்காலச் சந்திப்பொழுதில், பகற்காலம் அகன்று இரவு வந்தெய்தும் எல்லையிலே, வேத நூல் வல்ல அந்தணர்கள் உருத்திராணியைத் துதிப்பார்கள். பகல் முழுதும் தொழில் செய்துகொண்டிருந்த உயிர்க்கூட்டங்கள் தாஞ்செய்த தொழிலினின்று நீங்கியடங்குகின்ற மாலைக்காலம் சர்வசம்ஹார காலத்தை நிகர்த்திருக்கிறதன்றோ? உலகினை மூடுகிற இருட்படலம் சர்வசம்ஹார காலத்தில் சூரியசந்திர நட்சத்திரங்களனைத்தும் ஒழிந்து போகப் பிரபஞ்சமனைத்தினுங் கவிந்து நின்ற பேரிருளை நிகர்க்குமன்றோ? ஞானக்காட்சியினாலே இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலங்களையுமுணர்ந்த முதன்மையோர், சர்வ சம்ஹார காலத்திலே தோற்றுகிற மஹா சத்தியாகிய ஆத்யகாளியைக் கரியநிறத்தோடும், கையிற் கத்தியோடும், பிரமசிரங்களாலமைந்த மாலையோடும், ஸ்மசான பூமியிலே தோற்றுவதாகத் தியானிப்பார்.

ஸ்மசானம் பரிசுத்த பூமி. உயர்ந்தோர், தாழ்ந்தோர், இளையோர், முதியோர், செல்வர், வறிஞர், பண்டிதர், பாமரர் என்றின்னோரன்ன வேறுபாடுகளை அகற்றிவிட்டு அனைவரும் ஒரு தன்மையராய் ஈற்றில் வந்தடைகின்ற இடமிது. மன்னர் மண்டலிகரும் அவரால் அற்ப மென்று கருதப்படுகிற ஏழைகளும் ஈற்றில் ஒரே தன்மை யராகி வெந்து ஒரு பிடிச் சாம்பராய்விடுவார்கள் என் பதைத் தினமுஞ் சிந்தித்து வருவோமாயின், அகங்காரத் துக்கு இடமெங்கே? பிறரைக் கெடுக்கவெண்ணுகிற குரோதத்துக்கு இடமெங்கே? ஆதலால், உட்பகை ஆறையும் கடந்து உண்மையை அடைய விரும்புவோ மாயின், மகா ஸ்மசானத்தை மனத்தினுற் சிந்திப்போ மாக! பிரபஞ்சமனைத்தும் பெரியதொரு ஸ்மசானமாகும். மயக்கத்துக்கு இடமாயிருக்கின்ற கல்வி செல்வம் என் பனவும், இவை காரணமாகத் தோற்றுகிற பல வகை வேறுபாடுகளாலமைந்த பிரபஞ்சமும் ஒழிந்த நிலையில் உண்மை ஞானம் உதிக்குமாதலின், ஞானத்தை விரும்பிய மேலோர் சங்கார கருத்தனுகிற பரம்பொருளோடு அந்நி யோந்நியமாய் நின்ற சங்கார காரணியாகிய உருத்தி ராணியைத் தோத்திரம் பண்ணுவர்.

வைஷ்ணவி

வேதநூல் வல்ல அந்தணாளர்கள் உச்சிப்பொழுதில் நீரிறைத்து மலர் தூவி வைஷ்ணவி சத்தியைத் துதிப் பார்கள், பொருள் இன்பம் என்னும் புருஷார்த்தங்கள் இரண்டினுக்குமுரியவள் வைஷ்ணவி சத்தியேயாதலின். முன்னொரு காலத்திலே, தேவர்களும் அசுரர்களும் திருப் பாற்கடலினைக் கடைய, ஆண்டிருந்து அமுதத்தொடும் எழுந்த பொருளின் செல்வியாகிய மலர்மகள், அரிபரந்தா மனுக்கு மனைவியாயினள்; பின்னுமோரூழியில் வராக

வுருவினைக்கொண்ட மாதவன் மண்மகளைத் தனது மருப்பிலேந்தினன்; அன்றே அவளவனுக்கு மனைவியாயினள். அவளைக் காப்பாற்றி வருவது வாசுதேவனுக்குரிய கடமையாயிற்று; கேவலம் மானிடராகிய ஆடவர் தம் மனைவியருக்குப் பொன்னும் பூணுங்கொடுத்துப் போற்றி வருவாராயின், புருஷோத்தமனாகிய நாராயணன் தனக்குகந்த நாயகியாகிய நிலமகளைப் போற்றாது விட்டுவிடுவானா? ஆதலினால், மாயவன் பலப்பல வடிவந்தாங்கி உலகிலுற்பவித்துத் துட்டநிக்கிரக சிட்டபரிபாலனஞ் செய்து, பூபாரந்தீர்ப்பது இயல்பாயிற்று. இன்னண மேற்பட்ட அவதாரங்களுள் அயோத்தியில் தசரத குமாரனாகிய அவதாரத்திலே திருமால் ஸ்ரீராமசந்திரனென்னும் பெயரினைத் தாங்கத் திருமகள் சீதாபிராட்டியாய்த் திருவவதாரஞ் செய்தாளெனவும், அரவணைச்செல்வன் கோபாலனாய் விளங்க அரிப்பிரியை உருக்குமிணி சத்திய பாமா முதலிய அட்டலக்ஷ்மிகளாய் அவன் மருங்கு பொலிந்தாளெனவும் புராணம் கூறுகின்றது.

பதுமநாபன் காயாம்பூ நிறத்தினன். அவனையகலாது அவனோடு என்றும் உடனின்ற **பதுமை** செந்தாமரைப்பூ நிறத்தினள். திருமகளும் திருவின் கேள்வனும் நித்தியராய் வியாபகராய் அனைத்துயிரினுஞ் செறிந்து நிற்பாரெனப் **பாஞ்சராத்திர ஆகமங்கள்** கூறுகின்றன. திருமகள் திருமாலினுடைய சத்தி; ஆதலினாலே, நிலமகளுங் கோகுலத்தில் கண்ணனுடைய திருநயன நோக்கத்தைக் காதலித்து நின்ற பாவைமாரனைவரும் திருமகளின் அமிசம் ஆவாரென்பது பெறப்படுகின்றது. செல்வம், வனப்பு, வெற்றி என்னுமிவை திருமகளுக்குரிய இலக்கணங்கள். ஆதலினலன்றோ தனலக்ஷ்மி, சௌபாக்கிய லக்ஷ்மி, விஜயலக்ஷ்மி என ஆன்றோர் போற்றினர்? ‘இங்ஙனம் போற்றப்பட்ட சத்திகள் ஒன்றா பலவா?’

என்ருல், தீயென்னும் ஒரு பொருளே, அடுதல் சுடுதல் முதலிய தொழில் வேற்றுமையாற் பலவேறு வகைப்படு மாறுபோல, ஒரு சத்தியே தொழில் வேறுபாட்டாற் பல வாக வழங்கப்படுமென்க.

இனிச் செல்வம், வனப்பு, வெற்றி என்னும் இவற்றை மருவி மணி முடி கவித்து நிலவலயத்தை யாளும் மன்னரைத் தமிழ்ப்புலவர் திருமாலாக மதித்து, 'பூவை நிலை' என்னும் செய்யுட்புனைந்தளிப்பர். இச்செய லின் உட்கிடையைக் கூர்ந்து ஆராயுமிடத்துப் பெரிய தோர் உண்மை புலப்படுகின்றது. 'அஃது எதுவோ?' என்னில், சத்தி எவ்வெவ்விடத்து வெளிப்படுகிருளோ, அவ்வவ்விடத்துச் சத்தனும் வெளிப்படுவானென்பது. அங்ஙனமாதலிற் சத்தியுஞ்சத்தனும் தாதான்மியத்தால் இருதிறப்பட்டு நிற்பரெனினும், உண்மையளவில் ஒருவ ராய் நிற்பாரென்பது முடிகின்றது. இக்குறிப்பினைப் பின்னரும் ஆராய்வாம். 'செல்வம், வனப்பு, வெற்றி என்னும் இவற்றினைப் பெருகப்பெற்ற சிறப்பினேராகிய மன்னர் திருமாலின் அமிசமாகுங்கால், இவ்விலக்கணங் களை அளவாகப் பெற்ற ஏனைய ஆடவரும் திருமாலின் அமிசம் ஆவாரோ?' எனின், ஆவாரென்பது. ஆண் தன்மை படைத்த ஆடவரனைவரும் புருஷோத்தமனுகிய நாராயணனுடைய அமிசமாகக் கருதப்படுவர்; இயற்கை வனப்பு வாய்ந்து தம் நாயகருக்குச் சகல சுப சோபனங் களும் அனைத்துயிர்களினுஞ்செறிந்து நின்று செல்வம், வனப்பு, வெற்றியென்னும் இவற்றையும் உதவிப்பாது காத்து வருகிருரென்பது பெறப்படுகின்றது. புருஷார்த் தங்களுட் பொருள் இன்பம் என்னும் இரண்டினையுந் துய்த்து அவற்றின்மேல் அருவருப்புற்று ஞானத்தைத் தேடும் பெரியாரே சங்கார கருத்தனைத் துதித்தற்கு அருகராவார்; பொருள் இன்பம் என்னும் இவற்றை

விழைந்தோர் இலக்குமி தேவியையும் பதுமநாபனையும் இறைஞ்சுவதே மரபாகும்.

பிராமி

சர்வசங்கார காலத்துக்குப் பின் யாண்டும் இருள் கவிய, நிறைந்த நீரின் மேற்பரப்பிலே ஆலிலையொன்றின் மீது நீலமேனியோன் அறிதுயில் புரிவானெனவும், பின்னர் அவனது நாபியங்கமலத்தினின்று இரணிய கருப்பனாகிய பிரமதேவன் தோற்றுவானெனவும், அப்பிரமதேவன் **பிராமி** என்னுஞ் சத்தியினுடைய உதவியினால் உலகங்களைத் தோற்றுவிப்பானெனவும் புராணம் கூறுகின்றது. ஆகவே, பிராமி, வைஷ்ணவி, உருத்திராணி என்னும் மூவரும் முறையே படைத்தல், காத்தல், அழித்தலென்னும் முத்தொழில் புரிந்து வருகிறாரென்பது பெறப்படுகின்றது. சர்வ சங்கார காலத்து இருள் அகன்று ஒளியும் உயிர்த்தோற்றமும் வெளிப்படுகிற படைத்தற்காலம் குணதிசையிற் பருதியெழுகிற காலைப் பொழுதை நிகர்த்தது. வேத நூல் வல்ல அந்தணர்கள் காலைப்பொழுதில் நீரிறைத்து மலர் தூவிப் பிராமியென்னும் சத்தியை வழிபடுவார்கள். உஷத்காலத் தோத்திரமாக வேதத்திற் காணப்படும் பதிகங்களும் உலக மாதாவாகிய பிராமிக்கு உரியனவே.

பராசத்தி

நவராத்திரி விரதத்தை அநுட்டிப்போராக யாம் வழிபடுகிற தெய்வவுருவத்தின் மாண்பினையாராய்ந்து சிந்திப்போமாயின், அறிதற்கரிய இரகசியங்கள் பலவற்றை எளிதில் அறிந்துகொள்வோம். யாம் இதுகாறும் கூறிய பிராமி, வைஷ்ணவி, உருத்திராணி என்னும் சத்திகளும் பிறவும் அத்தெய்வ உருவத்திற்றோற்றுவன. ஆங்குத் தோற்றும் மூர்த்திகளைத் தனித்தனி

மூர்த்திகளாகக் கருதுவோர் உண்மை தேரார். உரை மனமிறந்து நின்ற ஒரு தனிப்பரம்பொருள் தானே தனது அருளினால் மக்களாகிய நாம் கண்டு தரிசிக்கும்படி வெளிப்படுத்திய அருளுருவம் அத்தெய்வவுருவம் என்பதை உளங்கொண்டு நாம் அத்தெய்வவுருவத்தைத் தியானித்தல் வேண்டும். அத்தெய்வ உருவத்தின் நடுவிற் பராசத்தியாகிய எம்மன்னை தோற்றுவாள். அவள் ஆரோகணித்திருக்கின்ற சிங்கமானது, வேத முதலிய அனைத்துக் கலைஞானங்களும் ஒடுங்குகின்ற வாக்கு ரூபமாகும். **மகிஷாசுரன்** அஞ்ஞான ரூபம்; அவனையழிக்கின்ற எம்மன்னையே ஞானரூபியெனத் தேவரும் முனிவருந் துதித்தேத்துவர். நடுவில் நின்ற திருவுருவத்தினிருபாலும் கலைமகளுந் திருமகளுந் தோற்றுவர். இவ்விருவரையும் பராசத்தியினுடைய புத்திரிகளென நாம் நமது மக்கட்டன்மைக்கு இயையக் கூறுவோமெனினும், உண்மையில் இருவரும் பராசத்தியினின்றும் வேறல்லர். கல்விக்கிறைவி பராசத்தியினோர் அமிசம்; செல்வத்துக்கிறைவி மற்றோர் அமிசம். மேலும், ஒருபால் ஞான கணேசனும், மற்றொருபால் அமரர் சேனாதிபதியாகிய குமரநாயகனுந் தோற்றுவர். கலைமகளுக்குச் சித்தி, புத்தி என்னும் இரு புத்திரிகளுளரென்றும், அவ்விருவரையுங் கணேசமூர்த்தி மணமுடித்தாரென்றும் **பார்க்கவ புராணம்** கூறுகின்ற இயல்பை நோக்குமிடத்துக் கலைமகள் கல்விக்கிறைவியென்றும், அக்கல்வியினாற் பெறப்படுகின்ற அறிவு(புத்தி), அநுகூலம்(சித்தி) என்னுமிவற்றுக்குத் தலைவராய் விளங்கும் பதியினைக் கணபதியென வேதம் வழுத்திற்றென்றும் அறிவோம். இனிக் கலையனைத்துஞ் சார்ந்து நின்ற சத்தனை வேதம் **இரணிய கருப்ப**னெனத் துதிக்கும். இங்ஙனந் துதிக்கப்படுகின்ற இரணிய கருப்பனும்(பிரமன்), கலைமகளும்(பிராமி), சித்தி

புத்தியும், ஞான கணேசனும் பராசத்தியினது பரஞான ரூபத்துக்கு வாயிலாக நின்ற அபரஞான அமிசமாவாரே யன்றி வேருகாரென்பது பெறப்படுகின்றது. தெய்வயானை யம்மையார் திருமாலுக்குப் புதல்வியராயதோடு தேவராஜ ஞகிய இந்திரனுக்கும் புதல்வியாராகிப் பொருளுக்குத் தலைவியாராய் விளங்குவார். அன்பினைந்திணைப்பால தாகிய இன்பத்துக்குரிய சத்தி வள்ளி நாயகியாரென்பது வெளிப்படை. அங்ஙனமாகவே, பொருள், இன்பம் என் னும் இரண்டினையும் திருமாலுக்குந் திருமகளுக்கும் புதல்வியரெனக் கொள்ளுவதும் இவ்விரண்டினுக்குந் தலைவராக விளங்கிய வீரவேற்கரத்தரைத் திருமால் மருக ரெனக்கொண்டு துதிப்பதும் மனிதராகிய நமக்கு இயல் பேயாம். புராணக் கதையை ஒருபால் வைத்துவிட்டுத் தத்துவ உண்மையை நாடுவோமாயின், திருமால், திரு மகள், இந்திரன், குமரநாயகன், வள்ளி நாயகியார், தெய்வ யானையம்மையார் என்னும் அனைவரும் பராசத்தியி னுடைய அர்த்த காம (பொருளின்ப) ரூபத்தின் அமிச மாவாரேயன்றி வேருகாரென்பது பெறப்படுகின்றது.

பரஞானம் மோக்ஷ சாஸ்திரப் பொருளாகும்; அபர ஞானம் அதற்கு வாயிலாக நின்ற தர்ம சாஸ்திரங்களின் பொருளாகும். இவ்வாறு ஆராயுமிடத்து நவராத்திரிக் காலத்தில் அம்மன் கொலுவிருக்கையென நாம் பூசிக் கின்ற திருவுருவம் ஒன்ருகி இச்சை, ஞானம், கிரியை என்னும் மூன்றினையும் தன்னுட்பொருந்தியதாய், அறம், பொருள், இன்பத்தையும் அவற்றின் நீங்கிய வீடு பேற் றினையும் அளிக்குமியல்பினதாய், அஞ்ஞானத்தையகற்றி ஞானத்தைத் தருகின்ற பரவொளியாய், வாக்கு மனோதீத கோசரமாகிய பரம்பொருளை யாம் சிந்தித்துத் துதிப்பதற் கியைந்த திருவுருவமாய் விளங்குவது. புருஷார்த்தங் களனைத்தினையும் வேண்டி நின்ருேர் மங்கள ரூபியாகிய

இறைவியைத் துதிப்பாராதலினால், யாமும் எம்மா லியன்ற தமிழ் மாலை புனைந்து அவளது மெல்லென்ற நீர்மையவாய சிற்றடியை உள்ளத்தினுஞ் சிரத்திலு மிருத்தித் துதிப்போமாக:

ஆயிரங் கதிரவ ரொருங்குதித் தனரெனப்
பாயிருள் சீக்கும் படிவமப் படிவத்து
இலங்கொளி நிறைமதி யேய்ப்பத் துலங்கும்
நுதற்கட் டிட்டிய நுண்சுடர்ச் சுட்டியொடு
கருமுகிற் கூந்த லிடைமிளிர் திருமுகம்
திருமுகத் தொளிர்வது சிறுபுன் முறுவல்;

அதுவே,

அரியே றிவர்ந்து வாட்படை யேந்தி
எருமைப் பேரோ னுரனழி திருநாட்
சுரகுல முதல்வர்க் குவகையும் பரவா
அவுண மாக்கட் கச்சமுங் காட்டிய
நிலைய தாதலி னீள்கடல் வரைப்பினில்
அருள்பெறு வாருக் கருளுங் காட்டும்;
மருள்பெறு மவர்க்கு மருட்சியுங் காட்டும்;

அவ்வழி,

திருவிழை மாந்தர் திருமகட் கண்டனர்;
கலைவிழை மாந்தர் கலைமகட் கண்டனர்;
அறநெறிச் செல்வோ ரறத்துமுதல் கண்டனர்;
தவநெறிச் செல்வோர் தவத்துமுதல் கண்டனர்;
சுற்றமுந் தொடர்பு நீங்கிய கொள்கைப்
பற்றறு மாண்பினர் பரவெளி கண்டனர்;
யாயெனக் கண்டனம் யாமு மாதலின்
வேத முதல்வியை மாதவப் பயனை
மலைக்கிறை பயந்த மழலையங் குழவியை
நீல மேனி நெடியோன் றங்கையை

ஆல முண்டவற் கரும்பெருந் துணைவியை
ஓமெனு முருவனை யுவந்தரு ளனையைச்
சேயைப் பயந்த செல்வியை யாய்தமிழ்
வளம்பொலி தருகென வழுத்தி
உளங்கொண் டேத்துக முண்மைதேர் பொருட்டே.

11. வினைப் பயன்

சாந்தம், பொறுமை, தவம், விரதம் என்னும் நற் குணங்களாற் சிறந்து விளங்கிய **கௌதமி** என்னும் அம்மை யொருத்தியிருந்தாள். அவள் செல்வப்புதல்வன் விஷப் பாம்பினாற் கடியுண்டு உயிர் துறக்கும்படி நேரிட்டது. தன் மகன் இறந்து போயினமைக்காக வருந்தித் துன்புற்றுக் கொண்டிருக்கும் கௌதமியின் முன்னிலையில் **அர்ச்சுனகன்** என்னும் வேடுவன் ஒருவன் வந்து, "அம்மா, சிறுவ னுடைய உயிரை வௌவிய துஷ்டப் பாம்பைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வந்திருக்கின்றேன். இதனை அம்பினாற் குத்திக் கொன்றுவிடவா, அன்றேல் நெருப்பிலிட்டுக் கொளுத்திவிடவா? சொல்லுவீராக. குழந்தையைக் கடித்த இத்துஷ்டப் பாம்பைச் சும்மா விடலாகாது," என்றான்.

கௌதமி: அப்பா, அர்ச்சுனகா, பாம்பைத் துன்புறுத் தாது விட்டுவிடுவாயாக. இதனைக் கொன்றால், இறந்த என்மகன் உயிர்பெற்றெழுந்துவிடுவானா? இப்பிராணியைக் கொல்வதனாலாகிய பாவம் உன்னைத் தொடருமன்றோ? 'புண்ணியமென்னும் நல்ல சரக்கையேற்றிய கப்பல் சமுசார சாகரத் தைக் கடந்து செல்லும். பாவக்கறை பற்றிய உயிர் நீரில் விழுந்த அம்புபோல அதோகதியாய்விடும்,' எனப் பெரியோர் கூறுகின்றனரே!

வேடன் : அம்மா, நன்மை தீமையையறிந்த பெரியோர் மனச் சாந்தத்தை விரும்பி எல்லாம் காலத்தினால் விளைவது என மனக் கலக்கமடையாது அசைவற்றிருப்பர். துன்பமுற்றோர், துன்பத்தை நீக்கும் வழியைத் தேடுவர். பழிக்குப் பழி வாங்குவதைப் போல இன்பமான தொழில் பிறிதொன்றிருக்கிறதோ? ஆதலினாலே, இந்தப் பாம்பினைக் கொல்லும்படி கட்டளையிட்டு உமது துயரத்தை நீக்கிக்கொள்ளுவீராக.

கௌதமி : மகனே, நான் பிராமண குலத்திற் பிறந்தவள். பழிக்குப்பழி வாங்குந்தொழில் எங்கள் குலத்துக்கு உரியதன்று. தீமை செய்வோர்க்கும் நன்மை செய்துவிடுவது எங்கள் குலத்துக்குரிய மரபு. என் செல்வப் புதல்வன் பிரிந்து போயினதற்காகச் சிறிது துன்புற்றேன். இப்பொழுது என் மனம் தேறிவிட்டது. ஊழின் வலியினால் என் பிள்ளை இறந்து போனான். இந்தப் பாம்பின்மேற் சிறிதுங் குற்றமில்லை; இதனைப் போக விடுவாயாக.

வேடன் : அம்மா, சத்துராதியைக் கொல்லுகிறவன் புண்ணியத்தை அடைகிறான். யாகஞ் செய்பவனுக்கும் யாகத்திற் கொல்லப்படுகிற பிராணிக்கும் ஒருங்கே நற்கதி கிடைக்கிறது. ஆதலினாலே, இந்தப் பாம்பினைக் கொல்வதனால் இதற்கும் நன்மையுண்டாகுமென்று நான் நினைக்கிறேன்.

கௌதமி : அப்பா, அர்ச்சுனகா, பலசாலியானவன் தன் கையிலகப்பட்ட சத்துராதியை விடுதலை செய்து விடுகிறான். அது போல இப்பாம்பினை விடுவிப்பாயாயின், நீ புண்ணியத்தையும் புகழையும் அடைவாயன்றோ?

வேடன் : அம்மா, அநேக பிராணிகளை நாசமாக்கிவிடுகிற இத்துஷ்டப் பாம்பைக் கொன்றுவிடுவதனுல் எத்தனையோ சீவப் பிராணிகளுக்கு நன்மை செய்தவனுவேனல்லவா? ஆதலால், இதைக் கொல்வதே நலம் என்று எனக்குத் தோன்றுகிறது.

கௌதமி : இப்பாம்பை உற்பத்தியாக்கினவன் நீயானுல், இதைக் கொல்லுகிற உரிமையும் உனக்குண்டு.

வேடன் : அப்படியானுல், குழந்தையைக் கொல்லுகிற உரிமை பாம்புக்கு உளதாமோ?

கௌதமி : என் குழந்தையினுடைய மரணம் ஊழ்வினையின் பயனுயது; இறைவனுடைய சித்தப்படி நடந்தேறியது; பாம்பு ஒரு கருவியாய் மாத்திரம் அமைந்தது. குழந்தையினுடைய மரணத்துக்குப் பாம்பே காரணமென்று வைத்துக்கொள்வோமாயினும், பாம்பைக் கொல்வது முறையாகாது. பாம்பு அறியாமையினுல் ஒருயிரைக் கொன்றது குற்றமாயின், அறிவுடையோமாகிய நாம் பூரண அறிவோடு ஒருயிரைக் கொல்வது பெருந்தவறுகுமல்லவா?

வேடன் : விருத்திரனைக் கொன்றமையினுல் இந்திரன் நன்மையடைந்தான்; தக்ஷயாகத்தை அழித்தமையால் மகாதேவருக்குத் தீமை வந்தெய்தியதில்லை; ஆங்ஙனமே இப்பாம்பைக் கொல்வதனுல் நன்மையே உண்டாகுமென்பது என் கருத்து.

(இவ்வாறு பலப்பல நியாயங்களைக் காட்டி வேடுவன் பரிந்து பேசியும் பாம்பைக் கொல்வதற்குக் கௌதமி சம்மதப்படவில்லை. இதுகாறும் துன்பத்தினுல் வருந்தி ஒன்றும் பேசாதிருந்த பாம்பு மானிட

மொழியினால் பின் வருமாறு சொல்லத் தொடங்கியது.)

பாம்பு : மூடனாகிய அர்ச்சுனகா, வீணில் என்னை எதற்காகத் திட்டுகின்றாய்? எய்தவனிருக்க அம்பை நோகலாமா? என்னுடைய இஷ்டத்தின்பேரில் நான் இக்குழந்தையைத் துன்புறுத்தவில்லை. இச் செயலைச் செய்யும்படி மிருத்தியுதேவதை என்னை ஏவினமையால், நான் இங்ஙனம் செய்தேன். குற்றம் மிருத்தியு தேவதையைச் சாருமேயன்றி, என்னைச்சாராது.

வேடன் : பிறன் ஒருவனுடைய ஏவலின் வண்ணம் நீ நடந்தது உண்மையாயினும், இச்செயலினால் விளைந்த குற்றம் உன்னையுஞ்சாரும். குடத்தை அமைப்பதற்குக் குயவனைப் போலவே தண்ட சக்கரங்களும் காரணமாவன அல்லவா?

பாம்பு : அங்ஙனமாயினும், பிழை குயவனைச் சாருவதே யன்றித் தண்டசக்கரங்களைச் சாருவது எவ்விடத்துமில்லை.

வேடன் : மூடப்பாம்பே, அதிகப் பிரசங்கத்தினால் ஆவதென்ன? குழந்தையைக் கொன்ற உன்னைக் கொல்வதே தகுதி.

(இத்தருணத்தில் மிருத்தியு தேவதை தோன்றிப் பாம்பை நோக்கிப் பின் வருமாறு கூறுகின்றது.)

மிருத்தியு தேவதை : பாம்பே, காலனால் ஏவப்பட்டு நானுன்னைக் குழந்தையைக் கொல்லும்படி அனுப்பினேன். உன்மேல் ஒரு குற்றமுமில்லை; என் மேலும் குற்றமில்லை. காற்றினால் இங்கும் அங்கும் உந்தப்படுகிற முகிற்கூட்டங்கள்போல நாமிருவரும் கால தேவதையின் செயலினால் உழன்று

திரிகிறோம். பிரபஞ்சம் முழுவதும் கால தேவதையின் முயற்சியினால் காரியப்படுகின்றது. பாம்பே, என்மேற் குற்றங் கூறுவாயாயின், உன்மேலுங் குற்றஞ்சாரும்; உண்மையில் நம்மிருவர் மேலுங் குற்றம் இல்லவேயில்லை. சூரிய சந்திரர், காற்று, மழை ஆகிய அனைத்தும் கால தேவதையினது ஆட்சிக்குட்பட்டவை.

(இத்தருணத்தில் கால தேவதை தோன்றி அனைவரையும் நோக்கிச் சொல்கிறது.)

கால தேவதை: எதற்காக வாக்குவாதம் செய்கிறீர்கள்? மிருத்தியு தேவதையும் பாம்பும் நானும் குற்றவாளிகளல்ல. வினையின் விளைவாக எழுந்த தேகம் வினைப்பயன் முடிவில் விழுவதும் இயல்பாயிற்று. இக்குழந்தையினது பூர்வ வினைப்பயனின் வண்ணம் இறக்கும்படி நேரிட்டது. இவ்வுண்மையை ஆராய்ந்தறியாது நிரபராதிகளாகிய எங்கள்மீது குற்றங்கூறுவது சரியன்று.

(கால தேவதை இவ்வாறு சொன்னதைக் கேட்டுக் கௌதமி சோகம் நீங்கினாள்; ஏனையோருந் தத்தமிடஞ்சென்றனர்.)

முற்றும்.

எமது சிறந்த வெளியீடுகள்

அருட் திரு குன்றக்குடி அடிகளார்

சமய மறுமலர்ச்சி	1	4	0

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

சக்ரவர்த்தித் திருமகன்	4	0	0.

ப. ராமஸ்வாமி

போதிமாதவன்	5	0	0
தம்மபதம்	1	4	0

மயிலை. சீனி. வேங்கடசாமி

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்	3	8	0

ராவ்சாகிப் கு. கோதண்டபாணிப் பிள்ளை

முதல் குறள் உவமை	3	8	0

கி. ஆ. பெ. விசுவநாதம்

வள்ளுவரும் குறளும்	1	0	0
திருக்குறள் புதைபொருள்	0	8	0

"மாசி"

நாரணன் விளையாட்டு - 3 பாகங்கள்	4	8	0

★

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை 1.

Jacket printed at Shanti Press, Madras-1